உ

கடவுடுணை.

# வயித்தியாநுகூலஜீவரட்சணி.

## முதற்பாகம்.

இவை

மதுரை, புதுவை, சென்னை இச்சங்கங்களில்

தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

(களத்தூர்) வேதகிரிமுதலியார் பௌத்திரன்

நேட்டிவ்டாக்டர்

**அங்கமுத்து முதலியாரால்**

இயற்றப்பட்டு

ம-ா-ா-ஸ்ரீ, தக்கோலம்

**இராமசாமிநாயுடு அவர்களால்**

தமது

ஸ்ரீ லட்சுமி நாராயண விலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

1896

REGISTERED COPY RIGHT.

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

எம். வேலாயுதம்,
சித்த மருத்துவர்,
128, நாச்சிமுத்துக்கவுண்டர் வீதி,
பொள்ளாச்சி.



## ஆக்கியோன் கருத்து

சிந்துசூழுலகின்கண் சிறப்புற்றோங்கும் சித்தெல்லாம்வல்ல சிவகாருணியப் போகமுனி, கும்பமுனி, மச்சமுனி, யூகிமுனி, புலிப்பாணி, இடைக்காடர், நந்திதேவர், திருமூலதேவர், காலாங்கிநாதர், சண்டிகேசர், வரரிஷி, ரோமரிஷி, புண்ணாக்கீசர், தேரையர், சட்டநாதர், கருவூரார், தன்வந்தரி, கொங்கணவர் முதலிய பதினெண்மர்கள் திருவாய்மலர்ந்தருளிய ஆயுர்வேதமென்னும் பற்பல வயித்திய சாத்திரங்களின் சிற்சிலசெய்யுட்களை எம்மாற் கூடியவரை ஆராய்ச்சித்துசுருதி, யுக்தி, அநுபவங்களுக்குப் பொருந்திய அட்டவிதப்பரிட்சைகள் நீர்ச்சீலை நெய்ச்சீலை உறுப்பு நாடிதொங்கல் சூத்திரங்கள் தீபக்குறி முதலியன பாக்களாகவும் முறைகள் பிறழாத அவுடத பாகங்களை வசனகாவியமாகவும் வரைந்து வயித்தியாநுகூல ஜீவரக்ஷணியென்னு மியற்பெயரமைத்து மூன்றுபாகங்களாக வகுத்து இம்முதற்பாகத்தை அச்சிடத் துணிந்தமையால் எழுத்துப் பிழை, சொற்பிழை, யாப்புப்பிழை, வசனகாவியநடைப்பிழைகளிருப்பினுமதைக்கண்ணுறாது விஷயங்களொவ்வொன்றும் நன்குகவனிப்பீர்களெனப் போற்றுகின்றனன். அன்றி இந்நூலிற் கூறியவைகளி லியாதேனு மவலமாகில் வரைந்ததைப்போன்று செய்வித்தும் அவ்வவர்கள் வினாவிற்கும் விடையளிப்போமாக.

இதன்விலை ரூபா 0—8—0.
வி. பி. சார்ஜ் 0—2—0

இங்ஙனம்
அங்கமுத்துமுதலியார்,
நேட்டிவ்டாக்டர்.
103, அவதானம் பாப்பையர் வீதி,
சூளை, சென்னை.

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

உ

கடவுடுணை.

## முக்கிய கவனிப்பு.

குறள்.

உற்றானளவும்பிணியளவுங்காலமுங்
கற்றான்கருதிச்செயல்

நண்பர்களே ?

நமது இந்து வயித்திய பாகங்களைப்போ லொன்றுளவோ ? அக்கொற்ற சிறந்தவயித்திய விஷயங்களி னிரகசியத்தை தெளிந்த மகான்களை யடுத்து சுருதி, யுக்தி, அனுபவங்ளுக்குப் பொருந்திய அவுடதங்களின் சுத்திகள், சத்துக்கள், சத்துருமித்துருக்கள்' செய்பாகங்கள், கையாடுந்திரங்கள், தேகவிலக்கணங்கள், அட்டவிதக் குறிப்புகள், நோயினளவுகள், தமது காலங்கள் முதலியவைகளை ஐயமறத்தெளிந்து இங்கிலீஷ் வயித்தியர்களைப்போல் நமது இந்து வயித்திய நேயர்கள் ஒருங்குகூடி முயற்சிக்குகொண்டு வராமையால் மகாபெருமை வாய்ந்த பதினெண்மர்கள் கூறிய நூல்களும் பொய்த்து இந்துவயித்தியம் துய்த்து இங்கிலீஷ் வயித்தியம் மெய்த்து காண்பிக்கப்பட்டது,

அந்தோ ? அத்தகையசிறந்த இந்துவயித்தியத்திற்கு தாட்சி நேராது ஒருங்கு சேர்ந்து நூலாராய்ச்சித்து சுருதி, யுக்தி, அனுபவங்களுக்குப் பொருந்தச்செய்து சாதிப்பது நமது இந்து வயித்திய நேயர்களின் கொள்கையெனக் கோருகின்றனன்.

அங்கமுத்து முதலியார்,
நேட்டிவ்டாக்ட்டர்.

உ

கடவுடுணை

## அட்டவணை.


| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| அவுடதங்களின்வயது | 13 | கற்பூரச்சூரணம் | 14 |
| அசுவகெந்திசூரணம் | 14 | கற்கடகசிருங்கிசூரணம் | 15 |
| அகத்தியர்குழம்பு | 25 | கணசஞ்சீவி | 15 |
| அஞ்சனக்கலிக்கம் | 29 | கனல்மாந்தவில்வாதி குளி | 16 |
| அவுரிஎண்ணெய் | 35 | கஸ்தூரிகுளிகை | 18 |
| அண்டத்தயிலம் | 45 | கட்டுவாதிகுளிகை | 18 |
| அரக்குசந்தனாதித்தயிலம் | 47 | கரப்பானுக்குபுங்கெண்ணெ | 37 |
| அமிர்தசஞ்சீவித்தயிலம் | 48 | கள்ளிக்காக்கைநெய் | 40 |
| அயச்சிந்தூரம் | 68 | கக்குவானுக்குலேகியம் | 55 |
| அப்பிரேகச்சிந்தூரம் | 71 | கடுக்காய்லேகியம் | 61 |
| அழலைக்கணம், மூர்ச்சைக்கு | 74 | கருவங்கபற்பம் | 66 |
| அள்ளுமாந்தத்திற்கு | 76 | கனல்சுரம்உட்சூட்டுக்கு | 75 |
| ஆமபேதி, ஊஷ்ணபேதிக்கு | 77 | கண்மங்கல்நீர்வடிதலுக்கு | 78 |
| இந்துப்புச்சூரணம் | 14 | காயமாத்திரை | 19 |
| இலிங்கக்குழம்பு | 26 | காதுநோய்த்தயிலம் | 46 |
| இரணங்களுக்குப்புகை | 31 | காதுசெவிட்டுக்குதயிலம் | 47 |
| இஞ்சிரசாயனம் | 43 | காமரூபிலேகியம் | 59 |
| இலைத்தயிலம் | 49 | காதுரெணத்திற்கு | 79 |
| இரசபதங்கபற்பம் | 63 | கிராணிக்கழிச்சலுக்கு | 77 |
| இலிங்கச்சிந்தூரம் | 70 | குங்குமப்பூகுளிகை | 18 |
| இருமல், கபம்இரைப்புக்கு | 76 | குங்கிலியக்களிம்பு | 24 |
| இளம்பிள்ளைவாய்வுக்கு | 76 | குளிர்ச்சிஎண்ணெய் | 38 |
| இரைச்சல்பேதிக்கு | 77 | குண்டலாதிலேகியம் | 61 |
| ஈளைக்குஇலிங்கமாத்திரை | 16 | கெவுரிமாத்திரை | 15 |
| ஈயவெள்ளைக்களிம்பு | 25 | கெந்தகக்களிம்பு | 24 |
| உருப்புபரிட்சை | 8 | கெணத்தெண்ணெய் | 37 |
| உலகநிரஞ்சனக்குழம்பு | 28 | கெணமாந்தத்திற்கு | 38 |
| உப்புபற்பம் | 63 | கெணமாந்தம், வாந்திக்கு | 73 |
| ஊதுகணம்ஆமகணத்துக்கு | 75 | கொடிவேலித்தயிலம் | 48 |
| ஊஷ்ணபேதிக்கு | 77 | கொடிமாதுளைலேகியம் | 55 |
| ஒண்டிதலைவலிக்குநசியம் | 30 | கொறுக்குக்கு | 79 |
| கருணைக்கிழங்குசூரணம் | 13 | கோரோசனைக்குளிகை | 18 |


FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| கோரோசனைஎண்ணெய் | 35 | தேகபரிட்சை | 6 |
| கோழைக்கட்டுசெவ்வாப்பு | 76 | தேகத்தைதொட்டுபார்க்கும் | 6 |
| சகலபிரமேகசேகரி | 20 | நசியம் | 30 |
| சம்பிரக்குழம்பு | 25 | நசியம் | 31 |
| சம்பிராஞ்சனம் | 29 | நாடிகளுற்பவம் | 2 |
| சன்னிதலைவலிக்குபுகை | 30 | நாடிகளின்மாத்திரை | 2 |
| சகலமேகசம்மாரிஎண்ணெய் | 33 | நாடிகள்பேசுங்காலம் | 3 |
| சம்பிரஎண்ணெய் | 34 | நாப்பரிட்சை | 5 |
| சகல்கணமாந்தஎண்ணெய் | 35 | நாபிமாத்திரை | 20 |
| சதாவேரிநெய் | 39 | நாடிகள் தொங்கல் | 10 |
| சம்பிரரசாயனம் | 44 | நாகபற்பம் | 66 |
| சகலமேகநாதித்தயிலம் | 52 | நிலவாகைச்சூரண | 14 |
| சலதோஷம்வயறுப்பிசத்து | 75 | நீர்ச்சீலைபரிட்சை | 6 |
| சாம்பிராணிப்பூதயிலம் | 45 | நீரிழிவுக்கு காநதாதிகுளி | 17 |
| சாம்பிராணித்தயிலம் | 51 | நீலகண்டவாலைரசமெழுகு | 23 |
| சாந்துசந்ரோதயக்குளிகை | 73 | நீரடிமுத்துநெய் | 40 |
| சாம்பிராணிப்பூமாத்திரை | 73 | நெய்ச்சீலைபரிட்சை | 8 |
| சிறுநீர்பரிட்சை | 3 | நெற்குன்றித்தயிலம் | 46 |
| சிவனார்வேம்புதயிலம் | 51 | நேத்திராஞ்சனம் | 28 |
| சிஞ்சிலாதிலேகியம் | 57 | பஞ்சரசமெழுகு | 22 |
| சுக்குச்சூரணம் | 14 | பரங்கிசாம்பிராணிகளிம்பு | 25 |
| சுரக்கோடரி | 15 | பல்லாதி எண்ணெய் | 36 |
| சுரக்குளிகை | 16 | பற்பக்கூட்டுகள் | 67-68 |
| சுரம்,கணம், நாவரட்சி | 74 | பஞ்சலோகச்சிந்தூரம் | 70 |
| சூதகவாய்வுரசாயனம் | 19 | பாசுபதாஞ்சனம் | 28 |
| சூதத்தயிலம் | 53 | பாலசஞ்சீவிமாத்திரை | 73 |
| சூதச்சிந்தூரம் | 72 | பீனிசத்துக்குதயிலம் | 45 |
| சூதமெழுகு | 22 | பீஜவீக்கத்திற்கு | 77 |
| சோகைபாண்டுக்கு | 80 | பீனிசத்திற்குநசியம் | 30 |
| தங்கபற்பம் | 65 | புடைகளுக்கு எண்ணெய் | 36 |
| தந்தரோகத்திற்கு | 79 | புருடநாடிநடை | 2 |
| தாம்பரச்சிந்தூரம் | 69 | புடைகளுக்கு | 77 |
| தாதுவிர்த்திக்கு | 79 | பூரமெழுகு | 21 |
| திப்பிலாதிகுளிகை | 17 | பூரக்களிம்பு | 24 |
| திராதவெள்ளைக்குநெய் | 42 | பூரபலாதி | 23 |
| திபக்குறி | 11 | பூரக்கிலேதம் | 24 |
| தும்பைத்தயிலம் | 50 | பூவரசங்காய்எண்ணெய் | 32 |


FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010




| பெசர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| பூராணதிலேகியம் | 54 | ரவியொளிச்சூரணம் | 13 |
| பெருங்குழம்பு | 26 | ரசக்களிம்பு | 24 |
| பேய்க்குமட்டிக்குழம்பு | 27 | வங்கக்களிம்பு | 25 |
| மலப்பரிட்சை | 5 | வவ்வால்நெய் | 41 |
| மனோசிலைகுளிகை | 19 | வயறுப்பிசம்,வீக்கத்துக்கு | 75 |
| மகாஜன்னிக்குகாலகாலம் | 29 | வார்த்தைபரிட்சை | 6 |
| மரிசாதித்தயிலம் | 46 | வாய்வுக்குபூரமாத்திரை | 19 |
| மதுஉஷ்ணரசாயனம் | 43 | விப்புருதிமெழுகு | 21 |
| மகாகொடிப்பைத்தயிலம் | 49 | வில்வாதிரசாயனம் | 44 |
| மனோரஞ்சிதகூழ்ப்பாண் | 53 | விழித்தயிலம் | 52 |
| மகாவில்வாதிலேகியம் | 58 | வில்வாதித்தயிலம் | 53 |
| மன்மதலேகியம் | 61 | விக்கல்வாய்நீரொழுகலுக்கு | 75 |
| மலச்சிக்கல்,அரோசகம் | 76 | விழிப்பரிட்சை | 5 |
| மலபந்தத்துக்கு | 78 | வீரமெழுகு | 22 |
| மாவிலிங்கத்தயிலம் | 50 | வீரச்சிந்தூரம் | 72 |
| மூால்தேவிபற்பம் | 62 | வெள்ளிபற்பம் | 65 |
| மாந்தம் ஈளைக்கு | 74 | வெள்வங்கபற்பம் | 65 |
| மிளகுவிரேசனம் | 28 | வெள்ளோக்காளம்சத்திக்கு | 78 |
| முலைப்பால் எண்ணெய் | 34 | வேறுசுரக்கோடரி | 20 |
| முசறுமுட்டை எண்ணெய் | 36 | வேறுபூரமெழுகு | 21 |
| முசல்நெய் | 39 | வேறுவீரமெழுகு | 23 |
| முருங்கைநெய் | 40 | வேறுவாலைரசமெழுகு | 23 |
| முருங்கைலேகியம் | 55 | வேறுஇலிங்கக்குழம்பு | 26 |
| முருங்கைப்பூலேகியம் | 58 | வேறுகலிக்கம் | 2[illegible] |
| முக்குமாந்தம்,அள்ளுமாந்தம் | 74 | வேறுநசியம் | 30 |
| மெழுகுதயிலம் | 51 | வேறுநசியம் | 30 |
| மேகநிவாரணமெழுகு | 21 | வேறுஇரணங்களுக்குபுகை | 32 |
| மேகச்சூட்டுக்குபொரி | 35 | வேறுகுளிர்ச்சியெண்ணெய் | 38 |
| மேகம்21க்குநெய் | 41 | வேறுசிவனார்தயிலம் | 52 |
| மேற்பூசுத்தயிலம் | 50 | வேறுதாளகபற்பம் | 63 |
| ஷை வேறு | 50 | வேறுவெள்வங்கபற்பம் | 66 |
| ஷை வேறு | 50 | ஸ்திரீநாடிநடை | 2 |


## அவுஷதங்களின் அட்டவணை

முற்றிற்று.

## விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டுபவர்கள் சென்னைசூளை விஜயவீக்கிநேசுவரர்கோயில் வீதி 71-வது நெ. ஸ்ரீலட்சுமிநாராயண விலாச அச்சுக்கூடத் தலைவர் ம-ா-ா-ஸ்ரீ த. இராமசாமிநாயுடு அவர்களிடம் பெற்றுக்கொள்ளவும்.

இதன்விலை அணா 8

அன்றி அடியிற்கூறிய புத்தகங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கபீர்தாஸ்கீர்த்தனை | அணா | 1 |
| விஷ்ணுநாமாவளி | | 1 |

உ

அம்பாடுணை

# வயித்தியாநுகூல ஜீவரட்சணி.

### பொருள்வணக்கம்.

சோதியாய்ச்சுயம்புவாகி சொல்லருவுருவதாகி
ஆதியாயாண்பெண்ணாகி யரனரியயனுமாகி
மாதிரந்தனிலமர்ந்து மதிரவிதானுமாய்நின்ற
வாதிலாப்பொருளையுன்னி வணக்கமாய்ச்சிந்தைசெய்வாம்.

### பதினெண்சித்தர்கள் துதி.

அகத்தீசர் சட்டரிடைக் காடர்சிவ வாக்கியர்தன் வந்திரி யூகி
பகவனிகர் மச்சமுனி கோரக்கர் கொங்கணவர் புண்ணாக்கீசர்
சகமூலர் நந்திமுனி தேரையர் வாரிவிபுஞ் சண்டிகேசர் (வாம்
தகைமையுள போகமுனி காலாங்கி புஜண்டர்பதஞ் சாற்றல்செய்

### அவையடக்கம்.

அவனியிற்பதினெண்பேர்களறைந்ததோர்சாத்திரத்தைக்
கவனமாய்த்திரட்டியொன்றாய்க் கழறியவின்னூறன்னைத்
தவமுளோர்க்கருத்தென்றெண்ணி சங்கைகளறிந்துகொள்ள
புவிதனில்வாணர்பாதம போற்றியென்கருத்துள்வைப்பாம்

### நூல் வரலாறு.

சித்தர்கள்சாத்திரத்தை தெளிவுறச்சிலதாராய்ந்து
வித்தகநாடிநேர்மை விளங்கிபரிட்சையட்டம்
சித்திரீச்சீலைசூத்திரம் சிறந்தநெய்ச்சீலையோடு
இத்தனைவயித்தியற்கா யியற்றியவிந்நூலே 1

தன்மையாமுறைப்புசூத்திரம் கைகமைசேர்நாடிதொங்கல்
திண்மையாம்நாடிகாலந் தீங்கிலாமருந்தினுள்
வண்மைசூரணங்கள்மாத்திரை மாமெழுக்கியாழம்செய்கள்
கண்ணியநீற்றினங்கள் கருதுசிந்தூரமாமே 2

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

ஆக்கிரணம்லேகியங்கள் அமரொண்ணெய்கிருதப்போக்கு
தாக்குளத்தயிலமார்க்கம சார்ந்தஜெயநீர்கள் தீனீர்
வாக்குளக்குழம்புசுண்ணம் மைந்தர்கள்சிகிச்சைபாகம்
பாக்களிற்சொன்னவண்ணம் பகர்ந்தவனுபவந்தானே 3

கும்பமுனி கூறிய நாடிகளுற்பவம்.

நாடிகளினுற்பவந்தான் நவிலக்கேளு
நாட்டியதோ ரெழுபத்தீராயிரத்தை
தேடியதைத் தசநாடியாகச்செய்து
தெளியவல்லோ வதைக்குறுக்கிநாடியைந்தாய்ப்
பாடினனதைச்சுருக்கிமேலேசாய்க்காண்
பான்மைபெற திரிநாடியாகச்சொன்னேன்
வாடியதோர் பிள்ளைகட்காய்மண்டலத்தில்
வழுத்தினேன்கும்பமுனி வளமாய்த்தானே

புருடநாடி நடை.

வாதத்தின்நடையேதென்னில் வனமயிற்கோழி போலும்
பேதித்தவட்டையாமை பிசகிடாநடக்கும்பித்தம்
தீதுற்றவன்னிநாடி திகழ்பணிதவளைபோலாம்
வாதுற்றதனத்தினுள்ளே வகையிதுவறிந்துபாரே 5

ஸ்திரீநாடி நடை.

அறிந்துபாரரிவைநாடி அரவம்போல்வாதமாகும்
செறிந்திடுந்தவளைபோலாம் தெரிவையர்நாடிபித்தம்
உரியதோர்சேத்துமந்தான் வுற்றுப்பார்அன்னம்போலாஞ்
சரியதாய்நாடிமார்க்கஞ் சாற்றினேன்தெளியத்தானே 6

நாடிகளின் மாத்திரையளவு,

வாதமாத்திரை வயங்குமேயொன்றுதான்
பாதியானதோர் பித்தமரைசொன்னோம்
சேதுபுக்குஞ் சிலேற்பனங்காலதா
யோதிவைத்தோ மூறுதியிதுகாணே 7



நாடிகள் பேசுங்காலம்.

பேசரியவுதயதனில் வாதந்தானும்
பின்னிடையாதே பத்துநாழியாகும்
தேசுலவுமத்தியான மதனிற்பித்தம்
தீர்க்கமுடன்நாழிபத்தென் றியம்பலாகும்
நேசமுளாய் யென்னுசான சுவனிந்தான்
நிகழ்த்தினார் மாலைநேரத்திலையம்
வாசகமாய் பத்துநாழிகைதானென்றார்
வழுத்தினேன் வயித்தியர்க்குப்பரிசிதாமே 8

அட்டவிதப்பரிட்சை.

தொகுக்கவுற்றவட்டவிதப்பரிட்சைதன்னை
துலக்கமுறும்பண்டிதரேதெளிவதாக
பகுக்கரியநாடியைநீபிடித்துப்பாரு 1
பகருகின்றவார்த்தை[2]ப்பார்நாவை[3]ப்பாரு
வகுக்கரியதேகமதைதொட்டுப்பாரு 4
வளமானசரீரத்தின்நிறத்தைப்பாரு 5
சகிக்கரியமலத்தை[6]ப்பார்ஜலத்தை[7]ப்பாரு
சார்ந்தவிழி[8]தனைப்பார்த்துதெளிவாய்க்காணே 9

சிறுநீர் பரிட்சை.

உடலுறுபிணியைக்காண வுண்மையாகடநூற்சொல்லும்
படருமூத்திரக்குறிப்பை பார்க்குங்கால்வாதம்வெள்ளை
திடமுறுபித்தஞ்சறறு சிவப்புடன்மஞ்சள்போலும்
புடமிகச்சிவப்புமஞ்சள் போன்றிடிற்காமாலையாமே 10

நிலைக்குநற்கபமேயாகில் நீர்நுரைபோன்றிருக்கு
மிலதமாமூத்திரத்தி லெண்ணெயைவிட்டுபார்க்கில்
கலந்தாஞ்செய்வாதத்தோர்க்கு காணவேநீளமாய்ப்போம்
பிலனுறுமெய்யைவட்டும் பித்தமேசிதறிக்காட்டும் 11

சாற்றியகபந்தனக்கு சலலடைக்கண்போற்காணுஞ்
சோற்றியதிரிதோஷந்தான் சொல்மூன்றுகுணமுங்காட்டும்
வேற்றொருநதுளியாய்நின்றால விருதாவாயசாதியந்தான்
ஆற்றிமௌளப்பட்டர்ந்தா லதுசுகசாத்தியமாமே 12

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

நீரினுள்ளழுந்திப்போனால் நிகழ்த்திடுசாத்தியந்தான்
வாரிடுமுலையாய்க்கேளாய் வலையற்பாத்திரத்திலேனும்
பாரினிற்குயவன்செய்மண் பாத்திரந்தன்னினீரை
சாரவேபிடித்துவெய்யில் தன்னிலேவைத்துப்பார்ப்பாய் 13

இன்னமுங்குறிகள்கேட்கி லிப்படிப்பலவாயுண்டு
வின்னுமந்நீரிலெண்ணெய் விட்டுநாம்பார்க்குங்காலை
மன்னியவவயவங்கள் மனிதர்போலமச்சங்கோயி
லுன்னியபிரகாரங்க ளுயர்ந்திடுமியானைபோல I4

மலைகொடைவிருட்சம்வெண்சா மரையுடன்தாமரைப்பூ
கொலைசெயுமானைக்கொம்பு குல்லாய்க்கண்ணாடிசங்கு
பலைவிழியாளேகேளாய் மகரதோரணமேபூமி
தலைமையாழ்வீணைபோலுஞ் சவுக்கமாமனையைப்போலும் 15

பாசவின்னிலையைப்போலும் பகர்வண்டின்றாமரையின்மொக்கு
ஏகசிங்காசனந்தா னிவைகள்போலுருவங்கண்டால்
தேகமானிடரிடத்தில் சேர்ந்திருந்திக்கண்செய்யும்
ரோகமேநிற்கமாட்டா துனைக்குஞ்சாத்தியக்குறிப்பே 16

மத்தளங்கொடியேபானை மலமுண்ணும்பன்றிகாட்டில்
வைத்திடுமிருககாட்டில் வாழ்ந்திடுங்குயவன்பண்ணுஞ்
சுத்துமச்சக்கரம்போல் தோன்றிடுமுருவங்கண்டால்
சத்தியமாகச்சொன்னேன் தாமசாத்தியந்தானுமே 17

நாலுகாலொருகாலிந்த ஞாலத்திலுனைக்குமூன்று
காலுளமனிதர்காயம் கனக்கவேபெருக்கமாந்தூண்
மாலுறத்தலையில்லாத மாந்தர்முன்னுகக்கத்தி
சூலமேயுலக்கைவில்லு தோன்றிடுமரிவாள்பாம்பே 18

பூனையேயெலியேயம்பு புகல்கொண்டைசுரக்காய்கோழி
காணிடைபுலிகுரங்கு கணைமழுப்போனுசிங்க
மீனமில்குதிரையாக வல்லியேகொடிமல்லாரி
யூனமில்லெருதுகாட்டி லுழன்றிடுங்காடிதானே 19

பறந்திடும்பட்சியாமை பகருந்தேளிவைபோலேனுஞ்
சிறந்தனைவிட்டபோதில் சினைதாய்ச்சிருக்கினாலும்



புறந்தருங்கூந்தல்மானே பொங்கியேயறைந்திட்டாலுந்
தறந்திடிற்குறிகளெல்லாஞ் சாத்தியக்குறிப்புதானே. 20

இவ்விதமூத்திரத்தி லிலக்கணமுற்றுமாய்ந்து
செவ்வியவாயுர்வேதஞ் செப்பியவகைகளெல்லாம்
கவ்விபேர்விழியினுளே நாட்டினில்மனிதர்க்காக
அவ்வியமில்லாநெஞ்சத் தகத்தியருரைத்ததாமே 21

மலப்பரிட்சை

ஒக்குமேவாதநோய்மலத்தைப்பார்க்கில
வுகந்தமலம்கருகியேகருத்திருக்கும்
மிக்கபித்தநோய்மலத்தை யுற்றுப்பார்க்கில்
மிகுந்தசிவப்பொடுபசுமைதானுந்தோற்றும்
மைக்குவளைமானேகேள்வன்னிரோகம்
மலமதுதான்வெண்மைநிறமாயிருக்கும்
பக்குவமாயிம்மூன்றுந்தொந்திப்பாகில்
ப்கருமின்னிறங்கள்வகை பரிந்துகாணும் 22

விழிப்பரிட்சை.

உண்மையாங்கண்கள்குறிப்பதைகேள்வாதம்
வுற்றவிழிகருத்துநொந்துநீருங்காணும்
தண்மையிலாபித்தரோகியின்தன்கண்கள்
சார்பாகபசுமைசிவப்பேனுங்காணும்
வண்மையிலாவையரோகிவிழிகள்தானும்
வளமானவெண்மைநிறமேதானாகும்
திண்மையிலாதொந்தரோகியின்தன்கண்கள்
தீட்டுவாய்ப்பலநிறமென்றறையலாமே 23

நாப்பரிட்சை.

பலமானருசியறியும் நாவின்கூறை
பகருகிறேன்வாதரோகியின்றன்நாவு
கலமாகவெடித்துகருத்திருக்குமுட்போல்
கண்டுகொள்வாய்பித்தரோகியின்றன்நாவு
லமுறுசிவந்துபச்சென்றிருக்கும்
நட்பிலாசிலேத்துமரோகியின்றன்நாவு

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

தலமதனிலுற்றமுதியோர்கள்சொன்ன
தன்மைபடிதடித்துவெளுத்திருக்கும்பாரே 24

வார்த்தை பரிட்சை,

பார்ப்பதுதான் வாதரோகியின்றன்வார்த்தை
பக்குவமாய் சமசத்தமாயிருக்கும்
சேர்ப்பதுதான்பித்த ரோகியின்றன்வார்த்தை
செப்பக்கேளபெலத்துமேயுறத்திருக்கும்
ஏற்பதுதான்ஐயரோகியின்றன்வார்த்தை
வெளிதாகச்சிறுத்திருக்கு மியல்பிதாகும்
கோற்கவேயிம்மூன்றுந் தொந்தமாகில்
கூசாமற் பலவிதமாய்ப்பேசுவானே 25

தேகபரிட்சை,

மூன்றாகும்வாதபித்தசிலேத்துமத்தால்
மிகுத்தமுறத்தொந்தித்தரோகிதேகம்
தோன்றுதசீதளவுஷ்ணங்காலமூன்றுந்
தொகுத்தேன்யான்றிரேகத்தினிரத்தைக்கேளு
ஊன்றுதவாதவுடல்கறுத்துகாணும்
உரியபித்தமுடல்சிவப்புபசுமைகாணும்
போன்றுதவையவுடல் வெண்மைதோற்றும
பொருந்துதொந்தரோகவுடற்கிவற்றையொக்கும் 26

தேகத்தை தொட்டுபார்க்கும் பரிட்சை.

நேமுடன்வாதத்தின் றிரேகந்தானும்
நேர்மையாய்குளிர்ந்து சிலவிடத்திலேதான்
மாயமுடனுட்டணமுந் துடிதுடிப்பு
மருவுதலாம் பித்ததின்தேகந்தானும்
தோயவேவுஷ்ணமதா யிருக்குந்தெளிவாய்
சேத்துமத்தின்தேகமது குளிர்ந்திருக்கும்
பாயதொந்ததேகமது பலவாறாகும்
பரிந்துதொட்டு தேகத்தைப்பார்த்துபேசே 27

வால்மீகர் கூறிய நீர்ச்சிலைபரிட்சை.

அவனியில்மாந்தருக்கு அணுகியவியாதிதன்னை
கவனமாய்க்கண்டுதேர்ந்து கனிவொடுமருந்துசெய்ய



புவிதனில்வயித்தியர்க்காய்ப் பூட்டுவேனிரகசியத்தை
அவலமும்நேரிடாது அறைந்தநீர்சிலையாலே 28
சிலையைநனைத்துமாந்தர் திரமணிக்கடையிற்சுற்றி
காலபேமூன்றேமுக்கால் கடிகையுங்கடந்தபின்பு
சாலவச்சிலைவாங்கி தனிவிரல்வாதநாடி
ஓலமாய்க்குதித்துவாங்கி லுரைத்திடுமரணமென்றே 29
வருந்தியேநனைத்துச்சிலை மணிக்கையிற்சுற்றிவைத்து
திருந்தியேமூன்றேமுக்கால் சென்றபின்னுடைவாங்கிப்
பொருந்தியேவாதநாடி புழுவெனநெளியுமாகில்
அருந்திடமருந்துசொல்லு மவர்பிழைத்திடுவர்தாமே 30
நனைத்தவச்சிலைதன்னை நடுமணிக்கடையிற்சுற்றி
சினத்திடாமூன்றேமுக்கால் சென்றபின்னுடைவாங்கி
அனைத்தவர்நாடிபார்க்கி லரியதோர்வாதநாடி
சினதநகண்ணரவம்போலச் சீறியேநெளிந்தாற்றானே 31
இம்மையிலசாவுசொன்னே மிருபத்திரெண்டுநாளிற்
செம்மையாய்ச்சிலைதன்னை சிறுவிரல்தனிற்சுற்றி
தம்மியேகடிகையொண்டில் சார்ந்தபின்னுடைவாங்கி
வம்பிலாவாதந்தேர்ந்தா லவர்பிழைத்திடுவர்காணே 32
மெல்லியதுயில்நனைத்து மிகுமணிக்கடையிற்சுற்றி
சொல்லியமூன்றேமுக்கால் தோன்றியநாழிசென்றால்
அல்லியேயவிழ்த்துப்பார்க்கில் அமர்ந்திடும்வாதநாடி
ஓல்லியேயுதைத்துவாங்கி லொன்பதுநாளிற்சாவே 33
கடுகியேநனைத்துச்சிலை கையிலேபக்கஞ்சுற்றி
முடிகிடாமூன்றேமுக்கால் நாழிகைசென்றபின்பு
அடிவுறவவிழ்த்துப்பார்க்கி லட்டைபோல்நாடிவாங்கில்
முடுகியசாவுசொன்னேம் மூன்றுநாட்பகலுந்தானே 34
முந்தியேநனைத்துச்சிலை முன்மணிக்கடையிற்சுற்றி
உந்தியமூன்றேமுக்கால் வுள்ளதுசென்றபோது
தந்திபோல்வாதநாடி தனித்ததுசுழலவாங்கில்
சென்றுருவானேசொன்னேஞ் சீக்கிரமன்றுசாவே 35

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

ஷியார் கூறிய நெய்ச்சீலைபரிட்சை

பணிப்படுசீலைதன்னை பாக்குடன்நெய்யிற்றோய்த்து
மணிக்கடைசுற்றிவைத்து மற்றநாழிகையேசென்றால்
துணிவுடனவிழ்த்துப்பார்க்கில் சுகமுடன்வாதநாடி
தணிப்புடன்கூடிகொண்டால் சாவில்லைபிழைப்பான்றானே ( )

நெய்யிலேசீலைதோய்த்து நின்மணிக்கடையிற்சுற்றி
ஐயிலேயிருக்கப்பார்த்து நாழிகையொன்றுசென்றால்
பையவேயவிழ்த்துப்பார்க்க பஞ்சுபோலமர்ந்தின்றால்
செய்வதோர்மருந்துசொல்லும் சீக்கிரம்பிழைப்பான்றானே (

தோகையேநெய்யிற்சீலை தோய்த்துகைசுற்றிவைத்து
நாகமேபணிந்நார்காண நாழிகையொன்றுசென்றால்
ஆகமேயவிழ்த்துப்பார்க்கில அன்னம்போல்நடந்தால்நாடி
யோகவானென்றுசொல்லு வுறுதியாய்ப்பிழைப்பான்றானே 38

சுருதியாய்நெய்யிற் சீலை தோய்த்துகைசுற்றிவைத்து
கருதுநாழிகையேயொன்று கடந்துபின்னவிழ்த்துப்பார்க்கில்
பருதியவாதநாடி பக்கஞ்சேர்ந்தொதுங்கிவாங்கில்
உருதியாய்க்குருதிசாய்க்கு மூப்பதாம்நாளிற்சாவே 39

ஆடையைநனைத்துசுற்றி யணிக்கடைகுறிப்புநெய்யில்
ஊடறச்சுற்றிபார்க்கில் வுள்ளதோர்நன்மைதன்மை
தேடியாராய்ந்துபார்த்துச் செகதலம்விளங்கநாளும்
நாடிவால்மீகர்சொன்னார் காரெனறுமறிந்திலேனே 40

தன்வந்திரியார் கூறிய உறுப்புபரிட்சை

உள்ளங்கால்முழங்கால்பள்ள முற்றதோர்மூக்குதன்னை
துள்ளியபிடரிதொண்டை சுற்றியநெத்திகண்ணும்
தெள்ளியவுச்சிசூத்திரம் செப்பும்வாய்காதுதிரேக
மூள்ளதோர்பேச்சுகூட வுண்மையாமுறுப்புசூத்திரம் 41

இடதுள்ளங்காலேநீரா யிசைந்திடும்வலதுகாலிற்
சுடுவதுநெருப்பதானால் தோற்றியகுளிர்ச்சிதண்ணீர்
விடுவதுபோலக்கண்டால் மிகுபிணிதீரதென்றும்
படுவதுதிடஞ்சொன்னோம் பத்துநாள்சாவுதானே 42



வலதுள்ளங்காலேசூடாய் மற்றொருயிடதுகாலில்
சலமதுகுளிர்ந்தின்றால் தலையுச்சிவியர்வைகண்டால்
உலையிடுங்கனலைப்போல உடம்பெலாம்வெதுப்புமாகில்
அலைதுயில்மாதினாளே யவர்பிழைத்திடுவர்தானே 43

குளச்சதுநொண்டுநீர்போல் குளிர்ந்துச்சிவியர்வைதோன்றில
தளர்ந்திடுங்கைகால்தொட்டு தடவிடில்விறைப்பதானால்
இளைப்பொடுவிக்கல்தோன்றும் யேகமாய்க்குளிர்ந்திற்கு
மலைதிடுங்கண்ணுஞ்சற்றே மருட்டிடிற்சாவுமுண்டே 44

நெத்தியுங்குளிர்ந்துகண்ணும் நீலம்போல்காணுமாகில்
சத்தியம்பிடரிதேய்க்கில் சலமெனக்குளிர்ந்துகாணில்
பத்தியாய்க்கழுத்துசூழப் பனியதுபோலத்தோன்றில்
குத்திடுஞ்சேத்துமம்நெஞ்சில குறுகிடில்மாளுமென்னே 45

வெத்திசேர்புருவத்தோடே விரற்கொண்டுதடவச்சூடாய்
நெத்தியுமவெதும்பவுச்சி நீரதுகுளிர்ந்திற்கில்
எத்திசையறியச்சொன்னோ மிடதுள்ளங்கையுஞ்சூடாய்
சத்தியேவீசனாணைச் சாவில்லைப்பிழைப்பான்றானே 46

இருக்குமூக்கதனில்நீரா யிடதுள்ளங்காலேசூடாய்
பருமுன்னங்கையிற்பள்ளம் பணியாரம்போலத்தோன்றில்
கருவிளைப்போலேதொண்டை கறகறத்தறுக்குமாகி
லருமுனியறியச்சொன்னா ரஞ்சாநாள்மரணந்தானே 47

விரும்பியவலதுள்ளங்கால் வெதும்பியேயிடதுமூட்டும்
கரும்பதுபோற்சிவந்து கைகொண்டுதேய்க்குமபோது
இரும்பதுபோலேமூக்கு யிருப்புரம்வெதும்பிநிற்கில்
அரும்புசேர்குழலினாளே யவர்பிழைத்திருப்பர்தானே 48

பாரெலாமறியச்சொன்னோம் பருத்தடிதொடையில்நீராய்
பேருள்ளங்காலிரண்டும் பெருத்துநீரெனவுந்தோன்றி
காருள்ளஞ்செவிகள்ரெண்டும் கல்லுபோலவிறைத்துநின்றால்
தாருவாயீசனாணைச் சாவுநாளிரண்டதாமே 49



FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

வால்மீகர் கூறிய
நாடிகளின் தொங்கல்பரிட்சை.

நீடியவாதநாடி நீர்ச்சுழல்வண்டுபோல
ஓடியேசுழலுமாகி லுண்பெலாச்சலையேதங்கி
நாடியேகழிந்துநிற்கும் நாளிலையுடலும்வத்தும்
கூடியவீசனுணை தொல்முனிதொகுத்தவாறே 50

உன்னியவாதநாடி வுளர்ச்சிபோலூறுமாகில
கன்னியேயறியச்சொன்னேன் கத்தரிக்காயேதொங்கி
தன்னிலைவயிற்றையூதுஞ் சம்பதமில்லைமந்தம்
வன்னியைப்புணர்ந்தோனுணை வருஷமூமெட்டதாமே 51

கண்டதுவாதநாடி கட்டெறும்பென்னவூர்ந்தா
லுண்டபின்தொங்குங்கிளை யுபகரிசொல்லக்கேளீர்
மூண்டதுவிரலில்நீண்ட முருங்கக்காயிலையுந்தொங்கி
யொன்றொடிகழியும்வீங்கு மொன்பதுவருஷந்தானே 52

பஞ்சிட்டகோலைப்போல பறையடிவாதநாடி
மிஞ்சிட்டுவோடுமாகில் விளைந்திடும்பிணியைக்கேளீர்
அஞ்சிட்டுபாவற்காயே யடிக்குடல்தன்னிற்றொங்கி
வஞ்சியேவாட்சிதோன்றும் வருஷமூமெட்டதாமே 53

முன்னியவாதநாடி முறுக்கியகயறதானல்
பன்னியயிடைவிலாவில் பயித்தந்தோலொட்டிநிற்கு
மின்னியகழிச்சலுண்டாம் வெடிப்புறவேப்பமுண்டாம்
சென்னியிற்கங்கைவைத்தோன் செப்பினார்வருஷமெட்டே

நாட்டியவாதநாடி நடுக்கிடக்குளிருமாகில்
ஒட்டைதேங்காய்போற்றொங்கி யுடகுடல்தன்னில்நிற்கும்
வாட்டறவுடலும்வற்றும் வயாதுவூதிக்கொள்ளும்
கோட்டுடையயிலினாளே கொண்டதுவருஷமென்னே 55

சத்தியவாதநாடி சக்கரம்போலேசுத்தில்
முத்தியவாழைத்தோலு முதுகினாத்தண்டுதோலும்
சுத்தியகுடலிற்பற்றி சுருக்கெனவசியேகோத்தும்
பத்திசேர்குழலினாளே பயனறிவருஷம்பத்தே 56



சுருக்கியவாதநாடி சுழலுநீர்போலச்சுத்தில்
இருவிபகையுங்காலு மெதும்புறவற்றிநிற்கு
மருவியவயிறூதி மனமதுவருத்தங்கொள்ளும்
பருங்கயகோழியாடு தொங்கிடில்வருஷம்பத்தே 57

மீறியேவாதநாடி மீனதுபோலேயேறில்
கூறியஅவணாபிர்க்கு கொடியமீன்பெட்டலங்காயு
மேறியேவலதுபக்க மெதுமபிலையோடிநிற்கில்
மாறியேயுதரமூத்தும் வருஷமெட்டளையதாமே 58

நண்ணியேவாதநாடி நாரைபோல்நடக்குமாகி
லுண்ணியசத்தியுண்டா முடம்பெலமோதிவீங்கும்
கண்ணிலேகுற்றமுண்டாம் காந்திடும்வயிறும்வீங்கும்
பண்ணிமாங்கிஷமேதொங்கில பனிரெண்டுவருஷந்தானே 59

பலமுறும்வாதநாடி பகர்பூரான்போலேசுத்தில்
நலமுடன்முனைனேசொன்ன நற்கரிதன்னைநீக்கி
உலகுறுமற்றமற்ற வெக்கரியுள்ளதெலலாஞ்
சலமுறவயிற்றில்தொங்கில் சத்திக்கும்வருஷமாறே 60

பலகரிபொசிப்பிற்றொங்கி பற்றியேயுடலில்நின்று
மிலகுறிதன்னையெல்லாம் ரிஷிகளுமறியச்சொன்னார்
கலகுறிவருஷம்பத்து கண்டுகண்டுள்ளதெல்லாம்
வலுபருவதத்தில்மேவும் வால்மீகரறிந்தவாறே 61

தீபக்குறி.

ஏற்றியதீபந்தன்னை யேந்தியேமுகத்திற்காண
சூத்திரந்தன்னைச்சொல்வோம் சோதியைநாவில்வைத்து
நாற்றிசையறியச்சாவு நன்மையாய்ப்பிழைக்கும்வாறும
மாத்திரமின்னதென்று வகுத்தவாலமீகர்தாமே 62

காந்தியதீபந்தன்னைக் கமலமாமுகத்திலேநே
ஏந்தியேபார்க்கும்போது யிடந்தனிற்கொழுந்துசாய்ந்து
சேர்ந்திருபுடையுமற்ற சூரியாறுமாகில்
தேர்ந்துநாமறிச்சொன்னேன் சீக்கிரமன்றுசாவே 63

விளங்கியதீபந்தன்னை விமபமாய்முகத்தில்நோக்கி
வளந்ததுபார்க்கும்போது மற்றுமோர்சாயாய்நிற்கிற்

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

களஞ்சியேமருந்துசெல்லும் காசினியறியச்சொன்னேன்
மிளங்கலையுமுதியோர்தாமு மேற்றமாயபிழைப்பர்தாமே 64

மின்னியதீபந்தன்னை விளங்கியமுகத்திநேரே
உன்னியேபார்க்கும்போது வுடவனைக்கடுகுமாகில்
பின்னையும்பகையுங்காணும் பிழைத்திடானறிந்துசொன்னேன்
வன்னிநோய்காத்தாரானை மரணமுமைந்துநாளே 65

நண்ணியதீபந்தன்னை நயம்பெறுமுகத்திநேரே
திண்ணயமாகநோக்கில் தின்மலமலத்தேகாய்ந்து
தண்ணீர்போல்சிவந்துசாய்ந்து தாழ்விலாக்காயமாகில்
எண்ணமில்லாமற்பின்னே யிருப்பதுந்திண்ணந்தானே 66

திண்ணமாய்த்தீபந்தன்னை சேர்ந்தவெண்முகத்திநேரே
திண்ணமாயேத்திபார்க்கில் சீக்கிரமிடத்தேசார்ந்தால்
வெண்ணெய்போற்புகையுமுண்டாய்வெடுவெடுப்பில்லாதின்றால்
எண்ணமாயறிந்துகொள்நீ யெட்டுநாள்சாவுதானே 67

பருதியதீபந்தன்னை பங்கயமுகத்திநேரே
சுருதிகொண்டேத்திப்பார்க்கில் சுழன்றதுபுகையுமுண்டாய்
கருதியநீலமானால் காசினியறியச்சொன்னேன்
ஐயில்லாச்சாவுசெல்வேன் நாற்பத்திரண்டுநாளே 68

செஞ்சுடர்தீபந்தன்னை செந்திருமுகத்திநேரே
மிஞ்சிடாதமைந்துபார்க்கில் மின்னியபொறியும்வீழ்ந்து
தஞ்சமாய்வலதுபக்கம் தானேபொன்னிறமதானால்
அஞ்சுநாள்கழித்துநோய்போயவர்பிழைத்திருப்பர்தாமே 69

மற்றைய பரீட்சைகளை இரண்டாம்பாகம மூன்றாம பாகத்தில முறையே அச்சிடுவோமெனக்கருதி இங்ஙனம சுருக்கமாய்க் கூறலாயிற்று இனி பின்னர்கூறும் கைமுறைகளாகிய அவுடதங்களை நன்கு கவனிப்பீர்களாக.

---



உ

கடவுட்டுணை.

## அவுடதங்களின் வயது.

திட்டியவஞ்சனங்களிடுமைகடாணும
திரிமாதமிருக்குமதன்பின்னாகாது
காட்டுமருந்தரைத்ததுவுமணில்வெந்த
கியாழமுமேயரைச்சாமங்கழிந்தாலாகா
கூட்டியதோர்லேகியஞ்சூரணங்கள்சீனிக்
குழம்பாறுமாதமன்றிகொள்ளொணாது
ஆட்டியநெய்யெண்ணெய்க்கோர்வருஷங்குளிகைக்
கனவரதபலமெனவேயறையலாமே

பேறுபெறும்பற்பங்களிருநூறாண்டு
பேசிடுமேசுண்ணங்களைஞ்நூறாண்டு
சீருபெறுஞ்சிந்தூரமெழுநூறாண்டு
சிரசுநோய்த் தயிலங்கள்திங்கள்பத்து
பாருலகில்மெழுகதுவும மூன்றேயாண்டு
பதமதனைத்தானறிந்தால் ரோகிகட்கு
சேருபிணியில்லாது கணத்திலோடுஞ்
செய்பாகங்கைபாகந் தெரிந்துகொள்ளே

## சூரணங்கள்.

### ரவியொளிச்சூரணம்.

| | |
|---|---|
| சுக்கு | இந்துப்பு |
| மிளகு | மதுரம் |
| திப்பிலி | கடுக்காய் |
| அதிவிடயம் | கருவேலம்பட்டை |
| கோஷ்டம் | நெல்விலற்றல் |
| சித்திரமூலம் | பெருங்காயம் |

இவைகளைச் சமன்கொண்டு சூரணிக்கவும் அசீரணபேதி-பொருமல்-விம்மல்-மஞ்சட்காமாலை-ஏப்பம் முதலியவை போம். இச்சா பத்தியம.

### கருணைக்கிழங்கு சூரணம்.

காராக்கருணை தோல்நீக்கி உலர்த்தி பொடித்த சூரணம் பலம்-2
நெல்லிக்காய் தான்றிக்காய் கடுக்காய் திப்பிலி மிளகு சுக்குவகை

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

பலம்-36 இவைகளைச்சூரணித்து மேற்படி சூரணத்தோடுசேர்த்துசீனிகலந்து திரிகடிப்பிரமாணம் அந்திசந்தி மண்டலங்கொள்ள வெழுவங்களும்போம்.

## சுக்குச்சூரணம்.

இரண்டுபடி புளித்த தயிரில் எ-பலம் சோத்துப்பைக்கொட்டி மேல்தோலபோக்கிய தேர்ந்த சுக்கு பலம்-10 அதிலிட்டு இரவில் ஊறினபிறகுபகலில் ரவியுலர்த்தவும் இவ்வண்ணம் தயிர்சுண்டுமளவும்ஊறவைத்துலர்த்திவுலர்த் திசூரணித்துக்கொள்ளவும் திரிகடிபிரமாணம்சர்க்கரை கலந்துண்ண பசியில்லாமை அசீரணமபுளியேப்பம் வயிற்றிரைச்சல் உபசிச முதலியவைபோம்.

## கிலவாகைச்சூரணம்.

சுக்கு-மிளகு-ஓமம்-விளங்கம்-வகை பலம்-கால் கிலவாகைச்சூரணம் பலம்-க கலந்து திரிகடிப்பிரமாணம் சீனிசேர்த்து காலைமாலை அரைமண்டலமுண்ண மலபந்தம்-வயிற்றுவலி-வயிருப்பிசம் முதலியவைபோம்.

## கற்பூரச்சூரணம்.

சாதிக்காய்-ஏலம்-கிராம்பு-மிளகு-வகை பலம்-க கற்பூரம்-பலம் இரண்டு இவைகளைச்சூரணித்து சீனிபலம்-க சேர்த்து காலைமாலை பத்துநாளுண்ண வயிற்றிரைச்சல்-பசிமந்தம் - புளியேப்பம்-மாரடைப்பு அக்கினிமந்தம் முதலியவைபோம்.

## அசுவகெந்தி சூரணம்.

சுக்கு-மிளகு-திப்பிலி-லவங்கம் சிறுநாகப்பூ-ஏலம் வகை பலம் ஒன்று அமுக்கராக்கிழங்கு பலம்-சு இவைகளைச்சூரணித்து சீனிசமன்சேர்த்து திரிகடிப்பிரமாணமுண்ண உஷ்ணந்தணியும்.

## இந்துப்புச்சூரணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சீரகம் | பலம் | 2 | சுக்கு | பலம் | 16 |
| ஓமம் | ,, | 4 | கடுக்காய் | ,, | 32 |
| திப்பிலி | ,, | 8 | இந்துப்பு | ,, | 1 |

இவைகளைச் சூரணித்து சீனிசேர்த்து காலைமாலை பத்துநாளுண்ண சத்தி அக்கினி மந்தம் முதலியவைபோம்.



## கற்கடகசிங்கி சூரணம்.

கடுக்காய்ப்பூ எடை-15 காசுகட்டி-10 வறுத்திடித்த சீரகம சாதிக்காய் நெல்லிவற்றல் வகை 1-க்கு எடை-5 வறுத்திடித்த வெந்தயம் எடை-20 இவைகளின் தூள்களைச்சேர்த்து கலந்து குழந்தைகளுக்கு காணுகிற கழிச்சலுக்கு உபயோகிக்கலாம அரை 1-விராகனெடை தேனில கலந்து கொடுக்கவும இரவில கொஞ்சம அபினி சேர்த்து கொடுததால வெகுநன்மை

# குளிகைகள்.

## சூக்கோடரி.

சுத்திசெய்த தாளகம்-பலம்-1 கல்லுரலத்தில் ஊரிதோல் நீக்கிய கடலைப்பருப்பு பலம-10 இவைகளில் தாளகத்தை மேற்படி கடலை நீரால் தளுக்கில்லாமலாட்டி பின்பருப்பையுஞ்சேர்த்து பழரசத்தால் 4-ஜாமம் விடா தரைத்து உளுந்துபிரமாணம குளிகைசெயது 2-முதல் 6-மாத்திரைவரையில் தேனில்தாக்கவும் பததியம் மீன்கொழம்பு கத்தரிக்காய்கொழம்பு புளிப்பதிகமிட்டுண்ணவும் செய் ஆட்டிறைச்சி நீக்கவும் குழந்தைகட்கு 2-மாத்திரை கொடுக்கவும்.

## கெவுரிமாத்திரை

அரை ஆழாக்கு உளுத்தம்பயறு நல்ல ஜலத்தில் ஊறவைத்தரைத்து ஒருபலம் கெவுரிக்கு கவசிதது வெள்ளாவியில் வைத்தெடுத்து மேற்படி கவசம் நீககியபின் ஒருபலமமிளகு ஒககச்சேர்த்து பழச்சாற்றால் 2-ஜாமமாட்டி சிறுபயர் பிரமாணம் குளிகைசெய்து தக்கவனுபானங்களில தீட்டவும தண்ணீர் சாதம் அருநதவும மருந்துண்ண பிறகு உடனே மிளகு கியாழம்கொள்ளவும்.

## கனத்திற்கு சஞ்சீவிகுளிகை-

| | |
|---|---|
| கிராம்பு | அக்கிரகாரம் |
| பத்திரி | கடுகுரோகணி |
| செவியம் | ஜாதிக்காய் |
| அரிசிதிப்பிலி | ஜாபத்திரி |
| அதிவிடயம் | கற்கடகசிங்கி |
| தான்றிககாய் | சூராசாணி வகை விராகனி-1 |
| சருஞ்சீரகம் | |

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

இவைகளைப் பொன்வறுப்பாய் வறுத்துச் சூரணித்து சீமைக்கல் காற்பற்பம் கஸ்தூரி, பூரம், கோரோசனை, குங்குமப்பூ, வகைக்கு விராகனிடை-1 ஒக்கச்சேர்த்து இஞ்சி ரசத்தில் ஒருஜாமமும், நாரத்தம்பழரசத்தில் ஒருசாமமாட்டி தக்க அனுபானங்களில் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

கனல்மாந்த சுரத்திற்கு வில்வாதிகுளிகை,

| | |
|---|---|
| லவங்கம் | சுக்கு |
| வால்மிளகு | சடாமாஞ்சி |
| சிறுநாகப்பூ | சீரகம் |
| கடுகுரோகணி | ஆலமவிதை |
| ஏலம் | தாளிசம் வகை விராகனிடை-1 |

இவைகளைச் சூரணித்து பச்சைகற்பூரம் விராகனிடை-க சேர்த்து பொற்றலைக்கையானிலைச்சாற்றாலாட்டி நவநாள் ஆரப்போட்டுப் பத்தாநாள் வாளம்பலம்-1 கூட்டி மேற்படி சாத்தாலாட்டி மிளகு பிரமாணம் குளிகை செய்யவும் இஞ்சி, தேன, மூலைப்பாலனுபானம்,

சுரக்குளிகை.

| | |
|---|---|
| கடுகுரோகணி | இரதம் |
| செவியம் | நாபி |
| கடுக்காய் | வெண்காரம் |
| மிளகு | அரிதாரம் |
| நேர்வாளம் | இலிங்கம-வகை-கழஞ்சி-1. |
| சொச்சிக்கொழுந்து | |

இவைகளைக் கையாந்தகரை முசுமுசுக்கை ஆடாதோடை பொடுதலை மேனிச்சாத்தால் வகைக்கொரு ஜாமமாட்டி மிளகுபிரமாணம் குளிகைசெய்து சுக்கு கியாழத்திலிடவும் இச்சாபத்தியம.

ஈளையிருமல் இரத்தகாசத்தின்பேரில்
சுரமிருந்தால இலிங்கமாததிரை.

அரை-பலம் லிங்கத்திற்கு காண்டிக்கீரைச்சார்படி கால் சுருக்கு கொடுத்து பின் சாமபிராணி பூ விரா-1 சேர்த்து விளாம்பிசினி ஊரவைத்த ஜலம்விட்டாட்டி அறுபது குளிகைசெய்து ஒருபடி ஜலத்தை அரைபடியாய்க்காய்ச்சி அச்சலத்தில போஸ்தக்காய் பலம்-2 பொடித்த தூள்போட்டு சற்று மூடிவைத்து நன்றாய்ப்பிசைந்து வடிகட்டிக்கொண்டு அதில் 6-பலம் சீனிகலந்து பாகுசெய்து அந்தப்பாகில் அந்தி, சந்தி, ஒவ்வொருமாத்திரையுரைத்து சாப்பிட்ட



பிறகு இரண்டு நாழிகைக்குப் பின் சாம்பிராணிப்பூபணவெடை தேனிலிழைத்துண்ணவும், பசி அதிகரித்தால் அரிசியுடைத்து கஞ்சிகாச்சி கொடுத்துவரவும் பிறகு போஜனமருந்தவும்,

பத்தியம் முருங்கைப்பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு, வாழைக்கச்சல் புளியாரை, தூதுளங்காய்வத்தல், ஆதண்டங்காய்வத்தல் ஆகும். சிலவேளை இரைச்சி கூட்டலாம் நெய் ஆகும், புளி இலேசாய் கூட்டவும்.

நீரிழிவு மதுமேகம் நீரடைப்பு கல்லடைப்பு
முதலியவைகளுக்கு காந்தாதி குளிகை,

| | |
|---|---|
| காந்தச்சிந்தூரம் | கருவங்கச்சிந்தூரம் |
| அப்பிரேகச்சிநதூரம் | வெள்வங்கச்சிநதூரம் |

வகைக்கு விராகனெடை 2.

| | |
|---|---|
| கஸ்தூரி | பச்சைகற்பூரம் |

வகைக்கு விராகனெடை 8.

| | |
|---|---|
| சாத்திரபேதி | கற்பூரசிலாசத்து |
| கல்மதம் | வகைக்கு விராகனெடை 4. |

இவைகளை நெரிஞ்சல்வேர் கியாழத்தால் மூன்றுநாளரைத்து தேத்தான் விரைப் பிரமாணம் குளிகை செய்து அந்தி சந்தி 7 நாள் பன்னீர், காய்ச்சின இளநீர் ஆவாரைச்சமூலம் சர்க்கரை அனுபானம் இச்சாபத்தியம்.

திப்பிலாதி குளிகை.

திப்பிலி பலம் 1. அரை ஆழாக்கு எருக்கன்பாலில் போட்டு ரவியில் வைத்துச் சுண்டியபின் ஊமத்தன்காய் முகமறுத்து விதைபோக்கி திப்பிலியை அதனுள்ளிட்டு அந்த வில்லையால் மூடி மண்சீலை செய்து சாணமேற்றி காய் கருகாமல் புடம்போட்டெடுத்து உள்ளிருக்கும் மருந்தை தேன்விட்டாட்டி குன்றியளவு உருண்டைசெய்து ஒருபட்சம் கடந்த பின்பு முலைப்பால் தேனிலருநத சுவாசகாசம் இருமல் ஈளை முதலியவைதீரும். பத்தியம் புளி, புகை, போகம் நீக்கவும் நாட்பட்ட வியாதிக்கு புலால் யிரைச்சி நீக்கவும்.



FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

### கோரோசனக்குளிகை.

| | |
|---|---|
| லவுங்கம் | தாளிசம் |
| கோஷ்டம் | லவுங்கப்பட்டை |
| ஏலம் | கற்பூரம் |
| ஜாதிக்காய் | குங்குமப்பூ |
| திப்பிலி | பச்சைகற்பூரம் |
| அக்கராகாரம் | கோரோசனம் |

வகைக்கு விராகனெடை 2,

இவைகளை சந்தனக்கட்டைக்கியாழத்தாலாட்டி குன்றியளவு குளிகைசெய்யவும்.

### கஸ்தூரி குளிகை.

| | |
|---|---|
| கஸ்தூரி | தாளிசப்பத்திரி |
| பச்சைகர்பூரம் | சந்தனம் |
| குங்குமப்பூ | வால்மிளகு |
| ஜாதிபத்திரி | தக்கோலம் |
| ஏலம் | கிராம்பு விராகனெடை 1. |

இவைகளை முக்கண்கனி நீராலாட்டி பயரளவு குளிகைசெய்யவும்.

### குங்குமப்பூ குளிகை.

| | |
|---|---|
| குங்குமப்பூ | லவுங்கப்பட்டை |
| அக்ராகாரம் | குராசாணி |
| விடயம் | கருஞ்சீரகம் |
| ஏலக்காய் | மராட்டிமொக்கு |
| ஓமம் | பச்சைகற்பூரம் |

வகைக்கு விராகனெடை 1.

இவைகளை ஆவாரைவேர் கியாழத்தாலாட்டி பயரளவு குளிகை செய்யவும்.

### கட்டுவாதி குளிகை.

ஒருஜாதிக்காயைத் துளைத்து அதில் (12) அரிசி எடை அபின் வைத்து மஞ்சளைக் கவசித்து மண்சீலைசெய்து காய்கருகாமல் புடமிட்டெடுத்து கவசம் நீக்கி காய்க்குச் சமன் பேரீச்சம்பழம் சேர்த்து முலைப்பாலிலாட்டி பயரளவு குளிகைசெய்யவும்.



### மனோசிலை குளிகை.

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி மூலம் |
| மிளகு | தாளிசம் |
| திப்பிலி | மனோசிலை |

வகைக்கு பலம் 2.

இவைகளை துளசிச்சாற்றாலாட்டி சிறு சுண்டைக்காயளவு குளிகைசெய்து நளிர்ச்சுரம் குளிர்ச்சுரங்களுக்கு தேனில் தாக்கவும். பத்தியம், புளி கடுகெண்ணை நீக்கவும்.

### சூதகவாய்வுகளுக்கு ரசாயனம்

கடுகு பலம் 1. மிளகு பலம் கால் ரவியுலர்த்திப் பொடித்து மஞ்சள் பலம் கால். கருஞ்சீரகம் பலம் 1. பொன்வறுப்பாய் வறுத்துச் சூரணித்து கரியபோளம் பாலேந்திரபோளம் வகைக்கு விரகனெடை 1. வறுத்துப்பொடித்து சரக்குகளை ஒன்றுபடுத்தியபின் பனைவெல்லம் பலம் 4 சேர்த்து அறைத்து 4 பலம் தேன்விட்டு குழம்புபோல் செய்து மாதவிடாய் கண்ட நாள் முதல் 5 நாள் வரையில் பாக்களவு அந்தி சந்திக்கொடுக்கவும் இவ்வாறு நான்குமுறை கொடுக்கவும். இச்சாபத்தியம்.

### காயமாத்திரை.

கொம்பு பாவற்காயின் விதைபோக்கி பெருங்காயம் விராகனெடை 1. அதற்குள் வைத்து நூலாற்சுற்றி அடுப்பிலிட்டு காய்கருகாமுன்னெடுத்து காயுடனே கல்வத்திட்டாட்டி மிளகளவு குளிகைசெய்து இஞ்சிரசம், முலைப்பால், தேன் இதுகளில் தாக்க வாதசுரம் ஜன்னி வாயுபோம்.

### வாய்வுகளுக்கு பூரமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| பூரம் விராகனெடை | 10 | மிளகு விராகனெடை | 2 |
| வெண்காரம் | 2½ | திப்பிலி | 2 |
| பச்சைகற்பூரம் | 1 | கருஞ்சீரகம் | 1 |
| வாய்விளங்கம் | 2 | மோடி | 2 |
| லவங்கம் | 1 | ஏலரிசி | 1 |
| சுக்கு | 2 | வாளம் | 6 |

இவைகளில் சூரணிக்கவேண்டியவைகளைச் சூரணித்து மற்ற சரக்குகளையுஞ் சேர்த்து சுக்கு கியாழத்தால் ஒருஜாமமாட்டி

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

குன்றிப்பிரமாணம் குளிகைசெய்து அந்தி சந்தி பத்துநாளுண்ணவும். இச்சாபத்தியம்.

### சகல பிரமேககேசரி.

| | |
|---|---|
| விளாம்பிசின் | புளியங்கொட்டைத்தோல் |
| இலவம்பிசின் | காசுகட்டி |
| வேப்பம்பிசின் | வில்வப்பழச்சதை |
| மஞ்சள் | அதிமதுரம் |
| தேத்தாங்கொட்டை | இலுப்பைப்பூ |
| நெல்லிக்காய் | சீநதிற்சர்க்கரை |
| சிங்கிபற்பம் | கற்கண்டு |

வகைக்கு விராகனெடை 1.

சந்தனத்தூள் விராகனெடை 8, அல்லிவிரை ஆவாரைவிரை வகை விராகனெடை பனிரெண்டு இவைகளைச் சூரணித்து தண்ணீர் மிட்டான் கிழங்கு சாற்றில் நாலுஜாமமறைத்து இலநதைக் கொட்டை பிரமாணம் குளிகைசெய்து காலை ஆவின்மோரிலும் மாலை தேனிலும் பதினொருநாள் உண்ணவும் பத்தியம் கடுகெண்ணை நீக்கி ஆவின்மோர் தயிர் நெய் கூட்டலாம்.

### வேறு சுரக்கோடரி.

வெள்ளை பாஷாணம் சூதம் இவைகளைச் சமன்கொண்டு கிளிகட்டி மிளகு கியாழத்தில் இரண்டு ஜாமமெரித்து பிறகு வெண் மிளகு எடை நான்கு சேர்த்து ஊமத்தைச்சாற்றால் நாலுஜாமமாட்டி பயரளவு குளிகைகட்டி தேனில் காலை மாலை ஐந்து நாளுண்ண குளிர்ச்சுரம் நளிர்ச்சுரம்போம் சுட்டபுளி வறுத்த உப்பு கூட்டவும் வாந்தியானால் மிளகு கியாழம் கொடுக்கவும்,

### நாபிமாத்திரை.

திப்பிலி மிளகு லிங்கம், பொரித்த வெண்காரம், நாபி இவைகளைச் சமன்கொண்டு நிம்பழச்சாற்றால் மூன்றுநாளாட்டி உளுந்தளவு குளிகைசெய்து அனுபான மறிந்து தாக்க முச்சுரங்களும்போம்,



## மெழுகுகள்.

### விப்புருதி மெழுகு.

| | |
|---|---|
| சிறிய அவரைக்கிழங்கு | பூமிச்சக்கரைக்கிழங்கு |
| அப்புகோவைக்கிழங்கு | முடக்கத்தான்வேர் |
| பழுப்பாகல்கிழங்கு | கழற்சிவேர் |
| கொடிவேலிவேர் | ஊஞ்சல்பட்டை |
| வெள்ளைகாக்கணம் வேர் | ஆகாசகெருடன்கிழங்கு |
| வெள்ளைச்சார்வளைவேர் | மெருகன்கிழங்கு |
| புளியரணைக்கிழங்கு | பூனைகாஞ்சோரிவேர் |
| செம்பிரண்டைக்கிழங்கு | வெள்ளைகாட்டாமணக்குவேர் |

வகைக்குப் பலம் $\frac{1}{4}$,

இவைகளைச் சூரணித்து சவுக்காரம், வளையலுப்பு, இந்துப்பு வெண்காரம், கரியுப்பு வகை பலம் கால் ஒக்கச்சேர்த்து நாலு ஜாமம் தேன்விட்டாட்டி சுண்டைக்காயளவு காலை மாலை ஏழு நாள் கொள்ள விப்புருதி, ஓடுவிப்புருதி, பக்கவிப்புருதி, கல்லுவிப்புருதி, குடல்விப்புருதி முதலியவைபோம், உப்பு புளிப்பு புகையிலை கசப்பு ஆகாது.

### பூரமெழுகு,

பூரம் பலம் 1, கெந்தி இரண்டு ரசச்செந்தூரம் ஒன்று இவைகளைத்தேன்விட்டாட்டி பதினாலு உருண்டைசெய்து அந்தி சந்தி ஏழுநாள் கொடுக்க பிரமேகம் நுணுக்கிரந்தி பரங்கிப் புண், குன்மம், சூலை ,கைகால் முடக்கு, லிங்கப்புத்து, பல்லரணை, கன்னப்பிளவை. முதலியவைபோம். பத்தியம் சுட்புளி வறுத்த உப்பு கூட்டவும்.

### மேகநிவாரணி மெழுகு,

சித்திரமூலவேர்ப்பட்டை பூரம், ஓமம், பனைவெல்லம் இவைகளைச் சமன்கொண்டாட்டி மிளகளவு குளிகைசெய்து பத்துநாள் அந்திசந்தி உண்ண நீங்காவெள்ளை, குழிப்புண் கொருக்கு, கிரநதி முதலியவைபோம். இச்சாபத்தியம்.

### வேறு பூர மெழுகு.

பூரம், நெல்லிகெந்தி, சித்திரமூலவேர்ப்பட்டை, சுக்கு,திராட்சிப்பழம் இவைகளைச் சமன்கொண்டு தேன்விட்டாட்டி அரை

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

சுண்டக்காய் வீதம் பத்துநாள் கொள்ளவும் குழிப்புண், பிரமே மேகம் முதலியவைபோம்.

## வீரமெழுகு.

முருங்கைப்பூச்சார், தண்ணீர்மிட்டான்சார், முள்ளங்கிச் சார் வகைக்குப்படி அரை வீரம் பலம் ஒன்று ஷை சாற்றில் பொடித்துப்போட்டு மூன்றுநாள் ரவியில்வைத்து ஏடுகட்டிய பின் அவ்வேட்டை நீக்கி அடுப்பேத்தி பதமாயெரித்துக் கிண்டி மெழுகாக்கி அந்தி சந்தி கடலைப்பிரமாணம் பெலமறிந்து தக்க அனுபானத்தில் கொடுக்கவும் சூலை, உப்பிசம், குடைச்சல் பிடிப்பு முதலியவைபோம். பத்தியம் சுட்டபுளி வறுத்தவுப்பு.

## பஞ்சரச மெழுகு.

இலிங்கம், ரசம், வீரம், பூரம், ரசச்செந்தூரம் வகைக்கு களஞ்சி இரண்டு பொடித்து ஓமம் பலம் ஒன்றேகால் கீழ்மேலிட்டு சற்று தீபாக்கினியாயெரித்து ஓமம் சிவந்த சமயத்தி லிறக்கி கல்வத்திட்டு மலைத்தேனால் நாலு ஜாமம் விடாமலாட்டி சிறு சுண்டைக்காய் வீதம் குளிகைகட்டி அந்தி சந்தி ஏழு நாள் தாக்க சூலை, குன்மம், பவுத்திரம், ஆராதரிணம், குட்டம் இருதடிப்பு, வெள்ளை, அரையாப்பு, யோனிச்சூலை, கண்டமாலை, சூசிகாவாயுவு, யோனிப்புற்று, லிங்கப்புற்று, கரபாதஜன்னி, புடை, சொரி, சிரங்கு, கருமேகம், விஷபேதி, விஷநீர்ப்புத்து, பிறவீச்சு, மேற்சுவாசம், சுரோணிதவாயுவு முதலியவைபோம், பத்தியம் சுட்டபுளி வருத்தவுப்பு.

## சூதமெழுகு.

வாலைரசம் துலா இரண்டு குல்கந்து துலா மூன்று ஒன்று சேர்த்து சூதம் மறையும் வரையிலாட்டிய பின் அதிமதுரத்தூள் துலா ஒன்று கூட்டி மறுபடியுமாட்டி மூன்று பயரளவு காலை மாலை பத்துநாளுண்ண மேகவிரணம், கீல்வாதம், பக்க சூலை, தனுர்வாய்வு முதலியவைபோம். கடுகெண்ணை நீக்கவும்.



## வேறு வீரமெழுகு.

வீரம், பூரம், லிங்கம், திரிகடுகு: தாளிசப்பத்திரி வகைக்கு விராகனெடை ஒன்று லவங்கம் விராகனெடை அரை சுத்தித்தவாளம் இரண்டு இவைகளைக் கல்வத்திட்டு மலைத்தேனால் இரண்டு ஜாமமாட்டி மெழுகு பதத்தில் வழித்து மிளகு ஒன்று அல்லது இரண்டளவு நலல வெல்லத்தின் மத்தியில் வைத்துவிழுங்கச் செய்ய வாய்வு, சூலை, மேற்சுவாசம், கால் கைபிடிப்பு, ஜன்னி முதலியவை நீங்கும் பத்தியம்வியாதிக்குத் தக்கவைகளாம்.

## நீலகண்ட வாலைரசமெழுகு.

கலியாணமுருங்கிலைச்சாற்றிலும், தழுதாழைச் சாற்றிலும் வைத்தெடுத்த வாலைரசம் விராகனெடை ஒன்று இலவங்கப்பட்டை பலம் கால் கல்வத்திட்டு மல்லிகையிலைச்சாற்றால் இரண்டு ஜாமமாட்டி வழிக்குந்தருணத்தில் தேன்விட்டு மெழுகு பதமாய் மத்தித்து குன்றிபெடை சுக்கு லேகியத்தில் வைத்து அந்தி சந்தி யுண்ண சூலை, பிடிப்பு, கருங்கிரந்தி, செங்கிரந்தி செநதாழை, கீல்வாதம், தமரகவாதம், சச்சுவாதம், முதலியவை, நீங்கும். பத்தியம் புளி, புலால். உவர்ப்பு, நீக்கவும்.

## வேறு வாலைரசமெழுகு.

வாலைரசம் பலம் ஒன்று விடத்தாரிவேர்ப்பட்டை பலம் ஒன்று இவைகளை கண்டங்கத்திரிபழச்சாற்றால் பனிரெண்டு சாமம் சூதம் ஜனிக்காதளவாட்டி மெழுகுபதத்தில் வழித்து புதனஞ்செய்து பின் விடத்தாரிவேர் பட்டையை வெந்நீர்விட்டரைத்து கழற்சியளவில் மேற்படி மெழுகை தூதுளங்காய் பிரமாணம் வைத்து பெலன்களுக்குத் தக்க அளவாய் 5 7 9 நாள் அநதி சந்தி யுண்ண குன்மம். சூலை, கை கால்முடக்கு, பவுத்திரம், சச்சு கைக்கருப்பு, மேகரோணங்கள் முதலியவைபோம். பத்தியம் வியாதிகளுக்குத் தக்கவைகளாம்.

## பூரபலாதி.

ஓமம், பூண்டு, நல்லவெல்லம், சேராங்கொட்டை, கொப்பரைக்காய், வகைக்கு பலம் ஒன்று மெழுகுபோலிடித்து பூரம் விராக

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

னெடை ஒன்று சேர்த்து கழற்சிக்காயளவு அந்தி சந்தி ஏழு நாள் கொள்ள கிரந்தி, குன்மம், சூலை, கால்பிடிப்பு, வாய்வு, கைகுடைச்சல், விற்புருதி, கண்டமாலை, துடைவாழை, அரையாப்பு, துடிசூலை, இடிசூலை, வெடிசூலை முதலியவை நீங்கும். கடுகெண்ணெய் நீக்கவும்.

## களிம்புகள்.

### கெந்தகக்களிம்பு.

நெல்லிகெந்தகம் பலம் ஒன்று பன்றிநெய் பலம் நாலு இவைகளை ஒன்றுகலந் தாட்டி சொரிசிரங்குகளுக்கு பூசவும்.

### பூரக்கிலேதம்.

ரசபஸ்பம் கிரேயின் 15 கற்சுண்ணத்தின் சலம் ஆழாக்கு ஒண்ணேமுக்கால்விளம்பிசின் உளுந்து நிறைபத்து இவைகளைக் கலந்து இதில் மெல்லிய துணியை நனைத்து விரணத்தின்மேல் போட்டுக்கொண்டுவந்தால் ஆறிவிடும்.

### பூரக்களிம்பு.

ரசகற்பூரம் துலா ஒன்று கற்சுண்ணம் துலா அரை தேன்மெழுகு துலா ஆறு இவைகளை ஒன்று சேர்த்தரைத்து ரிணங்களுக்குப் போடவும் அல்லது பூரம் விராகனெடை இரண்டு பன்றிநெய் விராகனெடை ஏழு ஒக்கச்சேர்த்துக்கொள்ளவும்.

### ரசக்களிம்பு,

ரசம் பவுன் ஒன்று பன்றிநெய் பவுன் ஒன்று ஆட்டுக்கொழுப்பு அவுன்ஸ் ஒன்று இவைகளைச்சேர்த்து ரசம் மறைய ஆட்டி மேகவிரணம் மூட்டு வீக்கங்கள கட்டி முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

### குங்கிலியக்களிம்பு.

குங்கிலியம் பலம் பதினைந்து மெழுகு பலம் பதினைந்து இவைகளை சிறுதீயிட்டுருக்கி அதில் நல்லெண்ணெய் புட்டி ஒன்று சேர்த்து சூடாயிருக்கும்போதே வடிகட்டிக்கொள்ளவும் இதனுடன் கந்தகம், காசுகட்டி, வெண்காரம் இசைகளைச் சேர்



த்து களிம்புசெய்து, விரணங்கள், ஆராத அழிப்புண், மேகரணம் இவைகளுக்கு உபயோகித்தால் சிவந்தநிரம்உண்டாகி சீக்கிரம் ஆறிவிடும்.

### பரங்கிச்சாம்பிராணிக்களிம்பு,

தேன்மெழுகு, எள்ளெண்ணெய், பரங்கிச்சாம்பிராணி இவைகளைச் சமன்சேர்த்து சிறுதீயிட்டுருக்கிவடிகட்டி இரணங்களுக்கு மேற்பூச ஆறும்,

### வங்கக்களிம்பு.

ஈயச்சிந்தூரம் விராகனெடை ஆறு பூரம்அரை ஒன்றுபடுத்தி பனிரெண்டு விராகனெடை எள்ளெண்ணெய்யிட்டுஅடுப்பேற்றி துழாவி களிம்பு பதத்திலிறக்கி குளிர்ச்சியாகும்வரைகிண்டி வெட்டு காயம், இரணம், ஆருப்புண் முதலியவைகளுக்கு மேற்பூசத்திரும்.

### ஈயவெள்ளைக்களிம்பு.

ஈயவெள்ளை, பலம் எட்டு எள்ளெண்ணெய் பதினாறு ஒன்றுபடுத்தி அடுப்பேற்றி துழாவிக்கொண்டே களிம்புபதத்தில் முப்பது பலம் ரோசனம் கூட்டி எறித்து பதத்திலிரக்கிஆறும்வரையில் துழவிக்கொண்டிருக்கவும் இவைகளை கட்டி வெட்டுக்காயம், முதலியவைகளுக்கு பிளாஸ்திரியிடத்திரும்.

## குழம்புகள்.

### அகத்தியர் குழம்பு.

காயம், இந்துப்பு. மஞ்ஞேசிலை,வெண்காரம், சூதம், கடுகு, திப்பிலி, வாளம், கருஞ்சீரகம், தாளகம் இவைகளைச் சமன்கொண்டு நிம்பழச்சாற்றுலாட்டி பின் தேன்விட்டு குழம்புசெய்யவும்.

### சம்பீரக்குழம்பு.

இலிங்கம் விராகனெடை ஒன்றை குமரிச்சாற்றில் நனைத்த சீலையால் 7-கவசமிட்டு பத்துபலம் தூக்குள்ள எருவில் புடம் வைத்து பின்சீலையகற்றி கல்வத்தாட்டி பீங்கான் பாத்திரமேற்றி



FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

ஆறுபலம் நிம்பழச்சாற்றை கொஞ்சங்கொஞ்சமாய் சுருக்கிட்டு தென்னம்பாளையிலெரித்து குழம்பு பதத்தி லிரக்கிக்கொள்ளவும், உஷ்ணமதிகரித்தால் குழம்பு கருத்துவிடும் பதப்படுத்திய குழம்பை சுப்பலால் எடுத்து நாவின்மேலடிக்கடி தொட்டுவைத்தால் சுரங்களில் காணுகிற வரட்சி தாகம் நீங்கி ஜலவூறும்.

இலிங்கக்குழம்பு.

இலிங்கம் நாலு, பூரம் இரண்டு, வெண்காரம் ஆறு, சித்தாணிப்பருப்பு ஆறு வாளம் பனிரெண்டு இவைகளை மலைத்தேனாலாட்டி குழம்புபோற்செய்து தேகத்திற்குத் தக்க அளவாய் கம்மாறு வெற்றிலையில் வைத்துண்ண சுரம் மலச்சிக்கல் முதலியவைபோம். பத்தியம் எலும்புசூப் கொடுக்கவும்.

வேறு இலிங்கக்குழம்பு,

இலிங்கம்ஒன்று, சாம்பிராணி ஒன்று, சூடன்ஒன்று, ஓமப்பூ கால், சாம்பிராணிப்பூ கால் பூரம் அரிக்கால், இவைகளைக் கல்வத்திட்டு தீப்பறக்க மெழுகுபோலாட்டவும் கடலைப்பிரமாணம் கம்மாறு வெற்றிலையில் வைத்துண்ண சுரம், நாவரட்சி, கபம், ஈளை, ஜலதோஷம், வாய்வு, ஜன்னி பிரசவித்தவர்களுக்கு அழுக்கு முதலியவை போம்.

பெருங்குழம்பு.

| | |
|---|---|
| சுத்தித்தரசம் | அசம்தாகம் |
| கெந்தி | வெண்காரம் |
| நெரிவிஷம் | இலவங்கம் |
| நாபி | ஏலம் |
| அரிதாரம் | சுக்கு |
| இலிங்கம் | மிளகு |
| மனோசிலை | திப்பிலி |
| காயம் | இநதுப்பு |
| கடுகு | கார்கோல்வித்து |
| வெண்கடுகு | கருஞ்சீரகம் |
| நெல்லி | கடுக்காய் |
| திராக்ஷி | ரோகணி |

வகைக்கு களஞ்சி ஒன்று, சுத்தித்தவாளம் களஞ்சி இருபத்திநாலு, வாளத்தை இரண்டுபங்குகளாக்கி ஒருபங்கை வறுத்தும்



மற்றொருபங்கை பச்சையாகவுஞ் சேர்த்து இரண்டு ஜாமம் தேன்விட்டாட்டி குழம்புபோல் செய்துகொள்ளவும்.

அநுபானங்கள்.

ஷை மருந்தில் குன்றியெடை இஞ்சிச்சாற்றில் வைத்துண்ண வாதசுரமும் நிம்பழச்சாற்றில் பித்தசுரமும், முருங்கைப்பட்டைச்சாற்றில் சேத்துமசுரமும், பஞ்சமூலக்கியாழத்தில் ஜன்னியும், திப்பிலி, தாளிசம், லவங்கம் சேர்ந்த சூரணத்தில் வாதகபரோகமும், கொடிவேலிக்கியாழத்தில் சூலை பதினெட்டும், நற்சங்கன்கியாழத்தில் அட்டகுன்மங்களும், தேங்காய்ப்பாலில், காசரோகமும், சிறுசின்னிச்சாற்றில் சகல விஷங்களும், கூழ்ப்பாண்டக்கிருதத்தில் பிரமேகமும், பரங்கிப்பட்டைச்சூரணத்தில் மேகரணங்களும், சூரத்துநிலவாகைக்கியாழத்தில் குடல்பெரட்டல், உதிரக்கழிச்சலும், பேய்ப்பீர்க்கஞ்சாற்றில் மத்தித்து கண்ணில் இட்ட கார்க்கோடகவிஷம், பேசாதஜன்னியும், கம்மாறுவெற்றிலைச்சாற்றில் மத்தித்து கண்ணில் இட்ட சுகஜன்னியினால் கண்ட கண்சிவப்பும், சுக்குகியாழத்தில் அஷ்டகணம் அஷ்டமாந்தம், மூக்குமாந்த முதலியவைகளும் போம். அன்றி வெள்ளெருக்கன்பாலில் மத்தித்து அரையாப்பு, கண்டமாலை, துடைவாழை, பக்கப்பிளவை, பவுத்திரம், அடைப்புற்று, மேகப்புற்று, மேகக்கட்டி, சிலந்திக்கட்டி முதலியவைகளுக்கு மேற்பூச நீங்கும். திரேகபெல மறிந்து பேதிக்கு 1,2, குன்றியெடை தாக்கவும். பேதி யதிகமானால் சிறுகீரைவேறும், சீரகமும் கியாழமிட்டு கற்கண்டுசேர்த்து கொடுக்கத்தீரும் பேதிகட்டாவிடில் ஆவின்பாலும் நிம்பழச்சாறு மீயவும். இச்சாபத்தியம்.

பேய்க்கும்மட்டிக்குழம்பு.

பேய்க்கும்மட்டிச்சார், படி 1, குழம்பு பதத்தில் காய்ச்சி கல்வத்தேற்றி பெருங்காயப்பொடி விராகனெடை 10, கடுகுரோகணி, வெங்காரம், இந்துப்பு, ஏலம், வால்மிளகு, இவைகளின் தூள் வகைக்கு விராகனெடை 2, சேர்த்தரைக்கவும் 2 ,3, சுண்டைக்காய் அளவு ஆகாரத்தில் கொடுக்க சூதகவாய்வு, சூதகஜன்னி மலபந்த முதலியவைபோம்..

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

### உலகநிரஞ்சனக்குழம்பு.

நல்லசலம் பலம் 36 ல், புதுபுளி பலம் 12, சேர்த்து கரைத்து வடிகட்டி 36, பலம் சீனி கற்கண்டு கலந்து பாகுசெய்து இறக்கி ஆறியபின் மூங்கிலுப்பு, ஏலம், பந்நீர்ப்பூ, சோம்பு, சீரகம், தனியா இவைகளின் சூரணம், வகைக்குப் பலம் அரை குங்குமப்பூ பலம் கால் பந்நீர் பலம் 2, ஒன்றுபடுத்தி சிறுவிரலால் தொட்டு 15, நிமிஷத்துக்கொருவிசை நாவில்தடவ சுரத்தில் காணுகிற நாவரட்சி, அரோசகம் முதலியவைபோம்.

### மிளகுவிரோசனம்.

ஐந்துபலம் மிளகை கள்ளிமரத்தைத் துளைத்துவைத்து மேற்படி மரத்துண்டினால் மூடி வலுக்கச் சீலை சுற்றி சாணமேற்றி இருபத்தைந்துநாள் சென்றெடுத்து தாம்பூலத்தில் 2, 3, மிளகு வைத்துண்ண பேதியாம்.

## அஞ்சனம் ஆக்கிராணம் கலிக்கம்,

### பாசுபதாஞ்சனம்.

| | |
|---|---|
| மரமஞ்சள் | அதிமதுரம் |
| கடுக்காய் | தான்றிக்காய் |
| நெல்லிக்காய் | பொன்னாங்கண்ணி |
| கரிசலை | முசுமுசுக்கைவேர் |
| வேப்பன்யீர்க்கு | வகைக்கு விராகனெடை 1. |

இளநீர் படி அரை இவைகளை கியாழமிட்டு ஆழாக்காக சுண்டவைத்து வடியிட்டு அதில் ஆழாக்குத்தேனும் பச்சைகற்பூரம் விராகனெடை அரையும் ஒன்றுபடுத்தி தலைவலி, கண்ணோய் இவைகளுக்கு விழிகளில் திட்டவும்.

### நேத்திராஞ்சனம்.

மதுரம் பலம் அரை மரமஞ்சள் அரை திரிபலை ஒண்ணரை இவைகளை பொடித்து அரைபடி யிளநீர்க்கலக்கி கால்படியாகச் சுண்டித்து பிசைந்து வடியிட்டு மறுபடியுங் காய்ச்சி பாகுபதத்தில் தேன்பலம் ஒன்று சயிந்திய லவணம் விராகனெடை அரை பச்சைக்கற்பூரம் விராகனெடை கால் தூள்செய்து கலந்து விழிகளிலஞ்சனமிட கண்ணோய்கள்போம்.



### சம்பிராஞ்சனம்,

நிம்பழம் ஒன்றை கயற்றில் கோர்த்து சுற்றும் லவங்கங்களைப் புதைத்து நவநீதத்தால் மூடி சலமிருக்கும் புதுப்பாண்டத்தின் அடியில் படாமல் தொங்கலிட்டு நாடோறும் பழயசலத்தை நீக்கி புதியசலம் மண்டலம் வார்த்து பின் நவநீதத்தை வழித்து தாம்பரச்செப்பில் பதனஞ்செய்து கண்ணோய்களுக்குத் தீட்டவும்.

### அஞ்சனக்கலிக்கம்.

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | வசம்பு |
| உள்ளி | சாரணைவேர் |
| மகிழம்வித்து | வாளவித்து |
| கழல்மணி | பீதரோகணி |

இவைகளைச் சமன்கொண்டு கல்வத்திட்டு தேசிச்சாற்றால் மைபோலாட்டி நீளமாய்க் குளிகைசெய்து நிழலுலர்த்தி கலசப்பாலிலுரைத்து விழிகளில் திட்ட மண்டைசூலை, முகக்கோணல், சன்னி, தலைவலி முதலியவைபோம்.

### வேறு கலிக்கம்.

வெண்காரம், இந்துப்பு, துத்தம், துருசு, சங்கு, மிளகு, சுக்கு, வகைக்கு கழஞ்சி 1, இவைகளை தும்பையிலைச்சாற்றால் ஆட்டி இரண்டங்குல அளவு மாத்திரை செய்து நிழலுலர்த்தி பாவையர் பாலாலுரைத்து இமைக்குள் திட்ட ஜன்னி, தலைவலி, புறங்கழுத்துவலி முதலியவைபோம்,

### மகாஜன்னிகளுக்கு காலகாலக்கலிக்கம்.

காயம், காரம், அரிதாரம், கல்நார், கல்மதம், இந்துப்பு, திரிகடுகு, வாளம், சூதம், இவைகளைச் சமன்கொண்டுபேய்ப் பீர்க்கன்சாற்றாலாட்டி உண்டைசெய் துலர்த்தி காயஞ்சேர்ந்த உமிழ் நீரால் விழிகளுக்குத் திட்ட ஜன்னி, கண்ணமரம், மாலைக்கண், பிடரிநோய், காற்கோடகவிஷம், சில்விஷம் கண்ணெழுச்சி, கண்மங்கல் முதலிய நேத்திரநோய்கள் தொண்ணூற்றாறும் நீங்கும்.

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

### நசியம்,

தும்பைப்பூ, கொழுந்து, துளசிக்கொழுந்து, நொச்சிக்கொழுந்து இவைகளைச் சமன்கொண்டு சார்பிழிந்து கோரோசனை குங்குமப்பூ, அதிலிழைத்து மூக்கிலிட ஜன்னி, சயித்தியம் பித்தம்போம்.

### வேறு நசியம்.

தும்பையிலைச்சார், வெள்ளெருக்கன்பால் இவைகளில் கோரோசனை, குங்குமப்பூ யிழைத்து நாசியில் நசியமிட சில்விஷம் பீனிசம், ஜன்னி முதலியவை நீங்கும்.

### வேறு நசியம்.

கதலிப்பழம், மிளகு. இந்துப்பு, அத்திப்பால், முலைப்பால், எருக்கனிலைச்சார், இவைகளை ஒன்றுபடுத்தி நாசியிலிட கபாலவலி, பித்த பைசாசகுணங்கள் நீங்கும்.

### ஒண்டி தலைவலிக்கு நசியம்.

சவுரிப்பழம். காயம், சமன்சேர்த்து பாவையர்பாலாலாட்டி குளிகைசெய்து மேற்படி பாலிலுரைத்து நசியமிடவும்.

### பீனிசத்துக்கு நசியம்.

வெள்ளெருக்கன்பூ, மாதுளம்பூ, வெண்காரம், குங்குமப்பூ இவைகளைக் கல்வத்தாட்டி முலைப்பாலால் மத்தித்து நாசியில் விட பீனிசம்போம்.

### ஜன்னிதலைவலிக்கு புகை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சீரகம் | விரகனெடை | 10 | கழற்சிப்பருப்பு | ,, | 5 |
| சித்தரத்தை | ,, | 9 | லிங்கம் | ,, | 4 |
| காயம் | ,, | 8 | மிளகு | ,, | 3 |
| சாம்பிராணி | ,, | 7 | ஓமம் | ,, | 2 |
| சுக்கு | ,, | 6 | சாரம் | ,, | 1 |

இவைகளை வெள்ளெருக்கன்பாலிலும், வேளைச்சாற்றிலும், ஆட்டி திரிசெய்து புகையிட ஜன்னி, தலைவலி, பித்தமயக்கம், கிறுகிறுப்பு சுழளை மூர்ச்சைபோம்.



### இரணங்களுக்குபுகை.

கொள்ளுக்காய் வேளைவேர், பட்டை, நிம்பழச்சாற்றிலூர வைத்து, உலர்த்திப் பொடித்து சுங்கானில் பாதிதூள் வைத்து தூள் எடைக்கு பாதிலிங்கம் வைத்து மேலும் மேற்படி தூள் கொட்டி நெருப்பிட்டு புகைபிடிக்கவும் அப்புகையை ஐந்துவிசை உள்ளுக்கு விழுங்கவும் இப்படி ஐந்துநாள் உண்ணவும் கண்வலி, கண்ணோய், விற்புருதி, கண்டமாலை, அரையாப்பு, சூலை, பிளவை, பல்லரணை, லிங்கப்புற்று ரிணங்கள் முதலியவைபோம். பத்தியம் பால்சாதம் ஆறுவதுநாள் ஸ்நானம் செய்து ஏழாவதுநாள் உப்புகூட்டி எட்டாவதுநாள் புளிசேர்க்கவும்.

### நசியம்

| | |
|---|---|
| தூதுவளைவேர் | மிளகருணைவேர் |
| கண்டங்கத்திரி | ஈயத்தண்டு |
| இஞ்சி | சித்திரமூலம் |
| மேனி | ஆடுதீண்டாப்பாளை |
| வெள்ளெருக்கன் | ஜோகிவேர் |
| சுரைவேர் | சங்கன்வேர் |
| சுக்கு | அக்ராகாரம் |
| சித்தரத்தை | பேரரத்தை |
| ஓமம் | கருஞ்சீரகம் |
| கடுகுரோகணி | குராசானி |
| கடல்நுரை | வால்மிளகு |
| திரிமஞ்சள் | தேசாவரம் |
| திப்பிலிமூல்ம் | அதிவிடயம் |
| திப்பிலி | வேப்பன்வித்து |
| சாம்பிராணி | வசம்பு |

வகைக்கு விராகனெடை ஒன்று இவைகளைச் சூரணித்து அத்திப்பால்,வெள்ளாட்டு நீருங்கலந்து பிசரிவைத்துலர்த்தி பொடித்து பேய்ச்சுரக்குடுக்கையில் பதனஞ்செய்து பொடியை உபயோகிப்பதற்கு பதில் இதில் ஒரு சிட்டிகை நாசிக்கேற்ற பித்தம், தலையிடிப்பு, கபாலசூலை, நீர்ப்பாய்ச்சல், ஜலதோஷம்,மண்டைகுத்து முதலியவை நீங்கும் அன்றி மேற்படி மருந்தை கடிதத்தில் சுருட்டி வேப்பெண்ணெயில்தோய்த்து கொளுத்தி ஆற்றி நாசிக்குப்புகையேற்றவும்,

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

வேறு இரணங்களுக்குப்புகை,

ஷை ங்சியமருந்தும் நவாச்சாரமும் வகைக்கு பண வெடை சேர்த்து பின் லிங்கம், அரிதாரம், பூரம், இலைகள்ளிப் பட்டைத்தூள். கழுதைலத்திபொடி வகைக்கு கழஞ்சு 1, இவைகளைத் திருகுகள்ளிப்பாலாலாட்டிநிழலுலர்த்திபொடித்து புங்கன்தூள் சமன்சேர்த்து கொஞ்சம்பொடியை அனலிலிட்டு முகத்திற் படாமல் தேகத்தில் புகைகாட்ட வெடிசூலை, மேக வட்டை, சுடுக்கிரந்தி, பவுத்திரம் நீங்கும்.

## எண்ணெய்கள்.

### பூவரசங்காயெண்ணெய்.

| | | |
|---|---|---|
| பூவரசங்காய்ச்சாறு படி | 4 | சங்கங்குப்பி |
| கழற்சியிலை | | மெருகன்கிழங்கு |
| துத்தி | | வாதமடக்கி |
| கோரைக்கிழங்கு | | அசுவகெந்தி |
| கெருடன்கிழங்கு | | பெருமரப்பட்டை |
| கோழியவரை | | பொடுதலை |

வகைக்குச்சார் படி ½,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூவரசன்பட்டை | பலம் | 10 | பெருமரப்பட்டை | பலம் | 4 |
| வெட்டிவேர் | ,, | I | ஒதியம்பட்டை | ,, | 2 |
| அமுக்கராக்கிழங்கு | ,, | 5 | கருங்காலிபட்டை | ,, | 10 |
| மாவிலிங்கப்பட்டை | ,, | 10 | செங்கத்தாரிபட்டை | ,, | 10 |
| நீலிவேர் | ,, | 10 | வேப்பன்பட்டை | ,, | 10 |
| மெருகன்கிழங்கு | ,, | 10 | கொட்டைகரந்தைபட்டை | | 10 |
| இலவம்பட்டை | ,, | 10 | நாவல்பட்டை | ,, | 10 |

இவைகளை நையயிடித்து பாண்டத்தேத்தி எட்டு படிஜலம் வார்த்து 2 படியாகச் சுண்டித்து வடித்து ஷை சாற்றோடுகலந்து,

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | கார்போகவரிசி |
| காந்தம் | தாளகம் |
| கெல்லிகெந்தி | கடுகுரோகணி |
| காட்டுசீரகம் | வாலுளுவை |

வகைக்குப் பலம் அரா

பொடித்துப்போட்டு சிற்றுமணக்கெண்ணெய் மூன்றுபடி விட்டுக்கலக்கி மெழுகுபதத்தில் காய்ச்சி வடியிட்டு கரண்டிவீதம் பத்துநாள் கொள்ள அரிகிரந்தி, சொரிகிரந்தி, எரிகிரந்தி, அத்



திக்காய்கிரந்தி, ஆலங்காய்க்கிரந்தி, நுணுக்கிரந்தி, கொட்டக்கிரந்தி, புண்கிரந்தி, வெடிகிரந்தி, பிரமேகம், பதினெண்சூலை, பரங்கிப்புண், வரச்சூலை, கையூரல், கரப்பான், வெடிசூலை, குட்டம், மண்டைவாதம், வாய்வு, அந்தரவாதம், அழல்மேகம், வீக்கம், கருங்கிரந்தி, செங்கிரந்தி முதலியவை போம். பத்தியம் ஆவின்பால், முருங்கைப்பிஞ்சு, வழுதலை, பச்சைபயர் புடலம்பிஞ்சு, முளைக்கீரை முதலியவை ஆகும் முருங்கிலைப்போட்டு வருத்த வுப்பைக்கூட்டவும் புளி புகை தள்ளவும்.

### சகலமேகசம்மாரி எண்ணெய்.

| | |
|---|---|
| சின்னி | நற்சங்கன் |
| பீச்சங்கன் | காசினி |

சமூலரசம் வகைக்கு படி-I.

| | |
|---|---|
| பொடுதலை | கிழாநெல்லி |
| வல்லாரை | பிரமதண்டி |

இவைகளின் சார் வகைக்கு ஆழாக்கு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெங்காயரசம் | படி | 1 | கழுதைலத்தி வெந்நீரில் போட்டுப் பிழிந்த ரசம் | படி | 2 |
| கரசலாங்கண்ணி ரசம் | ,, | 1 | கழுதைப்பால் | | ½ |
| தும்மட்டிக்காய்ரசம் | ,, | 1 | புளியாரைரசம் | ,, | 1 |
| வல்லாரைரசம் | ,, | 1 | பிரமியிலைரசம் | ,, | 1 |
| செருப்படைரசம் | ,, | 1 | சிறுசெருப்படைரசம் | ,, | 1 |
| கருநொச்சிரசம் | ,, | 1 | பொன்னுங்கண்ணிரசம் | | 1 |
| மணத்தக்காளிரசம் | ,, | 1 | நுணுரசம் | ,, | 1 |
| பொன்னுவாரைரசம் | ,, | 1 | ஆதொண்டைரசம் | ,, | 1 |
| கிரந்திபூண்டுரசம் | ,, | 1 | வெள்ளறுகுரசம் | ,, | 1 |

சிவனார்வேம்பு வீசை ஒன்று பெரிய பாண்டத்திலிட்டு நாழிபடி ஜலம்விட்டு காய்ச்சி ஒருபடிக்கு சுண்ட எரக்கி வடித்து

| | |
|---|---|
| ஆலம்பட்டை | அரசம்பட்டை |
| புங்கம்பட்டை | பூவரசம்பட்டை |
| பூவரசங்காய் | மாம்பட்டை |
| அழிஞ்சில்பட்டை | நுணாப்பட்டை |
| சித்திரமூலப்பட்டை | அத்திப்பட்டை |

வகைக்கு பலம் 10.



FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

இவைகளை வுரலிலிட்டு ஒன்றிரண்டா யிடித்து ஓர்பெரிய பாண்டத்தில்போட்டு 20-படி ஜலம் கொட்டி 2-படி ஆகக்காச்சி யிரக்கி பிழிந்து வடிகட்டி எண்ணெய் படி 16-ல் மேற்கண்ட சாறுகளும் கியாழமுங்கலந்து பெரிய சாலில்வூத்தி கலக்கச்செய்து அடுப்பேற்றி ஒரு ஜாதி விறகால் சிறு தீயாக 10-நாள் எரித்து கடுகு திரண்ட பதத்திலிரக்கி பரங்கிச்செக்கை தூள் பலம்-10, நன்னாரிவேர் தூள் பலம்-10. வால்மிளகு தூள் பலம் இரண்டரை மேற்படி எண்ணெயிற்கலந்து 40-நாள் நெற்புடம் வைத்து 1-2-உச்சிகரண்டி வீதம் 5-நாள் இரண்டுமுறை உண்ண வெள்ளை, கொருக்குப்புண், யோனிப்புற்று, லிங்கப்புற்று, கிரந்தி, அரையாப்பு, துடைவாழை, கண்டமாலை, மதுமேகம் தந்திமேக முதலிய 21-மேகங்களும் நீங்கும். பத்தியம் சுட்டபுளி வறுத்தவுப்பு கூட்டவும்.

### மூலைப்பால் எண்ணெய்.

சித்தாமணக்கெண்ணெய் படி அரை மூலைப்பால் படி அரை ஒன்றுபடுத்தி ஊனுங்கொடி, நுணிக்கொழுந்து கொடி, வகைக்கு பலம் இரண்டு பழைய வெங்காயம் பலம் ஐந்து சிறுக அறிந்து ஷை எண்ணெயிற்கலக்கி பதமாய்க்காய்ச்சி வடித்து சிறுவர்களுக்கு பெலமறிந்து கால் அரைபலம் வீதம் கொடுத்துவர கணம், இரத்தகணம், சீதக்கழிச்சல், இரத்தகழிச்சல் நீங்கும். வாலிபர்களுக்கு மூலச்சூட்டை நிவர்த்திக்கும் பத்தியம் புளி புலால் நீக்கவும்.

### சம்பீர எண்ணெய்.

| | | | |
|---|---|---|---|
| சித்தாமணக்கெண்ணெய்படி | 1 | பழச்சார் படி | அரை |
| ஈருள்ளிச்சார் | ½ | பசுவின்பால் | 1 |
| கடுக்காய்த்தோல் | 40 | கோஷ்டம் விராகனெடை | 1 |
| அதிமதுரம் பலம் | 1 | சம்பங்கிமொக்கு பலம் | 1 |
| சன்னலவுங்கப்பட்டை | 1 | சாதிக்காய் | 1 |
| ஏலம் | 1 | கிராம்பு | 1 |
| வெந்தயம் | 1 | சீரகம் | 1 |

இவைகளில் கற்க வகைகளைச் சூரணித்து சம்பீரச்சாற்றுலாட்டி ஷை எண்ணெயிற்கலந்து பதமாய்க்காய்ச்சி வடித்து தேகத்



திற்குத்தக்க அளவாய் 3-5-7-நாள் கொடுக்க. மூலச்சூடு கணச்சூடு, காந்தல், சொறி, சிறங்கு, மேகச்சூடுகளுந் தீரும் இச்சாபத்தியம்,

### சகலகணமாந்த எண்ணெய்.

ஆமணக்கெண்ணெய் படி அரை வேலிப்பருத்திச்சார் படி அரை ஆவின்பால் படி அரை ஈருள்ளி பலம் கால் கூட்டியெரித்து பதத்தில் வடித்து பிள்ளைகள் பெலத்துக்குத் தக்க கரண்டியளவு 3-5-நாள் கொடுக்கவும். இச்சாபத்தியம்.

### கோரோசனை எண்ணெய்.

செண்பகப்பூ காசெடை-10. ஜாபத்திரி-1 முத்தக்காசு அரை கோரோசனை-3 இவைகளைப் பொடித்து விளக்கெண்ணெய் படி 1-ல் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து துட்டெடை குழந்தைகளுக்கு 5-நாள் கொடுக்க சுரங்கள், இருமல் சுழிகெணம், நீங்கும், அன்றி வெள்ளைப்பூண்டு, உசிலம்பட்டை, வசம்பு இம்மூன்றும் கியாழமிட்டு மாலையில்கொடுக்கவும்.

### மேகச்சூட்டுக்கு பொரியலெண்ணெய்.

நிலப்பனைக்கிழங்கு, சத்திசாரணைக்கிழங்கு. அமுக்கராக்கிழங்கு, வகைக்கு பலம்-2, மெருகன்கிழங்கு பலம்-1, வெங்காயம் பலம்-5, இவைகளைச் சிறு வில்லைகளாக்கி கற்றாழைமடல் பணிரெண்டின் சோற்றை ஏழுவிசை சுத்திசெய்து ஆமணக்கெண்ணெய் படி-2, விட்டுக்கலக்கி எரித்து கிழங்குகள் சிவந்த பதத்தில் முடக்கத்தான்இலை ஒருபிடி அவ்வெண்ணெயில் போட்டு இரக்கி வடியிட்டு சிறியகரண்டிவீதம் 3-5-7-நாளுண்ணவும். பத்தியம் வெள்ளாட்டிறைச்சி, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, வண்டக்காய் ஆகும். கெற்பிணிகளுக்கும் கொடுக்கலாம்.

### அவுரி எண்ணெய்.

ஆமணக்கெண்ணெய் படி-1 பாண்டத்திட்டு உரித்த பூண்டு வசம்பு, ஓமம், வகைக்கு பலம்-1 தட்டிப்போட்டு பின் அவுரியிலை பலம்-10 ஒக்கச்சேர்த்து சிவந்த பதத்தில் காய்ச்சி வடித்து தேகத்துக்குத் தக்கதாய் முக்கால் ஒரு பலம் வீதம் மாதத்திற்கு

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

1-3-5-நாள்கொடுக்கவும் அன்றி கெற்பஸ்திரீகளுக்கு மூன்றுமாத முதற்கொண்டு ஒன்பதாம்மாதவரைக்கும் மாதத்திற்கொருநாள் கொடுக்கவும் மேக காங்கையுள்ளவர்கள் 5-7-நாளுண்ணவும் குழந்தைகளுக்கு 3-5-நாள் உச்சிக்கரண்டிவீதம் உண்பிக்கவும். கெற்பந்தரிக்காதவர்களுக்கும், கெற்ப அழிகிணிகளுக்கும், கொடுக்க மிகநன்று. இச்சாபத்தியம்.

பல்லாதி எண்ணெய்.

ஆமணக்கெண்ணெய் படி-1 மூக்குவெட்டி சாணிப்பாலிலூர வைத்தெடுத்த சேங்கொட்டை-40 நீரடிமுத்து பலம்-2 கசகசா பலம்-2 பளிங்குசாம்பிராணி பலம்-1 பனைவெல்லம் பலம் நாற்பது இவைகளில் சேங்கொட்டையை எண்ணெயிலிட்டு சிவந்தபதமாய்க்காச்சி வடியிட்டு ஷை மூன்று சரக்குகளையும் பொடித்து பனைவெல்லத்தைப் பாகுசெய்து கலந்து பின்னும் எண்ணெயை விட்டுக் கிளரி கடுகுடன் வைத்துக்கொண்டு பெலமறிந்து அரை முக்கால் ஒருபலம் விதம் அநதி சந்தி மண்டலம் கிரமமாயுண்ண மேகப்புடை, மேகச்சொரி, மேகத்தடிப்பு, மேகத்திமிர், மேகச்சிரங்குகள்போம். பத்தியம் நெய், மோர், பால், இரைச்சிகளாகும் கிரந்திபதார்த்தம் தள்ளவும்,

புடைகளுக்கெண்ணெய்.

நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் வகைக்கு படி அரை நீரடிமுத்து பலம்-10, துத்தம், துருசு, கண்டங்கத்திரிப்பழம் நெல்லிகெந்தி, வகைக்குப் பலம் கால் இவைகளை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி தக்கஅளவாயுண்ணவும். இச்சாபத்தியம் -

முசுறுமுட்டை எண்ணெய்.

பாலில் ஊரவைத்து கழுவியெடுத்த பூநாகம் விளாங்காயளவு அவித்தெடுத்த சித்தண்டமஞ்சட்கரு 7-முசுறுமுட்டை படி கால் இவைகளில் முசுறுமுட்டையை சட்டியிலிட்டு வறுத்து ஷை இரண்டு சரக்குகளையும் ஒக்கச்சேர்த்து கடைந்து தயிலம் பிறந்த பக்குவத்தில் வேப்பெண்ணெய் படி அரைக்கால் இட்டு எரித்து பதத்திலிருத்துவைத்து பின்பு ஆமணக்கெண்ணெய் படி கால் இஞ்சிச்சார், இண்டிலை, கையாந்தகரை, தூதுவளை,

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010



வேலிப்பருத்தி வகைக்குச் சார் படி அரைக்கால் கலந்து சுக்கு சித்தரத்தை, வால்மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், கடுக்காய், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள் வகைக்கு பலம் கால், சித்திரமூலம், கண்டங்கத்திரி வகைக்கு பலம் அரைக்கால் இவைகளைப் பொடித்து இரண்டுபடி ஜலத்திலிட்டு இரண்டு ஆழாக்காயிரக்கி வடித்து ஒன்றுகலந்து எண்ணெயைப்பதமாய்க்காய்ச்சி இரண்டு எண்ணெகளையும் ஒக்கச்சேர்த்து உச்சிக்கரண்டி வீதம் சிறு குழந்தைகளுக்கு 5-நாள் கொடுத்துவர அஷ்டகெணம் அஷ்டமாநத: முதலியவைபோம்.

கரப்பனுக்கு புங்கம்பால் எண்ணெய்.

விளக்கெண்ணெய் பலம்-10, புங்கம்பால் பலம்-5, பாண்டத்திட்டு கொதிக்குஞ் சமயத்தில் பூண்டுபலம் அரை உரித்து வெங்காயம் பலம் கால் அறிந்து போட்டு மிளகு, வால்மிளகு, வெட்பாலைஅரிசி வகைக்கு பலம் அரை, வசம்பு பலம்-கால், சூரணித்துச்சேர்த்து மெழுகுபதத்தில் காய்ச்சி வடித்து குழந்தைகளுக்கு உச்சிக்கரண்டி யளவு 3-5-7-10, நாள் கொடுக்கவும் பத்தியம் பழையது, புளி, நீச்சு, கிரந்திபண்டங்கள் தாய்தள்ளவும்.

கெணத்தெண்ணெய்.

| | |
|---|---|
| சித்தாமணக்கெண்ணெய் படி 1 | ஆவின்பால் படி 1 |
| கற்றாழை | பொற்றலைகையாந்தகரை |
| கோவை | பொன்னாங்கண்ணி |
| புளியாரை | ஈருள்ளி |
| கற்பூரவள்ளி | ஓமவள்ளி |

வகைக்குச்சார்படி அரை எண்ணெயிற்கலந்து அடுப்பேற்றி கொதிவருந்தருணத்தில்.

| | |
|---|---|
| லவங்கம் | லவங்கப்பத்திரி |
| வெந்தயம் | கோஷ்டம் |
| கற்கடகசிங்கி | சோம்பு |
| சீரகம் | வெள்ளுள்ளி |
| ஜாதிபத்திரி | ஜாதிக்காய் |

வகைக்குகழஞ்சி-2, பொடித்துப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து ஆறியபின் கோரோசனம், குங்குமப்பூ, வகைக்கு கழ

ஞ்சு-2, சேர்த்து-10, நாள் அரைபலம் வீதம் சமன்முலைப்பால் சேர்த்து அனலில்காட்டி கொடுக்கவும்,

குளிர்ச்சி எண்ணெய்.

| | | | |
|---|---|---|---|
| சித்தாமணக்கெண்ணெய் படி | 1 | பேயம்பழரசம் | படி கால் |
| செவ்விளநீர் படி | 1 | பசும்பால் படி | 1 |

இவைகளை ஒன்றுபடுத்தி பரங்கிச்செக்கை தூள் பலம்-5, தனியா தூள் பலம்-3, சீரகத்தூள் பலம்-1, சேர்த்துபதமாய்க்காய்ச்சி வடித்து பலப்பத்தூள் பலம்-3, சிங்கிபஸ்பம் பலம்-2, சீனி சர்க்கரை அரை பலம் கலந்து கால் பலம் வீதம் காலையிலும் இரவில் உண்டபின்னும் அருந்த உட்சுரம், மேகச்சூடு தீரும் பத்தியமில்லை,

வேறு குளிர்ச்சி எண்ணெய்.

| | |
|---|---|
| ஈருள்ளி | மணத்தக்காளி |
| பொன்னாங்கண்ணி | பொடுதலை |
| கைபாந்தகரை | வெள்ளைக்கலியாணமுருக்கன் |
| முள்ளங்கி | பச்சைகொற்றுமல்லி |
| காசினி | செம்பருத்தி |

வகைக்குச் சார் படி அரைக்கால்,

இவைகளை ஒருபடி சிற்றாமணக்கெண்ணெயில் கலந்து சுத்தித்த கற்றாழைச்சோர் பலம்-10 வெந்தயம் பலம்-5 பழச்சார் படி அரைக்கால் ஒக்கச்சேர்த்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து கால் பலம் வீதம் அரைமண்டலமுண்ணவும் பத்தியமில்லை

நெய்கள்.

கெணமாந்தங்களுக்கு மாதுளைநெய்.

| | |
|---|---|
| புளிப்பு மாதுளம்பழச்சார் | குமரிச்சார் |
| தூதுவளைச்சார் | துளசிச்சார் |
| வேலிப்பருத்திச்சார் | ஈருள்ளிச்சார் |

வகைக்குப் படி அரைக்கால்,



| | | | |
|---|---|---|---|
| ஆவின்நெய் | படி கால் | சீரகம் | களஞ்சி 2 |
| கருஞ்சீரகம் | களஞ்சி 1 | ஜாதிக்காய் | 1 |
| திப்பிலி | 1 | அக்ராகாரம் | 1 |
| அதிமதுரம் | 1 | சந்தனம் | 1 |
| சாத்திரபேதி | 1 | ஏலம் | 1 |
| ஓமம் | 1 | கெருடன்கிழங்கு | 1 |
| ஆவாரை | 1 | மாசக்காய் | 1 |
| ஈசுரமூலி | 1 | கோரோசனை | 1 |

இவைகளில் கற்கவகைகளை நிம்பழச்சாற்றாலாட்டிக் கரைத்து பதமாய்க்காச்சி வடித்து பின் கோரோசனைக்கூட்டி குழந்தைகளுக்கு காசெடைகொடுக்கவும்.

சதாவேரி நெய்.

பசுவின் நெய் படி-1 ஆவின்பால் படி-2 தண்ணீர்மிட்டான் கிழங்கு சார் படி-3 ஒன்றுபடுத்தி சாதிக்காய், சாபத்திரி, கிராம்பு, மதுரம். கோஷ்டம், வகைக்குப் பலம்-1 பால்விட்டரைத்துக் கரைத்து பதமாய்க்காய்ச்சி வடித்து உச்சிக்கரண்டி வீதம் காலையிலும் இரவிலுண்ட பின்னும் கொடுத்துவர எலும்புருக்கி, அஸ்திவூஷ்ணம் மேகச்சூடு, பித்தச்சூடு முதலியவை தீரும்.

முசல்நெய்

முசல் ஒன்றை தோல் குடல் கவிச்சுபோக்கி பன்னிரண்டு நாழி சலம், விட்டு அறுநாழி சலமாய்ச் சுண்டக்காய்ச்சி வடித்து பின்,

| | |
|---|---|
| முன்னை | பாதிரி |
| மல்லி | பேராமல்லி |
| தூதுவளை | நெருஞ்சி |
| கண்டங்கத்திரி | ஆடாதோடை |

வகைக்கு வேர் பலம்-10.

இவைகளைக் கல்லுரலிலிடித்து பதக்குநீர்விட்டு இருநாழியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து ஷை கியாழத்திற் கலந்து ஆவின் நெய் நாழி ஒக்கச்சேர்த்து,

| | |
|---|---|
| மிளகு | சுக்கு |
| கடுக்காய் | மஞ்சள் |
| மதுரம் | அசுவகெந்தி |

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

| | |
|---|---|
| கொடிவேலி | திப்பிலி |
| கற்கடகசிங்கி | கோஷ்டம் |
| இந்துப்பு | கண்டங்கத்திரி |
| பேரீச்சு | |

வகைக்கு பலம் 1

பொடித்துப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து களஞ்சிவீதம் கால், அரை, மண்டலங்கொள்ள இரத்தகாசம் பித்தகாசம் சயகாசம், ஈளை இருமல், கை, கால், கண்ணெரிச்சல் மாந்தங்கள் முதலியவைபோம்.

## முருங்கை நெய்.

முருங்கைப்பூ பலம்-100, தூணிசலம்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி ஆவின் நெய், படிகலந்து சாரணைவேர். திப்பிலி மூலம், செவ்வியம், மாவிலிங்கன்வேர், வகைக்குப் பலம்-1, வெந்நீராலாட்டி ஒன்றுபடுத்தி பதமாய்க்காய்ச்சிவடித்து கொட்டைப்பாக்கெடை இருவேளை மண்டலங்கொள்ள மேகச்சூடு, விந்து நஷ்டம் கெணச்சூடு, பிரமேக முதலியவை போம்.

## நீரடிமுத்து நெய்.

நீரடிமுத்துவிதை-1, கசகசா கார்போகவித்து, தகரைவித்து வெட்பாலைவித்து, பூவரசன்வித்து, வகைக்கு பலம்-5, இவைகளை வெந்நீரால்மைபோலாட்டி எட்டுபடி சலத்தில் கலந்து இரண்டுபடியாகச் சுண்டித்து ஆறியபின் எட்டுபடி சலம்விட்டு மிதக்கும் நெய்யை குன்றியெடை நவநீதத்திற்கலந்து இருவேளை கால்மண்டலங்கொள்ள புடை, தடிப்பு திமிர், வாய்வு, மேக ஊரல் தீரும் பத்தியமில்லை பழையது முதலாகும்.

## கள்ளிக்காக்கை நெய்.

கள்ளிக்காக்கையை தலை, இரகு, குடல், கால் கவிச்சுபோக்கி 8-படி சலம்விட்டு அரைபடியாகச் சுண்டக்காய்ச்சி வடித்தபின்

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| இருசீரகம் | வாய்விளங்கம் |
| கடுகுரோகணி | அரத்தை |
| ஓமம் | கடுக்காய் |
| நிலவாகை | தான்றிக்காய் |
| கொடிவேலி | கழற்சிவேர் |



| | |
|---|---|
| நச்சுவேர் | பிரமிவேர் |
| நற்சங்கன்வேர் | விழுதிவேர் |
| வாதமடக்கிவேர் | தாதுவளைவேர் |

வகைக்குப் பலம்-1.

இவைகளை நருக்கி பாண்டத்திட்டு நாலுபடி ஜலம்விட்டு 1-படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்துமுன்கியாழத்தோடுசேர்த்து ஆவின் நெய் படி கால் கூட்டி பதமாய்க்காய்ச்சி வடித்து சுத்தித்த பூரம் விராகனெடை ஒன்றுகலந்து காலைமாலைஉச்சிக்கரண்டிவீதம் 5-7-நாள் கொள்ளவும் அன்றி ஷை வெந்தகாகத்துக்கு 4-ல் ஒருபங்கு மிளகுதூள் 8-ல் ஒருபங்கு பூண்டுஞ் சேர்த்து அரைத்து நெய், சர்க்கரை தேன்விட்டு லேகிய பதமாய்க்கிண்டி கொட்டைப்பாக்களவு ஷை நெய்யுண்ட பின் உண்ணவும். சச்சுவாதம், காக்கைவலி, திமிர்வாதம், முடக்குவாதம், கீல்வாதம் நீங்கும். கடும்பத்தியம்.

## வவ்வால் நெய்.

பழந்தின்னும் வவ்வாலொன்றை தலை, குடல், ஈரல், சட்டை கவிச்சுபோக்கி, ஐந்துபலம் நெய்யில் வேகவைத்துஅப்புறப்படுத்தி அந்த நெய்யில் மருதம்பட்டைச் சாம்பலில் வைத்தெரித்த நெல்லிகெந்தி விராகனெடை-1 கலந்து கிண்டி 5-நாள் இருபோதுண்ண சயரோகம், பவுத்திரம்போம். இச்சாபத்தியம்.

## மேகம் 21-க்கும் நெய்,

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | சிறுகீரைசமூலம் |
| பொன்னாங்கண்ணிசமூலம் | நன்னாரிசமூலம் |
| முடக்கத்தான்சமூலம் | முல்லைவேர் |
| பாவட்டைவேர் | பார்ப்பாரமுள்ளிவேர் |
| வரப்புலாவேர் | சீந்தில்வேர் |
| வெட்பாலைவேர் | சித்தாமுட்டிவேர் |
| நெய்ச்சட்டிசமூலம் | கோரைக்கிழங்கு |
| வெள்ளறுகுசமூலம் | சங்கன்வேர் |
| தாமரைவேர் | நாகல்வேர் |
| நிலக்கடம்பைசமூலம் | கையாந்தகரைசமூலம் |

வகைக்கு பலம்-10.

இவைகளை நருக்கிப் பாண்டத்திட்டு 12-படி ஜலம்விட்டு 3-படியாக சுண்டக்காய்ச்சி வடித்து,



FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

கற்கடகம்
மதுரம்
ஏலம்
லவங்கம்
கருஞ்சீரகம்
வெட்பாலை
கஸ்தூரிமஞ்சள்
செண்பகப்பூ
ஓமம்
மிளகு
நெல்லிக்காய்
கச்சோலம்
பச்சிலை
கோஷ்டம்
சீரகம்
திப்பிலி
லவங்கப்பட்டை
கார்ப்போகவரிசி
நீரடிமுத்து
நாகேசுரம்
முந்திரி
சுக்கு
கடுக்காய்
தான்றிக்காய்
தக்கோலம்
லவங்கப்பத்திரி

வகைக்குப் பலம் கால்.

சூரணித்து முன் கியாழத்திற்கலந்து நெய் வீசை ஒன்று சேர்த்து பதமாய்க்காய்ச்சி வடித்து ஆறியபின் கோரோசனைவிராகனெடை-1 நாட்டுச்சர்க்கரை பலம்-1 கூட்டி கரண்டிவீதம் அந்திசந்தி மண்டலங்கொள்ள பிரமியம், நீர்ச்சுருக்கு, நீரிழிவு, நீர்க்கட்டு, நீர்க்கடுப்பு, மேகரணந்தீரும். இச்சாபத்தியம்.

### தீராதவெள்ளைக்கு நெய்.

கருவேலம்பட்டைச்சார்
ஒதியம்பட்டைச்சார்
நெல்லிக்காய்ச்சார்
எள்ளெண்ணெய்
நாவல்பட்டைச்சார்
கரும்புச்சார்
நிம்பழச்சார்
ஆவின்நெய்

வகைக்குப் படி முக்கால் ஒன்றுபடுத்தியபின்,

தாளிசப்பத்திரி
கிராம்பு
பேரரத்தை
நிலப்பனைக்கிழங்கு
ஏலம்
ஜாதிக்காய்
மதுரம்
வகைக்கு பலம் முக்கால்

இவைகளைத் தேங்காய்ப்பாலாலாட்டி ஷை மருந்தில் கரைத்து பதமாய்க்காய்ச்சி வடித்து அரைபலம் வீதம்காலை மாலை 9-நாள் கொள்ள நீர்ச்சுருக்குநீரடைப்பு, நீங்காவெள்ளை, சதையடைப்பு பெரும்பாடு, எலும்புருக்கி, பாண்டுமுதலியவைபோம். பத்தியம் [illegible] ஆவின்பால், தயிர், உப்புவறுத்துக்கூட்டவும்.



## ரசாயனங்கள்.

### மதுவூஷ்ண ரசாயனம்.

| | | | |
|---|---|---|---|
| சீந்திற்சர்க்கரை பலம் | 10 | நிலப்பனைக்கிழங்கு பலம் | 2 |
| பிரப்பங்கிழங்கு ,, | 1 | அசுவகெந்தி | I |
| தண்ணிமிட்டான்கிழங்கு | ½ | மிளகு | 3 |
| சுக்கு | 3 | ஏலம் | 3 |
| திப்பிலி | 3 | மதுரம் | 1 |
| அதிவிடயம் விராகனெடை | 5 | சாதிக்காய் விராகனெடை | 5 |
| ஓமம் | 5 | சாதிபத்திரி | 5 |
| முந்திரிகை | 5 | பேரீச்சு | 5 |
| கூகைநீர் | 5 | வெட்டிவேர் | 5 |
| விலாமிச்சு | 5 | கடுகுரோகணி | 5 |
| லவங்கப்பட்டை | 5 | கிராம்பு | 5 |
| சித்தரத்தை | 3 | கொற்றுமல்லிவிதை | 3 |
| சன்னலவங்கப்பட்டை | 3 | தாளிசப்பத்திரி | 3 |
| தூதுவளை | 3 | முப்பிரண்டை | 3 |
| கண்டங்கத்திரி | 3 | தேவதாரம் | 2 |
| தான்றிக்காய் | 2 | சிறுநாகப்பூ | 2 |
| விளங்கம் | 2 | மாசக்காய் | 2 |

இவைகளைச் சூரணித்து மூன்றுபடி நெய்விட்டுக்கலக்கி அடுப்பேற்றி நிம்பழம்-10 அரிந்துபோட்டு பழங்கள் சிவந்த பதத்தில் ஓர் விரகால் காய்ச்சி வடித்து சீனி பலம்-10 தேன் படி அரைநுரை நீக்கிச் சேர்த்து கரண்டிவீதம் இருவேளை மண்டலம் கொள்ள சூலை, ஆறாப்புண், கிரந்தி, நீரிழிவு, நிணமுருக்கி, சலக்கழிச்சல், நீர்ச்செறிப்பு சத்தி, ஓக்காளம். அதிசாரம், தலைமயக்கம் மந்தாரகாசம், சயரோகம், குன்மவலி, குடல்பிரட்டல், நீராம்பல், மூலம், காமலை, மேற்சுவாசம், இருமல், உளமாந்தை பாண்டு, விஷபாகம், பவுத்திர முதலியவை நீங்கும்,

### இஞ்சிரசாயனம்

தோல்நீக்கிய இஞ்சி வீசை அரை, இடித்து பாண்டத்திட்டு இரண்டுபடி ஜலம்வார்த்து அரைபடியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து சீனிபலம் பதினறு சேர்த்து பிசினிபாகமாய்க் காய்ச்சி திரிகடுகு, சீரகம், பத்திரி, தாளிசம், தேவதாரம், ஓமம், பரங்கிப்பட்டை, வகைக்குப் பலம்-1, வறுத்துச் சூரணித்து ஷை

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

பாகில் தூவி சற்றுநேரமெரித்து தேன்படிகால் நுரை நீக்கிவிட்டுக் கிண்டி 5-நிமிஷம் சென்றபின் இரக்கவும் களஞ்சியெடை இருவேளை அரை மண்டலம் கொள்ள புளியேப்பம், பித்தம், சத்தி, வாய்வுகள், வயிற்றிரைச்சல் நீங்கும், தீபனமுண்டாம்.

## வில்வாதிரசாயனம்.

வில்வப்பழம் ஓடு நீக்கியெடுத்த சுளை-25 2-படிசலம்விட்டு அரைபடியாய்ச் சுண்டக்காய்ச்சி எரக்கிப் பிசைந்து வடியிட்டு வேறு பாத்திரத்தில் வைத்து பின் சீனி வீசை அரை நல்லசலம் படி அரை பாண்டத்திட்டு கோழிமுட்டை-2 உடைத்த வெண்கருவிட்டுக்கலக்கி அனல்மூட்டி எரித்து கரடுகட்டியவுடன் மேற்படி நீரோடு சமன்கலந்து மறுபடியு மடுப்பேற்றி பிசினிபாகத்தில் திரிகடுகு, பரங்கிப்பட்டை, கருஞ்சீரகம், திப்பிலிமூலம், லவங்கப்பட்டை, வாலுளுவை, பத்திரி, ஏலம், பூமிசர்க்கரை, காட்டாத்திப்பூ, நற்சீரகம், சீந்தில்சர்க்கரை வகைக்குப் பலம்.1 பொன்போல் வறுத்திடித்துச் சூரணித்து நன்றாய் ரோகிக்கக்கலந்து சூரணஞ் சிவந்த சமயத்தில் எரக்கி குங்குமப்பூ விராகனெடை-3 பொடித்துக் கலந்து கழஞ்சுவீதம் 20-நாள் கொள்ளவும். அன்றி சீந்தில் சர்க்கரையை குங்குமப்பூ கூட்டுஞ் சமயத்தில் சேர்க்கவும். உடல்மெலிவு, வெள்ளை, கனல் நோய் நீங்கும். இச்சாபத்தியம்.

## சம்பீரரசாயனம்.

கொடியெலுமிச்சங்காய்-50 பிழிந்து ரசமெடுத்து, கிளாப்பழரசம் சமன்சேர்த்து, சீனிசர்க்கரை வீசை அரை வேறுபாண்டத்தில் வைத்து சுத்தசலம் படி அரை கோழிமுட்டை வெள்ளைக்கரு-2 கரைத்தடுப்பேற்றி ஏடுகட்டினவுடனெரக்கி வடியிட்டு மறுபாண்டத்தேற்றி பிசினிபதத்தில் ஷை சாறுகளை விட்டுக் கிளரி சிவக்குஞ்சமயத்தில் சாதிக்காய், ஏலம், ஓமம், கிராம்பு, விடயம், சுக்கு, திப்பிலி, வகைக்குப் பலம் கால் வறுத்திடித்து சூரணித்து தூவி பதமாய்க்காய்ச்சி வடித்து களஞ்சிவீதம் அந்திசந்தி அரைமண்டலம்கொள்ள மேகவட்டை, மேகக்கனல் நீங்கும்.



# தயிலங்கள்.

## சாம்பிராணிப்பூ தயிலம்.

பளிங்குசாம்பிராணி பலம்-10 வெள்ளை குங்கிலியம்-4 சூடன்-2 கருவாய்ப்பட்டை-1 இவைகளைப் புளியங்கொட்டைப் பிரமாணம் பொடித்து கருவாய்ப்பட்டையை மாத்திரம் ஆர்க்கத்தூள்செய்து ஒன்றுபடுத்தி வாய்நீண்ட குடுவையின் கழுத்தின்கீழ் தமரிட்டு கொருக்கச்சிக்குழாவை அத்தமரின்வாய்ப் பொருந்தச்செய்து சந்துவாய்ச் சீலமண்கட்டி நிழலுலர்த்தி அடுப்பேற்றி குடுவை வாய்மூட மணல்மூட்டை வைத்து தீபாக்கினியாயெரித்து நன்றாய்ச் சூடுகண்டவுடன் மேற்படிமருந்தில் இரண்டுபிடிபோட்டுமூட குழாவின்வழியால் தயிலமிரங்கும் இவ்வாறு கொஞ்சங் கொஞ்சமாய்ப்போட்டு தயிலமிரக்கிக்கொள்ளவும். இரண்டு குன்றியெடை சூலைக்கு இஞ்சிரசத்திலும், வாய்வுகளுக்கு வெள்ளுள்ளிச்சாற்றிலும், சத்திக்கு வெந்நீரிலும், பேதிக்கு உத்தாமணிச்சாற்றிலும், ஜன்னிக்கு வெள்ளுள்ளித் தயிலத்திலுமுண்ணவும் இச்சாபத்தியம்.

## அண்டத்தயிலம்.

நத்தைச்சூரி, நாயுருவி, குதிரைவாலி, சிறியாநங்கை இவைகளின்வேர்ச் சூரணம் வகைக்குப் பலம் கால் கோழிமுட்டை வெண்கரு-10, பூண்டு பலம்-5 கெந்தி பலம்-1 களர்ச்சிப்பருப்பு பலம்-1 சேர்த்து தயிலமெரக்கி பூரபற்பம் விராகனெடை-I சேர்த்து காசெடை குழந்தைகளுக்கு கொடுக்க அண்டவாதம் மாந்தங்கள்போம்.

## பீனிசத்திற்கு நாசியிலிடத் தயிலம்.

சர்க்கரை, பலம்-1 ஆவின்பால் படி கால் ஆவின் நெய் படி அரைக்கால் குங்குமப்பூ விராகனெடை-1 இவைகளைக்கடுகுபதமாய்க்காய்ச்சி வடித்து இத்தயிலத்திற்குச் சமன் பாதாம் தயிலமும் இதற்கெட்டிலொருபங்கு தனிக்கெந்தகச்சுடர்த் தயிலமுங்கூட்டி இரு நாசிகளிலும் 6-துளிவீதம் கால் மண்டலம் விட சகல பீனிசமும்போம்.

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

### மரிசாதித்தயிலம்.

மிளகு துலாம்-1, 2-படி ஜலம்விட்டு கால்படி ஜலமாகச் சுண்டக்காய்ச்சி வடித்து நல்லெண்ணெய் பால் வகைக்குப் படி இரண்டு கலந்து சீரகம், சாதிக்காய், பத்திரி, நெல்லிப்பருப்பு, அதிவிடயம், கோஷ்டம், மதுரம், ஏலம், கார்போகம், அரத்தை கிராம்பு வகைக்குப் பலம் அரை பொடித்துப்போட்டு பதமாய்க்காய்ச்சி வடித்து மண்டலமூழ்க சிரரோகம் பீனிசம், முகவாதம், நேத்திரவாய்வு, மந்தாரகாசம், செவிநோய், சேத்தும நோய்நீங்கும்.

### நெற்குன்றித்தயிலம்.

| | |
|---|---|
| நொச்சி | கம்மாறுவெற்றிலை |
| தாழை | பனைமட்டை |
| வாழைப்பட்டை | துளசி |
| பாகல் | முல்லை |
| மருள் | கலியாணமுருக்கன் |
| இஞ்சி | எருக்கன்பழுப்பு |
| மஞ்சள் | வகைக்குச் சார் படி கால் |

நல்லெண்ணெய் படி-2 ஆவின்பால் பலம்-16 ஒன்றுபடுத்தி நீர் சுண்டுஞ்சமயத்தில்,

| | |
|---|---|
| விடயம் | தேவதாரி |
| கிராம்பு | கஸ்தூரிமஞ்சள் |
| தேன்மெழுகு | பீதர்ரோகணி |
| அகில் | சித்தரத்தை |
| சந்தனம் | சீரகம் |
| குராசானி | வகைக்குப் பலம் கால் |

பொடித்துப்போட்டு நீரில்லாமல் காய்ச்சி வடித்து ஆறியபின் குங்குமப்பூ, பச்சைகற்பூரம், புழுகுகூட்டி மண்டலம் ஸ்நானஞ்செய்ய நேத்திரவாய்வு, கபாலவாய்வு, தலைவலி, மண்டையிடி, கரவாதம், செவியடைப்பு, பீனிசம், ஜன்னிபாதம் நீங்கும்,

### காதுநோய்களுக்குத் தயிலம்.

உள்ளி, முருங்கைவேர்த்தோல், சோற்றுப்பு, கொம்புகள்ளி நண்டிரைச்சி வகைக்குப் பலம் கால் வேப்பெண்ணெய் பலம் இரண்டு விட்டு காய்ச்சி வடித்து 5-துளிவீதம் செவியிலிட காதுநோய்கள் தீரும்.



### காதுசெவிட்டுக்குத்தயிலம்.

பன்றிமுள்ளை புங்கெண்ணெயிற் காய்ச்சி வடித்து 10-நாள் காதிலிட்டு பஞ்சடைத்து காத்தில்லாவிடத்திலிருக்கவும் இவை சயித்தியரோகங்களினால் தத்காலங் காணும் வியாதிகளுக்காம் பிறவிச்செவிடுக்கன்று.

### அரக்குசந்தனாதித்தயிலம்.

| | | |
|---|---|---|
| கொம்பரக்கு | பலம் 10 | தேவதாரி |
| சந்தனம் | | அகிற்கட்டை |
| பரங்கிச்செக்கை | | பெருங்கிழங்கு |
| கோரைக்கிழங்கு | | தண்ணீர்மிட்டாங்கிழங்கு |
| மெருகன்கிழங்கு | | அமுக்கராக்கிழங்கு |
| மருட்கிழங்கு | | நிலைப்பனைக்கிழங்கு |
| தாமரைக்கிழங்கு | | வெட்டிவேர் |
| நன்னாரிவேர் | | விலாமிச்சு |
| சித்தாமுட்டி | | பேராமுட்டி |
| சீந்தில் | | நெய்ச்சட்டிவேர் |
| அரத்தை | | கூத்தன்குதம்பை |
| விஷ்ணுகரந்தை | | நெல்லி |
| முள்ளி | | வகைக்குப் பலம்-5 |

இவைகளை இடித்து பாண்டத்திட்டு இரு தூணி நீர்விட்டு எட்டொன்றாய்க்காய்ச்சி வடித்து நல்லெண்ணெய் படி-1 மோர் படி-1 பன்னீர்படி கால் இவைகளை ஒன்றுபடுத்தி அடுப்பேற்றி நீர்ச்சுண்டும்பதத்தில்,

| | | |
|---|---|---|
| சதகுப்பி | பலம்-2 | செண்பகப்பூ |
| கோஷ்டம் | | தேவதாரம் |
| சடாமாஞ்சி | | கஸ்தூரிமஞ்சள் |
| கருஞ்சீரகம் | | மதுரம் |
| கிராம்பு | | மஞ்சிட்டி |
| சீரகம் | | சாம்பிராணி |
| சூடன் | | பச்சிலை |
| கிச்சிலி | | கடுகுரோகணி |
| சிறுலவங்கப்பட்டை | | சிறுநாகப்பூ |

வகைக்குப்பலம் கால்

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

பொடித்துப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து பின் சாதிக்காய், கோரோசனம், கிராம்பு வகைக்கு விராகனெடை-1, அத்தயிலத்தில் சேர்த்து ஸ்நானஞ்செய்துவரமுச்சுரம், வாதநோய், பிடரிநோய், ஒருதலைவலி, சூரிய, சந்திரவாதம், கபாலயிடி, முகஜன்னி, கண்சிவப்பு, பீனிசம், ஸ்ரீபாதஜன்னி, சயித்திய ரோகம், காதடைப்பு, ஜலபீனிசம், இமைத்துடிப்பு வாய்க்கோணல் முதலிய கண்டத்திற்குமேற்பட்ட வியாதிகள் நீங்கும்.

## கொடுப்பைத்தயிலம்.

கரிசாலை, கொடுப்பை பொடுதலை வகைக்குச் சார்படி கால் எள்ளெண்ணெய் படி-1. ஒன்று சேர்த்து அடுப்பேற்றி மெழுகு பதத்தில்சந்தனத் தூள்பலம்-2, மாதுளை-1, ஏலம்-2, பீதர் ரோகணி, விரா-1, பொடித்துப்போட்டு பதமாய்க்காய்ச்சி வடித்து ஸ்நானஞ்செய்துவர கண்புகைச்சல், கை, காலெரிச்சல், பித்தச்சூடு, நேத்திரநோய், மேகவட்டை, மேகச்சூடுநீங்கும் ஸ்நானஞ்செய்யும்நாள் புளி, கவிச்சு தள்ளவும்.

## அமிர்தசஞ்சீவித்தயிலம்.

எள்ளெண்ணெய், ஆவின்பால், வகைக்குப்படி-1, சீந்தில்கொடி சார்படி-1, சேர்த்து,

| | |
|---|---|
| வெட்டிவேர் | விலாமிச்சு |
| கோஷ்டம் | மதுரம் |
| முத்தக்காசு | கிராம்பு |
| தண்ணீர்மிட்டாங்கிழங்கு | செண்பகப்பூ |
| ஏலம் | நன்னாரி |
| சந்தனம் | தேவதாரி |

வகைக்குவிராகனெடை-1 வெந்நீராலரைத்துக் கரைத்து அடுப்பேற்றி மெழுகுபதமாய்க் காய்ச்சிவடித்து, சந்தனத்தூள் பலம்-4, புனுகுசட்டம் விரா-1, சேர்த்துஸ்நானஞ்செய்துவர பயித்தியநோய் முறைக்காச்சல் கண்ணில், நீர்வடிதல, காமாலை, பித்த பாண்டு, ஊஷ்ணம், அஸ்திசுரம், எலும்புருக்கி முதலியவை போம்.



## இலைத்தயிலம்,

எள்ளெண்ணெய், ஊமத்தைச்சார், ஆவின்பால், வகைக்குப் படி-1 ல், மிளகு, சாம்பிராணி, நொச்சிக்கொழுந்து, வகைக்குப்பலம்-1, அபினி-விரா-2, இவைகளை ஆவின்பால்விட்டரைத்து கரைத்து மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்து ஸ்நானஞ் செய்ய தலைவலி, பிடரிவலி, ஜன்னி, கண்குத்தல், செவியடைப்பு, வாய்வு, முகவாதஜன்னி, மூர்ச்சை முதலியவைபோம், முழுகு நாள் புளிதள்ளவும்.

## மகாகொடுப்பைத்தயிலம்.

| | |
|---|---|
| எள்ளெண்ணெய் படி 4 | கொடுப்பை |
| நெல்லிக்காய் | குமரி |
| கரிசாலை | தாழை |
| பொடுதலை | சம்பழம் |
| முசுமுசுக்கை | வகைக்குச் சார் படி-1 |

ஆவின்பால், இளநீர், வகைக்குப்படி-1 மேற்படி எண்ணெயோடுகலக்கி ரவியில் ஒருநாள் வைத்து பின்,

| | |
|---|---|
| சந்தனம் | நன்னாரி |
| மிளகு | சதகுப்பி |
| சித்தரத்தை | கடுகுரோகணி |
| பெருங்கிழங்கு | செவ்வல்லி |
| கச்சோலம் | மரமஞ்சள் |
| கோஷ்டம் | கோவைக்கிழங்கு |
| விலாமிச்சு | மதுரம் |

வகைக்குப் பலம்-1.

| | |
|---|---|
| சாதிக்காய் | பத்திரி |
| ஏலம் | லவங்கம் |
| லவங்கப்பத்திரி | வால்மிளகு |

வகைக்குப் பலம் அரை.

இவைகளை ஆவின்பாலா லாட்டி: மேற்படி எண்ணெயிற்கலந்து அடுப்பேற்றிக் கடுகுபதமாய்க் காய்ச்சி வடித்து ஸ்நானஞ்செய்ய சுவாசகாசம், பித்தகாசம், சில்விஷம், நீரிழிவு, நேத்திர நோய்-96, எலும்புருக்கி முதலியவைபோம்.



FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

## தும்பைத்தயிலம்.

நல்லெண்ணெய் பலம்-10 தும்பைமலர் பிடி-2, கருஞ்செம்பைப்பூ பிடி-1 வெற்றிலைக்காம்பு பிடி அரை நசுக்கி எண்ணெயிற்கலக்கி நஞ்சருப்பான்வேர், மிளகு, வசம்பு, வெள்ளுள்ளி, பால்சாம்பிராணி, சுக்கு வகைக்கு விராகனெடை-1 ஒக்கப் பொடித்துப்போட்டு அடுப்பேற்றி கடுகுபதமாய்க் காய்ச்சிவடித்து ஸ்நானஞ்செய்ய சுகஜன்னி, சுரம், வாய்வு, கபாலச்சூடு, முகவாதஜன்னி, பீனிசங்கள்போம். போகம், புளி தள்ளவும்.

## மாவிலிங்கத்தைலம்.

நல்லெண்ணெய் பலம்-5, மாவிலிங்கஇலைச்சார் ஆழாக்கு அரைக்கால் ஒன்றுபடுத்தி அடுப்பேற்றி மஞ்சள், மிளகு, பூண்டு, வகைக்குப் பலம் அரைக்கால் பொடித்துப்போட்டு பூண்டு சிவந்து மிதந்தசமயத்தி லிறக்கி ஸ்நானஞ்செய்ய ஒருதலைநோய் மண்டைக்குத்து, ஜன்னிபாதைநோய்போம்.

## மேற்பூசுந்தயிலங்கள்.

வெள்ளாட்டுப்பாலில் 30-நாழிகை ஊறிய எட்டிக்கொட்டை சீவல் பலம் இரண்டரை நல்லெண்ணெய் படி-2 உரித்த வெள்ளைப்பூண்டுதிரி பலம் இரண்டரை ஆயில்பட்டைத்தூள் பலம் ஒண்ணரை இவைகளைச் சேர்த்து எரித்து மூன்று சரக்குகளுஞ் சிவந்த பக்குவமறிந்து வடித்து மேலுக்கு தடவிப்பிடிக்க கனத்தவாயுவின் கூட்டமெல்லாம் விலகும்.

### வேறு.

கருஞ்செம்பையிலைரசம்,வெள்ளுள்ளிரசம், நலலெண்ணெய் இவைகளைச் சமன்சேர்த்து எரித்து தயிலத்தில் வடித்து வாதநோய்களுக்குப் பூசிப்பிடிக்கவும்,

### வேறு.

சான்முகிராவிரை, புங்கன்விரை, அழிஞ்சில்விரை இவைகளைச் சமன்கொண்டு வேப்பெண்ணெயிற்போட்டு காய்ச்சி தயிலபதத்தில் வடித்து மேற்பூசிப்பிடிக்க வாதநோய்விட்டகலும்.



## சாம்பிராணித்தயிலம்.

ஒருபலம் பளிங்குசாம்பிராணியை சிறு துண்டுகளாக நறுக்கி வாயகண்ட ஒரு சட்டியிலிட்டு தண்ணீர்விட்ட தட்டால் மூடி அடுப்பேற்றி தீபாக்கினியாயெரிக்க தட்டுக்கடியில் தயிலம் பிறக்கும் இதை தலைவலி, சலதோஷத்திற்கு நெற்றியிலும் கன்னங்களிலும்பூசவும்.

## மெழுகுதயிலம்.

சக்கிக்கல் லாகூர் வெள்ளையுப்பு, வகைக்குப் பலம்-2, மணல் ஒன்று கப்புமஞ்சள், ஓமம் வகைக்கு கால், மாஞ்சில் அரைக்கால் இவைகளை கழுத்துநீண்ட பாண்டத்தை படுக்க வாட்டமாய்வைத்து அதற்குள் ஷை மருந்துகளையடைத்து மற்றொரு சிறுதோண்டியை அதன்வாய்க்குப் பொருந்தக்கவிழ்த்து மூடிசந்து வாய் மண்ணரைத்துப் பொதிந்து நூற்கயிற்றினால்கட்டி 7-சீலைசெய்து இவ்விரண்டு குடங்களின் நடுமையங்களில் பெரிய குடத்து மேற்புறம் பெரியதாகவும் சிறிய தோண்டியின் கீழ்புறம் சிறியதாகவும் இரண்டு துவாரங்களிட்டு மேல்துவாரத்தை புகை வெளிப்படாமலிருக்க சிறிய வோட்டினால் மறைத்து அதன்மேல் ஆவின்சாணத்தையப்பிக் குடத்தை ஒஞ்சரித்தபடியே கீழ் முகத்துவாரத்தின் வழியில் ஒரு பாத்திரம் வைத்து மூன்று ஜாமம் நன்றாயெரிக்க புகையுடன் தயிலமிறங்கும் இதை குழந்தையிசிவு, பீஜவீக்கம், வீக்கம், வெட்டுகாயம், பெண்குறித்தளர்ச்சி, ஆண்குறித்துவளல், ஜன்னிபாதம், நரித்தலைவாதம், வாய்வு, கீல்வாதம் முதலியவைகளுக்கு மேற்பூசவும். சோர்வுகளுக்கு பட்டிகட்டவும்.

## சிவனார்வேம்புத்தயிலம்.

சிவனார்வேம்பு வீசை-1, பூவரசன்காய்விதை வீசை-1 அழிஞ்சல்வேர்-1, வாலுளுவையரிசி பலம்-10 இவைகளையிடித்து பாண்டத்திட்டு கெல்லிகெந்தி பலம் இரண்டரை பொடித்துப்போட்டு குழித்தயில மிறக்கி புலிப்பாணி வயித்தியம் (500)த்திற்கூறிய பரங்கிப்பட்டைப்பதங்கத்தில் 10-துளிவீதம் ஷை தயிலம்விட்டு கால்மண்டலம்கொள்ளவும். இவ்வாறு விட்டு விட்டு மூன்று முறைகள் கொள்ள மேகப்புடை, கருங்கிரந்தி,

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

செங்கிரந்தி, கருமேகம், கைக்கருப்பு, நுணுக்கிரந்தி, தந்திமேகம், கொடிய ஆச்சியமேகம், பிரமேகம், மேகச்சொரி மேகத்தடிப்பு, செந்தடிப்பு, மேகரணம் முதலியவைபோம்,

### வேறு சிவனார்வேம்புதயிலம்.

சிவனார்வேம்புச்சூரணம் பலம்-10, வாலுளுவையரிசி சூரணம் பலம்-10, சேர்த்து சிவகரந்தைச்சாற்றாலாட்டி சிறுவில்லைகளாக்கி நிழலுலர்த்தி சோடாபுட்டியிலடைத்து பூப்புடத்தயிலமிறக்கவும் முன்சொன்னதைப்போன்று உண்ணவும். அன்றி இவ்விரண்டு தயிலங்களை கால்வீக்கம், மூட்டுவீக்கம், புடைகளுக்கு மேற்பூசவும்.

### விழித்தயிலம்.

கோரோசனம், சீனம், வெள்ளுள்ளி, கிராம்பு, வகைக்கு விராகனெடை-4 இவைகளை மூன்றுசேர் பொன்னாங்கண்ணிச்சாறும் மூன்றுசேர் முசுமுசுக்கைச்சாறும் விட்டறைத்து உலர்த்திப்பொடித்து தண்ணீரில் அலம்பிய எள்ளு பலம்-4, கூட்டியறைத்து கல்வத்தின் உட்புறவோரத்தில் அப்பி கடு ரவியில் வைக்க அதிலிருந்து எண்ணெய் பிறக்கும் இவைகளை நேத்திரநோய்களுக்கு கலிக்கமிடவும்.

### சகலமேகாதித்தயிலம்.

கன்னாரி, மிளகு, வெள்ளறுகு, நிலப்பனைச்சமூலம், அமுக்கராக்கிழங்கு, முடக்கத்தான், வகைக்குப் பலம்-10, ஆற்றுசலம் படி-4 பாண்டத்திட்டு 2-படியாய்ச் சுண்டக்காய்ச்சி அதில் கரிசலாங்கண்ணிரசம், கற்றாழைச்சார், வகைக்குப் படி-1 ஈருள்ளிச்சார் கரிசாலைச்சார் வகைக்குப் படி-2, சிற்றாமணக்கெண்ணெய் படி-2 ஒக்கச்சேர்த்து பரங்கிச்செக்கை, கடுக்காய், வகைக்குச் சூரணம் சேர்-1, சோம்பு, கருஞ்சீரகம், சீரகம், தாளிசபத்திரி, அதிமதுரம், மிளகு இவைகளின் சூரணம் வகைக்குப் பலம் கால் தூவி பதமாய்க்காய்ச்சி வடித்து வாய்புறஞ் சீலைசெய்து பூமிக்குள் 4-நாள் சமாதிவைத்தெடுத்து பலம்வீதம் 5-நாள்கொடுத்து மறுபத்தியம் 5-நாள்வைத்து 11-வதுநாள் நெய் ஸ்நான



ஞ்செய்விக்கவும் மேகரோகங்கள் ஆறாதரணங்கள் நீங்கும் கடும்பத்தியம் மறுபத்தியத்தில் வறுத்தவுப்பு கூட்டவும்.

### சூதத்தயிலம்.

கம்மாறுவெற்றிலை, பாவட்டையிலை, கொவ்வையிலை, வகைக்குப் பலம்-5 இவைகளைக் கல்லுரலிலிட்டு வாலைரசம் பலம் கால் சேர்த்து பூணில்லாவுலக்கையால் மைபோலச்சாடி வழித்து வேறுபாண்டத்திட்டு ஆமணக்கெண்ணெய் படி-1 சேர்த்து மர அகப்பையால் கலக்கி மூன்றுநாள் ரவிபுடம்வைத்து கால் பலம் விதம் கொடுக்க இரணங்கள், படர்தாமரை, நுணுக்கிரந்தி, கண்டமாலை, கருமேகம், சொரிசிரங்குபோம்.

### வில்வாதித்தயிலம்.

வில்வவேர், விலாமிச்சன், கோரைக்கிழங்கு, சீந்தில் வகைக்குப் பலம்-16 இவைகளைப் பொடித்து (32) படிசலத்தில் சேர்த்து 4-படி கியாழமாகச் சுண்டிக்கவும் அன்றி 4-சேர் கொம்பரக்கைக் கிழிகட்டி ஜலத்தில் தொங்கவிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சியபின் அவ்விரண்டையும் தொந்தித்து நல்லெண்ணெய், ஆவின்பால், வகைக்கு படி 10-கூட்டி திரிகடுகு, திரிபலை, பச்சிலை, பூலா, ஏலம், கருவாய்ப்பட்டை, கிளியூரல் பட்டை, வெள்ளுள்ளி. சந்தனம், கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள், சீரகம், மதுரம், கோஷ்டம், கருஞ்சீரகம் வகைக்குப் பலம்-2, பால்விட்டறைத்துக் கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்து ஸ்நானஞ் செய்யபித்தம், சிரநோய், கிறுகிறுப்பு, சுழலைமூர்ச்சை,முகவாத ஜன்னி, நீங்கும் மாதத்திற் கிரண்டுவிசை செய்யவும்.

## லேகியங்கள்.

### மனோரஞ்சிதமகா கூழ்ப்பாண்டலேகியம்.

| | | | |
|---|---|---|---|
| கலியாணபூசினிச்சார் படி | 6 | ஆவின்பால் படி | 2 |
| செவ்விளநீர் | | வாழைக்கட்டைச்சார் | |
| தண்ணீர்மிட்டான்சார் | | மோர் | |
| பந்நீர் | | வகைச்குப் படி | ½ |

இவைகளை ஒன்றுபடுத்தி சர்க்கரைவீசை-1, கரைத்து வடிகட்டி அடுப்பேற்றி பாகுபதத்தில்

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

கலியாணபூசினிக்காய்வத்தல் பலம்-20

| | |
|---|---|
| அமுக்கராக்கிழங்கு | நிலப்பனைக்கிழங்கு பலம் 13 |
| பரங்கிப்பட்டை | நிலப்பூசினிக்கிழங்கு |
| மாஞ்சில் | தேத்தான்கொட்டை |
| மதுரம் | சோம்பு |
| கொற்றமல்லிவிதை | நெல்லிப்பருப்பு |
| கருவாய்ப்பட்டை | வால்மிளகு |
| உளுந்து | கசகசா |
| கிராம்பு | திராக்ஷ |
| சாலாமிசிரி | சாதிக்காய் |
| | குங்குமப்பூ |
| | வகைக்குப் பலம் 1 |

இவைகளைச் சூரணித்துத்தூவி ஆவின்நெய் பலம்-30, விட்டுக் கிளறி லேகியபதத்திலிரக்கி தேன்-30, நுரைநீக்கிச் சேர்த்து லேகியத்திற்குச்சமன்குல்கந்துகூட்டி இரண்டுகழற்சிகாயளவு இருவேளை மண்டலங்கொள்ள இரத்தபித்தம், மேகஇருமல் கை, கால் எரிவு, காந்தல், பித்தம், பீலிகை, மேகச்சூடுதீரும்.

## பூரணாதிலேகியம்

சடைக்கஞ்சா, பலம் 15, இடித்துப்பாண்டத்திலிட்டு, 16, படி ஜலம்விட்டு எட்டொன்றாய்க் காச்சி வடித்து தேங்காய்ப் பால் செவ்விளநீர் கருப்பஞ்சார், ஆவின்பால், வகைக்குப் படி-1, சேர்த்து ஆவின்நெய், படிவிட்டு ஒன்றுபடுத்தி அடுப்பேற்றி கமலம்போலெரித்து இரண்டுவந்த பதத்தில் நெய்யை வடித்து

| | |
|---|---|
| ஆலம்விதை | நாயுருவிவித்து |
| பருத்திவித்து | ஆவரைவித்து |
| முருங்கைவித்து | பூனைக்காலிவித்து |
| சீந்தில்சர்க்கரை | கிராம்பு |
| ஜாதிக்காய் | ஜாதிபத்திரி |
| ஏலம் | லவங்கம் |
| மிளகு | வால்மிளகு |
| லவங்கப்பத்திரி | கோரோசனை |
| கோஷ்டம் | மாஞ்சில் |
| வாலுளுவை | சிறுநாகப்பூ |
| குங்குமப்பூ | திரிகடுகு |
| திப்பலி | தாளிசம் |
| சீரகம் | வெந்தயம் |



| | |
|---|---|
| நிலப்பனைக்கிழங்கு | பூமிசர்க்கரைக்கிழங்கு |
| வெட்டிவேர் | விலாமிச்சுவேர் |
| முந்திரிகை | பேரீச்சு |
| சாரப்பருப்பு | கசகசா |

இவைகளை வெவ்வேறாய் வருத்திடித்த சூரணம் வகைக்கு கழஞ்சு-1, இரண்டுபடி பனங்கள்ளில் பனைவெல்லம், கல்லவெல்லம், வகைக்குப்பலம்-2, சேர்த்துக்கரைத்து அடுப்பேற்றி பாகுபதத்தில் ஷை சூரணங்களும் சூரணங்களின் எடைகளுக்கு 8-ல் ஒருபங்கு தனிக்கஞ்சாச் சூரணமும் சேர்த்து பாகில்தூவி ஷை கெஞ்சா நெய்படி கால்விட்டு நுரைநீக்கியதேன் படி அரைக்கால் கூட்டி தண்ணீரில் அவித்தெடுத்த கோழிமுட்டையின் மஞ்சட்கரு-5, உதிர்த்துத்தூவி சர்க்கரை பலம்-5 சேர்த்து லேகியபதமாய்க்கிண்டி சுண்டக்காயளவு கொள்ள மூலம், வாய்வு, பித்தம், மாரல்சுரம், அழல், நீங்கும். அன்றிவிந்தூறும்

## கக்குவானுக்குலேகியம்.

சங்கன்வேர், தூதுளைவேர், வெளிச்சப்பிசின், திப்பிலி யரிசி, கருஞ்சீரகம், சென்னகரைப்பழம், ஓமம், கடுக்காய், பூண்டு, வகைக்குப்பலம் கால், ஆவின் பாலாலாட்டி அரைபடி பாலிற்கலந்து கரைத்து வடிகட்டி குழம்பைச் சட்டியிலிட்டு சர்க்கரை பலம்-5, சேர்த்துக்கரைத்து அடுப்பேற்றி பாகுபதத்தில் இரண்டரை பலம் வெண்ணெய் சேர்த்து லேகியமாய்க்கிண்டி சுண்டக்காய் விதம் 7 நாள்கொள்ளவும்.

## கொடிமாதுளைலேகியம்.

மாதுளைச்சார், படி-2 இஞ்சிச்சார், புளியாரைச்சார், செவ்விளநீர், செங்கருப்பஞ்சார், நாரத்தன்சார், ஆவின்பால், வகைக்குப்படி 1-ல், கற்கண்டு சேர்-10, கரைத்து அடுப்பேற்றி, பாகு பதத்தில்

| | | | |
|---|---|---|---|
| பூமிசர்க்கரைக்கிழங்கு பலம் | 4 | நிலப்பனைக்கிழங்கு பலம் | 4 |
| அமுக்கராக்கிழங்கு | 4 | நன்னாரிவேர் | 4 |
| பரங்கிச்செக்கை | 10 | திரிகடுகு | |

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

| | |
|---|---|
| திரிபலை | தாளிசப்பத்திரி |
| சடாமாஞ்சி | ம்துரம் |
| விளங்கம் | கோஷ்டம் |
| தேசாவரம் | வசுவாசி ஓ |
| வால்மிளகு | அக்ராகாரம் |
| அரத்தை | இருசீரகம் |
| லவுங்கப்பத்திரி | லவங்கப்பூ |
| லவுங்கப்பட்டை | செண்பகப்பூ |
| மல்லிகை | வாலுளுவை |
| வெட்பாலையரிசி | சந்தனம் |
| சிறுநாகப்பூ | கடுகுரோகணி |
| விழலரிசி | சாத்திரபேதி |

வகைக்குப் பலம்-2 பொன்வறுப்பாக்கிச் சூரணித்துபாகிற்றூவி

| | | | |
|---|---|---|---|
| குங்குமப்பூ கழஞ்சி | 4 | கோரோசனை கழஞ்சு | 2 |
| முந்திரிகை பலம் | 10 | பேரீச்சுபலம் | 4 |
| குங்கிலியம் | 1 | கஸ்தூரிவிராகனெடைகால் | |

இவைகளை பால்விட் டறைத்துச் சேர்த்து ஒன்ருய்க் கிண்டி நெய்படி $1\frac{1}{2}$ விட்டுப்பதமாக்கி எரக்கி தேன்படி $\frac{3}{4}$ நுரை நீக்கி கூட்டி ஆறியபின் கூகைநீர், சீந்தில்சர்க்கரை வகைக்குப் பலம் 2 மத்தித்து புன்னைக்காயளவு அந்தி சந்தி மண்டலங்கொள்ள சூலை, புண், குன்மம், கிரந்தி, பிரமேகம் நீரிழிவு, கிணமுருக்கி, சத்தி, வாய்நீரூரல், தாபசுரம், கிறுகிறுப்பு, அன்னத்துவேஷம், மூலச்சூடு, மூலக்கிராணி, இருமல், அக்கினிமந்தம், க்ஷயரோகம் மந்தாரகாசம், மேற்சுவாசம் முதலியவை, நீங்கும் அனறிவிந்தூறும்.

## முருங்கைலேகியம்.

தேங்காய்ப்பால் படி முக்கால், பங்நீர்படி அரையில், சர்க்கரை வீசை முக்கால் சேர்த்துக் கரைத்து வடிகட்டி அடுப்பேற்றி பாகுபதத்தில்.

| | | | |
|---|---|---|---|
| முருங்கைப்பிசின் பலம் | 2 | இலவம்பிசின் | 2 |
| சாதிக்காய் | 2 | கசகசா | 2 |
| ஏலம் | 1 | லவங்கப்பட்டை | 1 |
| லவங்கம் | 1 | மராட்டிமொக்கு | 1 |



இவைகளைச் சூரணித்துதூவி நெய்படி முக்கால்விட்டு கோதுமை நொய் படிமுக்கால் சேர்த்து நன்ருய்க் கிளரி எரக்கி தேன்படி கால் நுரைநீக்கிசேர்த்து புன்னைக்காய்வீதம் அந்திசந்திமண்டலம் கொள்ள மேகச்சூடு, சொரி, பித்தச்சூடு, அக்கினிமந்தம், நாபி, ரணம், நீங்கிவிந்தூறும்.

## சிஞ்சிலாதிலேகியம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சம்பழச்சார் | படி | 1 | புளியாரைச்சார் | படி | 1 |
| வெள்ளைச்சாரணைச்சார் | | 1 | கரிசாலைச்சார் | | 1 |
| கொடிமாதுளைச்சார் | | 1 | இஞ்சிச்சார் | | 1 |
| புளியிலை | பலம் | 100 | சிட்டக்கல் | பலம் | 50 |
| இரும்புத்தூள | | 50 | கொடிவேலி | | 25 |
| வெள்ளைச்சாரணைவேர் | | 12 | அகிர்க்கட்டை | | 12 |
| தேவதாரி | | 1 | செவியம் | | 4 |
| திப்பிலிமூலம் | | 4 | வில்வவேர் | | 4 |
| பேராமுட்டிவேர் | | 4 | முன்னைவேர் | | 4 |
| பாதிரிவேர் | | 4 | குமுளன்வேர் | | 4 |
| சூரத்துநிலவாகைவேர் | | 4 | சிறுவழுதலைவேர் | | 4 |
| நெருஞ்சில்வேர் | | 4 | ஆற்றுமுள்ளிவேர் | | 4 |

இவைகளை கல்லுரலில்தாக்கிபொடித்து பாண்டத்திட்டு இருதூணிநீர்விட்டு நாலிலொன்ருய்க் காய்ச்சிவடித்து முன்சாறுகளோடொன்றுப்டுத்தி நல்ல வெல்லம் வீசை ஒன்றேகால் சேர்த்துகறைத்து வடியிட்டு அடுப்பேற்றி பாகுபதத்தில்,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குராசானி | பலம் | 1 | சுக்கு | பலம் | 1 |
| மிளகு | | 1 | திப்பிலி | | 1 |
| சிறுலவங்கப்பட்டை | | 1 | சாதிபத்திரி | | 1 |
| ஏலம் | | 1 | வாய்விளங்கம் | | 1 |

இவைகளைச் சூரணித்துத் தூவி நெய்படி 1-சேர்த்து கிண்டி எரக்கி தேன் படி-1, நுரை நீக்கி கூட்டி தான்றிக்காயளவு லேகியத்தில் மண்டூரச்சிந்தூரம் அல்லது அயச்சிந்தூரம் வைத்து அந்தி சந்தி கால் அரை மண்டலங்கொள்ள பாண்டுரோகங்கள் காமாலை, ஊதுகாமாலை, வீக்கம், மெய்யெரிச்சல், வரட்சி, குன்மம், வெள்ளோக்காளம், சுரோணிதவாய்வு, சூலை, மேற்சுவாசம் வயறுப்பிசம், இறைச்சல் நீங்கும். பத்தியம் வியாதிகளுக்குத் தக்கவைகளாம்.



FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

## முருங்கைப்பூலேகியம்.

முருங்கைப்பூச்சார் படி-2, ஷை பிஞ்சின்சார் சேர்-2, நிலப்பனைக்கிழங்கு, ஆலம்விழுது, வகைக்குப் பலம்-6, ஆவின்பாலாலாட்டி இரண்டுபடி நல்ல ஜலத்திற்கறைத்து அரைபடியாகச் சுண்டித்து மேற்படி சாருடன் சேர்த்து ஆவின்பால் படி-16, தேங்காய்ப்பால் சேர்-4, கூடக்கூட்டி அடுப்பேற்றி 4-ல் ஒன்றுய்ச்சுண்டித்து சர்க்கரை சேர்-4 கறைத்து வடியிட்டு அடுப்பேற்றி கமலாக்கினியாயெரித்து பாகுபதத்தில்,

| | |
|---|---|
| கிராம்பு | தாமரைக்கிழங்கு |
| சாதிக்காய் | வசுவாசி |
| இலுப்பைப்பூ | சிருகாஞ்சோரிவித்து |

வகைக்குப் பலம்-1.

சூரணித்து பாகிற்றூவி 5-சேர் ஆவின்நெய் விட்டுக் கிளரி எரக்கி இரண்டரைசேர் தேன் நுரை நீக்கிவிட்டு பதப்படுத்தி புன்னைக்காய்வீதம் லேகியத்தில் காந்தசிந்தூரம்வைத்து இருவேளை காலமண்டலம் கொள்ள மேகரோகங்கள் நீங்கி விந்தூறுங் கேணியாகும்.

## மகாவில்வகற்பாதிலேகியம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வில்வவேர் | பலம் | 100 | சித்தாமுட்டிவேர் | 50 |
| பேராமுட்டிவேர் | | 50 | நெற்பொரி | 16 |
| சுக்கு | | 16 | ஏலம் | 16 |
| மல்லிகை | | 16 | வெட்டிவேர் | 16 |
| விலாமிச்சு | | 16 | கெந்தம் | 16 |
| நெல்லி | | 16 | முள்ளி | 16 |
| முத்தக்காசு | | 16 | முந்திரிகை | 16 |
| சீரகம் | | 16 | அருகன்வேர் | 16 |
| பருத்திக்கொட்டை | | 16 | முன்னைவேர் | 25 |
| சித்தாமல்லிவேர் | | 25 | சிறுவழுதலைவேர் | 25 |
| ஆற்றுமுள்ளிவேர் | | 25 | பெரியமல்லிவேர் | 25 |

இவைகளை நருக்கிப் பாண்டத்திட்டு 12-மரக்கால் சலம்விட்டு எட்டொன்றுய்க் காய்ச்சி வடித்து சம்பழச்சார், வெற்றிலைச்சார், கொடிமாதுளைச்சார், இஞ்சிச்சார், பச்சைப்பயிர் கியாழம்



வகைக்குப் படி 2-ஒக்கச்சேர்த்துக்கலக்கி வடியிட்டு சர்க்கரை பலம் 100 கறைத்து அடுப்பேற்றிப் பாகுபதத்தில்,

| | |
|---|---|
| திரிகடுகு | திரிபலை |
| ஏலம் | ஆனைத்திப்பிலி |
| திப்பிலிமூலம் | கொடிவேலி |
| சிறுநாகப்பூ | கருவாய்ப்பட்டை |
| சாதிபத்திரி | சித்தரத்தை |
| கொற்றும்மல்லிவிதை | மல்லி |
| தக்கோலம் | கிராம்பு |
| சடாமாஞ்சி | தாளிசப்பத்திரி |
| செவியம் | சீரகம் |

வகைக்குப் பலம்-2.

சூரணித்து பாகிற்றூவி ஆவின்நெய் படி-2 சேர்த்துக்கிண்டி தேன் படி அரை நுரைநீக்கிக் கூட்டி பாக்களவு இருவேளைமண்டலங்கொள்ள விஷபாண்டு, சத்திகுன்மம், இரத்தபித்தம், மாரடைப்பு, கிராணி, சூலையெரிவு, ருத்திரவாய்வு, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, மயக்கம், கிறுகிறுப்பு, சூலை, அன்னத்துவேஷம், க்ஷயம் நீங்கும் மகாகற்பம்.

## காமரூபிலேகியம்.

ஆண் அடைக்கலான் (100) குடல்ரோமம் மூக்கு கால்போக்கி இருதூணி நீர்விட்டு 16-ல் ஒன்றுய்க்காய்ச்சிவடித்து அதில்

| | |
|---|---|
| விளாம்பிசின் | ஆலம்பிசின் |
| ஆவாரைப்பிசின் | கருவேலம்பிசின் |
| முருங்கைப்பிசின் | சாலாம்பிசின் |

வகைக்குப் பலம்-1.

ஊரவைத்துப் பிசைந்து வடியிட்டுப் பிழிந்து,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேங்காய்ப்பால் | படி | 2 | ஆலம்விழுதின்சார் | படி | 1 |
| ஆவின்பால் | | 2 | செவ்விளநீர் | | 1 |
| தென்னம்பால் | | 2 | நெல்லிச்சார் | | 1 |
| மேதைப்பால் | | 1 | வல்லாரைச்சார் | | 1 |
| முருங்கைப்பிலைச்சார் | | 1 | புளியாரைச்சார் | | 1 |
| கசகசாப்பால் | | 1 | பொற்கையான்சார் | | 1 |

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

| | | | |
|---|---|---|---|
| கீழாநெல்லிச்சார் | 1 | தாழைச்சார் | 1 |
| பருத்திவிளைப்பால் | 1 | | |

ஒக்கச்சேர்த்து சக்கரை வீசை-1, கரைத்து வடியிட்டு அடுப்பேற்றி பாகுபதத்தில்,

| | |
|---|---|
| அதிவிடயம் | ஆவாரைசமூலம் |
| கடுக்காய் | மாசக்காய் |
| சாதிக்காய் | தான்றிக்காய் |
| கோஷ்டம் | கிராம்பு |
| ஏலம் | தாளிசப்பத்திரி |
| சாதிபத்திரி | குராசானி |
| வால்மிளகு | மதுரம் |
| திரிகடுகு | கொற்றுமல்லிவிதை |
| முந்திரிகை | ஓமம் |
| சாரப்பருப்பு | பேரீச்சு |
| மாம்பருப்பு | அத்திப்பிஞ்சு |
| வாலுளுவைவித்து | நிலவாகை |
| நத்தைச்சூரிவித்து | ஆலம்வித்து |
| முருங்கைவித்து | நீர்முள்ளிவித்து |
| மாதுளைவித்து | நெரிஞ்சல்வித்து |
| அரசன்வித்து | நாயுருவிவித்து |
| | ஆவாரைவித்து |

வகைக்குப் பலம்-1.

இவைகளைச் சூரணித்து முருங்கைப்பூச்சூரணம் பலம் ஒன்றுகலந்து ஆவின்பாலில் பிட்டாவிவைத்துலர்த்திப் பொடித்துமுன் வெந்தெடுத்த அடைக்கலத்தின் தசையை கல்லுரலில் சாடி மைபோலாட்டி சிறுவில்லைகளாக்கி ரவியில் வைத்துணர்த்தி சூரணித்து ஷை சூரணத்துடன் கலந்து பாகிற்றாவி ஆவின்நெய் படி-2 விட்டுக் கிண்டி எரக்கி குங்குமப்பூ கோரோசனை வகைக்கு பலம்-1, நுரை நீக்கிய தேன் படி-1, சேர்த்து புன்னைக்காயளவு லேகியத்தில் வெள்ளிபற்பம்-2 அரிசியெடைவைத்து மண்டலமுண்ண க்ஷயம், குன்மம், பவுத்திரம், கிராணி, எலும்புருக்கி, அதிசாரம், பாண்டு, நவமூலம், பிரமேகம் முதலியரோகங்கள் நீங்கி ஈரல் குளிர்ந்து விந்துறுங் கேணியாகும். இந்த லேகியத்தால் ஓர்க்கால் மலஞ்சிக்கில் குல்கந்து சமன்சேர்த்துண்ணவும்.



மன்மதலேகியம்.

அரைசேர் இளநீரில் 4-பலம் சர்க்கரை சேர்த்து பாகுபதத்தில்,

| | |
|---|---|
| சாலாமிசிரித்தூள் விராக 4 | வாதுமைப்பிசினிதூள் அரை |
| சாதிக்காய்த்தூள் ஒன்னரை | முருங்கைவித்துதூள் அரை |
| சுத்தித்தகஞ்சா தூள் 2½ | ருமஸ்தகிதூள் அரை |
| குங்குமப்பூதூள் அரை | அரைத்ததிராட்சிப்பழம்-4. |
| லவங்கம்தூள் அரை | ஏலம்தூள் அரை |

சேர்த்துக்கின்டி எரக்கி ஆறியபின் ஒரு விராகனெடை வெள்ளிச்சுண்ணஞ்சேர்க்கவும். இதை சிறுசுண்டையளவு பத்துநாள் அந்திசந்தியுண்ண மேகச்சூடு, மூலச்சூடு, நீர்ச்சுருக்கு, வெள்ளை முதலிய ரோகங்கள் நீங்கி விந்துறும்.

கடுக்காய்லேகியம்.

விளைநீக்கிய கடுக்காய்த்தோல் பலம்-5ம், பாண்டத்திட்டு எட்டுபடி ஜலம்விட்டு ஒருபடியாய்ச் சுண்டித்து வடித்து 5-பலம் சர்க்கரையும் இஞ்சி ரசம் அரைபலமுஞ்சேர்த்து பாகுபதத்தில் திப்பிலியரிசி ஓமம், மிளகு, வகைக்கு பலம் அரை இவைகளைப் பொன்வறுப்பாகச் சூரணித்து தூவி நெய் படி அரைவிட்டு லேகியபதமாய்க் கிண்டி கழற்சியளவுண்ண மலச்சிக்கல் அக்கினிமந்தம், பித்தசீதளம், பித்தவாய்வு நீங்கி தீபனமுண்டாம்,

குண்டலாதிலேகியம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நற்சங்கன்வேர் | பலம் | 100 | கடுகு | பலம் | 20 |
| செவியம் | | 50 | திப்பிலி | | 20 |
| கண்டங்கத்திரிவேர் | | 50 | திப்பிலிமூலம் | | 20 |
| முத்தக்காசு | | 20 | சீந்தில் | | 20 |
| வில்வம் | | 20 | நிலப்பனைவேர் | | 20 |
| சி[illegible]திரமூலம் | | 20 | வெட்டிவேர் | | 20 |
| விலாமிச்சு | | 20 | சித்தாமுட்டி | | 20 |
| கொட்டிக்கிழங்கு | | 20 | அமுக்கராவேர் | | 20 |

இவைகளைப் பொடித்து பாண்டத்திட்டு எட்டுபடி சலம்விட்டு ஒருபடியாய்ச் சுண்டக்காய்ச்சி வடித்து அரைவீசை சர்க்கரை சேர்த்து பாகுபதத்தில்,

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திப்பிலி | பலம் | 2 | சிறுநாகப்பூ | பலம் | 3 |
| கூகைநீர் | | 4 | சீரகம் | | 3 |
| கருஞ்சீரகம் | | 3 | ஏலம் | | 2 |
| லவங்கம் | | 2 | சிறுதேக்கு | | 2 |
| கோரைக்கிழங்கு | | 2 | கற்கடகசிங்கி | | 2 |
| கருணைக்கிழங்கு | | 2 | பெருங்காயம் | | 2 |
| மிளகு | | 10 | சுக்கு | | 5 |

இவைகளைப் பொடித்து தூவி நெய் படி-1 விட்டுக் கிளரி எரக்கி தேன் படி-1 சேர்த்து லேகியமாய்ப்பதப்படுத்தி புன்னைக்காயளவு அந்திசந்தி மண்டலமுண்ண நவமூலம், அட்டகுன்மம் விக்கல், பீனிசங்கள், சுரம், ஜன்னி, தேகக்குத்தல், உப்பிசம், நீரோத்தம், நெஞ்செரிப்பு முதலியவை நீங்கும் பத்தியம் புளி, புகை, கசப்பு, மாங்கிஷம் பாகல், பூசினிக்காய், சேப்பங்கிழங்கு நீக்கி நெய், பால், மிளகு, உப்பு, செங்கீரை, முளைத்தண்டு, வழுதலை, கொடிப்பை, அவரைப்பிஞ்சு, வெள்ளாட்டுக்கண்டம், முருங்கைக்கீரை, முருங்கைப்பிஞ்சு, அத்திக்காய், அரைக்கீரை, முதலியவைசேர்க்கவும்.

## பற்பங்கள்

### மால்தேவிபற்பம்.

ஐந்துபலம் தாளகத்தை ஒருபடி கற்சுண்ணத்தின் மத்தியில் வைத்து பனங்கள்ளினால் தாளித்து கூடைகொண்டு மூடி மறுநாளெடுத்து சுண்ணத்தை நீக்கவும் இவ்வாறு-7-விசை நீற்றியபின் செந்நாயுருவிசமூலஞ்சுட்டசாம்பல் படி இரண்டு வாயகண்டசட்டியிலிட்டு மத்தியில் ஷை தாளகம்வைத்து மேற்சட்டிமூடி மண் சீலைவலுக்கச்செய்து சிறு தீயாய் நாலுஜாமமெரித் தெடுக்கவும்,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7-ங் காச்சல்வெடியுப்பு | பலம் | 10 | சீனம் | பலம் | 1/4 |
| சோற்றுப்பு | | 2 | நாட்டுச்சாரம் | | 1/4 |
| கெந்தகவுப்பு | | 2 | சூடன் | | 1/4 |
| அமுரியுப்பு | | 2 | வீரம் | | 1/4 |
| தேசியுப்பு | | 2 | பூரம் | | 1/4 |
| இந்துப்பு | | 2 | துருசு | | 1/4 |
| கடல்நுரை | | 2 | வெண்காரம் | | 1/4 |
| தசதிட்டைபூநீறு | | கால் | அன்னபேதி | | 1/4 |



இவைகளை ஒன்றுசேர்த்து கல்வத்திற் பொடித்து ஐந்துபங்குசெய்து ஒருபங்கை பனிநீரால் ஜாமம் 1-தேசிச்சாற்றால் ஜாமம்-1 வெள்ளெருக்கன்பாலால் ஜாமம்-1 அமுரியில் ஜாமம்-1 அண்டவெண்கருவால் ஜாமம்-1 ஆட்டி சிறுவில்லைகளாகத் தட்டி ரவியில் நன்கு வெண்கலம்போல் காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி சீலை வலுக்கச்செய்து 5-எருவில் புடந்திர்த்து இதற்கு கால்பங்கு நாட்டுசாரஞ்சேர்த்து பொடித்து பீங்கான் பிளேட்டில்வைத்து பனியில்வைக்க ஜெயநீராகும் இந்தஜெயநீரால் மறுபங்கை யறைத்து சிறுவில்லைகளாக்கி காயவைத்து 5-எருவில் புடமிட்டெடுத்து கால்பங்கு நாட்டுசாரஞ்சேர்த்துப்பொடித்து பனியில்வைக்க ஜெயநீராகும் இவ்வாறு மற்றைய மூன்று பங்குகளையும் முன்சொன்னதைப்போன்று செய்து அச்செயநீரில் வீரம் பூரம், புழுகு, குருவண்டு, வச்சநாபி வகைக்கு காசெடை-1 பொடித்துப்போட்டு முன் சுத்தித்தெரித்த தாளகத்தைக் கொரட்டினால் பிடித்து ஜெயநீரில் தோய்த்து தோய்த்து 21-விசைக்கரிநெருப்பில் சிறுதீயாயும் நீர் வற்றும் பதமாயும் புகையெழாமலும் வாட்டிய தாளகத்தை கல்வத்திட்டு ஒருபலம் வாலரசஞ்சேர்த்து ஷை ஜெயநீரால் 4-ஜாமமாட்டி சிறுவில்லைகளாக்கி தேங்காய்ப்பிரமாணமறைத்த குப்பமேனிச்சமூலத்துள் பொதிந்து காயவைத்து கலியாணப்பூசினிக்காயை துளைத்து உள்ளிருக்கும் விதை சதைகளைப்போக்கி ஷை கவசித்ததாளகத்தை அதனுள்வைத்து துவாரத்தை பூசினிக்காய் துண்டினால் மூடி வாயபுரம் ஏழுசீலை வலுக்கச்செய்து காயவைத்து 50-எருவில் புடமிட்டெடுத்து ஷை ஜெயநீரால் ஒருஜாமமரட்டி பணம்போல சிறு வில்லைகள்செய் துலர்த்தி கலசத்தில் வைத்துமேல்மூடி கவசஞ்செய்து 7-சீலைவலுக்கச்செய்து 25-எருவில்புடம்போட நீறும்இவைப [illegible]க்கும் இந்த பற்பத்தில் அரிசியெடை வியாதிகளுக்குத்தக்க வனுபானங்களில் வைத்துண்ண சகலகாசரோகங்களும் நீங்கும். புத்திமான்களாகிய பண்டிதர்கள் இன்னும் அநேக வியாதிகளுக்கு கையாடுவார்கள்.

### வேறு தாளகபற்பம்.

வளையலுப்பு பலம்-2 அண்டவெண்கருவாலாட்டிசுத்தித்த ஒருபலந் தாளகத்திற்கு கவசித்துலர்த்தி நெருப்பில்புகை யெழா

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

மல் தாளகம் சிவந்தபதத்தில் வாட்டிடவும் அப்படி வாட்டையில் புகைகண்டால் உடனே தண்ணீரில் தோய்த்து துடைத்துப்பார்க்கில் சிவந்திருக்கும் சிவக்காவிடில் முன்போல் செய்யவும் வெடியுப்பு பலம்-20 படிகாரம் பலம்-10 கோதுநீக்கிய பழைய புளி பலம்-5 இம்மூன்றையும் உரலிலிட்டு இருப்புலக்கையால் சாடி சிறுவில்லைகளாக்கி ரவியுலர்த்தி புதுச்சட்டியிலிட்டு வாசலில் அடுப்பேற்றி எரிக்க புகைகிளம்பி பற்றும். பற்றி ஆறியசிட்டத்தைச் சுரண்டி பீங்கானில்போட்டு பனியில்வைக்க ஜெயநீராகும். அப்படி நாடோறும்வைத்துக்கொஞ்சம்கொஞ்சமாயெரங்கிய ஜெயநீரைச்சேர்த்து ஷை தாளகத்தை இந்த ஜெயநீரால் மூன்று ஜாமம் விடா தாட்டி சிறுவில்லைகளாக்கி வாயகண்ட சிறிய குடுவையில் வைத்து கீழ்மேல் கற்சுண்ணாம்பு நீரிட்டுமேல்மூடி சீலைசெய்து குக்கிடபுடமிடவும் இவ்வாறு ஜெயநீராலாட்டி யாட்டி 5-விசை புடமிட்டெடுக்க நீறும் இதனால் க்ஷயரோகங்களும் நீங்கும்.

## இரசபதங்கபற்பம்.

லிங்கம், நாபி, கெந்தகம், மிளகுதூள், சுக்குத்தூள், திப்பிலித்தூள், வசம்புத்தூள், வகைக்ககளஞ்சு 1 இவைகளை கருவூமத்தைச் சாற்றால்இரண்டுஜாமமைபோலாட்டிக் குகைபிடித்துரவியில் வைத்துலர்த்தி வாலைரசம் களஞ்சு-10 ஷை குகையிலிட்டு ஒரு சட்டியில் ஆறுவிரர்க்கடை வயரம் உப்பைக்கொட்டி மத்தியில் குகையைவைத்து சட்டிக்குமேல் மூடி 7-சீலை வலுக்கச் செய்து அடுப்பேற்றி காடாக்கினியாய் 120நாழிகை எரிக்கமேற்சட்டியில் பதங்கித்திருக்கும் அதில்நெல்லெடை வெல்லத்தில் வைந்து விழுங்கச்செய்ய வெண்குட்டம், திமிர், சத்தி, குன்மம் படர்தாமரை, கண்டமாலை, கடிவிஷம், கொறுக்குப்புண், கிரந்தி, சூதகவாய்வு நீங்கும் பத்தியம் வியாதிக்குத் தக்கவைகளாம்.

## உப்புபற்பம்.

இநதுப்பு, வெடியுப்பு, வெண்காரம், சீனம் வகைக்கு பலம்-1 கற்பூரசிலாசத்து பலம் 4- இவைகளை நிம்பழச் சாற்றாலாட்டி சிறுவில்லைகளாக்கி வுலர்த்தி ஓட்டிவிட்டு சீலைசெய்து 10 எருவில் புடம்1-பேய்த்தும்மட்டிச்சாற்றில் புடம் 1-குப்பைமேனிச்



சாற்றில் புடம் ஒன்று பப்பளிச்சாற்றில்புடம் ஒன்று கழற்சிலைச்சாற்றில்புடம்-1 முள்ளங்கிச்சாற்றில்புடம்-1 போடவும். நீறிய பற்பத்தில் பணவெடை தக்க வனுபானங்களில் வைத்துண்ண நீர்ச்சுருக்கு நீரடைப்பு, வாய்வு, பக்கசூலை, சூதகவாய்வு முதலியவைபோம்,

## தங்கபற்பம்.

தங்கம் விராகனெடை ஒன்றை சுப்பல்கனம் கம்பிகளாய்ச் செய்து செங்காவிப்பட்பூசி ஐந்துவிசை உருகாமல் லகுபுடமிட்டெடுத்து செம்முள்ளிவுப்பைத்தடவி ஒருவருடத்திற்கு மேற்பட்ட வெள்ளைக்கோழி அவரைவேரைத் துவைத்து ஷை தங்கக்கம்பிகளைவைத்து வேர்த்தூளினால்வாய்மூடி கருங்கோழி எச்சத்தை உமிழ்நீராலாட்டி வேருக்கு விரல்கனம்பூசி மூன்று சீலை செய்து காட்டெருவில் கெஜபுடமிட நீறும் நீறியபற்பத்தை அனுபானங்களறிந்துகையாட அநேக வியாதிகள் நீங்கி தேககாந்தியுண்டாம்.

## வெள்ளிபற்பம்.

ஒருதுலாம் சொக்கவெள்ளியை மகிழம்பூச்சாற்றில் இருபத்தொருவிசை உருக்கிச்சாய்த்து வேலிச்சாற்றால் நாலுஜாமமாட்டி சிறுவில்லைகளாகச் செய்துலர்த்தி ஓட்டில்வைத்து சீலை செய்து இருபத்தைந்து எருவில் புடம் ஒன்று இவ்வாறு ஐந்து புடமிட்டெடுத்து தசதீட்சைசெய்த பூநீர் கார்செடை ஒன்று சேர்த்து கல்வத்திட்டு மேனிச்சாற்றாலாட்டி 50-எருவில் புடமிட சத்திலாமல் நீறும் நீறிய பற்பத்தை அரிசியெடை நெய், தேன், வெண்ணெய், தேத்தான்லேகியம் இவைகளில் வைத்துண்ண பிரமேகம், வெடிசூலை, வாதநோய் கிறுமிநோய் விந்துநஷ்டம், அழலை, மேககாங்கை முதலியவை நீங்கி காந்தியுண்டாம்.

## வெள்வங்கபற்பம்.

ஒருபலம் வெள்வங்கத்தை இலுப்பெண்ணெயில் 7-விசை உருக்கிச்சாய்த்து அச்சமாய்த் தகடடித்து சன்னமாய்க்கத்தரித்து சூதம் பலம்-1 சேர்த்து தேசிச்சார் மிதக்கவிட்டு 120-நாழிகை ஊறிய பின்னெடுத்து பொடுதலைச்சமூலத்தை அரைத்து



FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

கவசித்து பச்சைப்புளியம்பட்டையின்பேரில் வைத்து மேலுமந்தப்பட்டையால் மூடி அதற்குமேல் புளியம் பொறுக்கைக் கொட்டி 100 எருவில் புடமிட பற்பமாம். ஆகிய பற்பத்தை மூன்று அரிசியெடை தேனிலும் ஆவாரம்பஞ்சாங்கத்திலும் அந்திசந்தி கால்மண்டலமுண்ண நவமூலம், சுவாசம், மேகம், நீர்சுருக்கு, நீங்கும். பத்தியம் வியாதிக்குத்தக்கவைக்கொளாம்.

### வேறு வெள்வங்கபற்பம்.

ஒருபலம் வெள்வங்கத்தை முன்போற் சுத்திசெய்து உருக்கி விரல்கனம் கம்பியாயூற்றி வெள்ளை வாடாமல்லி இலையை யறைத்துககவசஞ்செய்துலர்த்தி பூவரசங்கட்டையைத் துளைத்து அதில் ஷிகவசத்தைவைத்து அம்மரத்துண்டினால் வாய்மூடி 7-சீலை வலுக்கச்செய் துலர்த்தியபின் கட்டை முழுமைக்கும் சீலை வலுக்கச்செய்து 200-வரட்டியில் புடமிட சத்தில்லாமல் நீறும்.

### நாகபற்பம்.

ஐந்துபலம் சிறுநண்ணாகத்தை வேப்பெண்ணையில் 7-விசை உருக்கிச்சாய்த்து சிறுதுண்டுகளாக்கி நாகமல்லியிலையறைத்துக் கவசித்து 7-சீலைசெய்து 10-எருவில் புடம் 3-போட்டு ஆறியபின் ஒருபலம் சூதஞ்சேர்த்து மால்தேவிபற்பத்திற்கூறிய ஜெயநீரால் ஒருஜாமம் மைபோலாட்டி சிறுவில்லைகளாகச்செய்து ரவியுலர்த்தி வில்வயிலையறைத்துக்கவசித்து மண்சீலைகட்டி 100 எருவில் புடமிட சத்தில்லாமல்நீறும் நீறியபற்பத்தில் அரிசியெடை தேத்தான்லேகியத்தில் வைத்துண்ண பிரமேகமும், கருணைக்கிழங்கு லேகியத்தில் மூலரோகங்களும் நீங்கும். இன்னும் அநேக அனுபானங்களிலும் கையாடலாம்.

### கருவங்கபற்பம்.

ஒருபலம் கருவங்கத்தை 21-விசை சம்பீரச்சாற்றிலும் 7-விசை கற்றாழைச்சோற்றிலும் உருக்கிச்சாய்த்து ஓலைகனம் தகடடித்து சிறிய துண்டுகளாகக்கத்தரித்து ஒருசட்டியில் அரைபடி உப்பைக்கொட்டி மத்தியில் ஷிவங்கத்தகட்டைவைத்து

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010



மேலும் உப்பைக்கொட்டி மேற்சட்டிமூடி வாய்புரம் மண்சீலை செய்து கமலாக்கினியாய் 4-ஜாமமெரித்து ஆறியபின்னெடுத்து கல்வத்திட்டு மால்தேவிபற்பத்திற் கூறிய ஜெயநீரால் ஒருஜாமமாட்டி பணம்போல சிறுவில்லைகளாக்கி கடுரவியுலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடி சீலைசெய்து 50-எருவில்புடமிட நீறும் நீறிய பற்பத்தில் நெல்லெடை தக்க வனுபானங்களிலிட குன்மம், வெள்ளை, காந்தல், கடுப்பு, கிரிச்சினம், காமாலை, பாண்டு முதலிய அநேக வியாதிகள் திரும்.

### பற்பக்கூட்டுகள்.

அரைபலம் கெந்தகமும், அரைபலம் கற்சுண்ணாம்பும் பொடித்து ஓட்டிலிட்டு கரிநெருப்பைவைக்க எரிந்து சிட்டமாகும். அச்சிட்டத்தை தேசிச்சாற்றால் ஒருமணிநேரமாட்டி ஒருபலம் சிலாசத்துக்கு அப்பி கோவையிலையறைத்துக் கவசித்து சீலைசெய்துலர்த்தவும்,

ஒருபலம் புள்ளிமான்கொம்பை சிறுதுண்டுகளாக்கி வெள்ளாட்டுநீரில் ஒருநாள் ஊரவைத்துக்கொளுத்தி நற்சங்கன்சாற்றாலாட்டி சிறுவில்லைகளாக்கி ரவியுலர்த்தி கழற்சி இலையையறைத்து கவசித்து சீலைசெய்துலர்த்தவும்.

ஐந்துபலம் முத்துசிப்பிவோட்டைக்கொளுத்தி கற்றாழைச்சாற்றால் ஒருஜாமமாட்டி வில்லைசெய்துலர்த்து பொன்னாங்கண்ணி இலையறைத்துக்கவசித்து மண்சீலைசெய்துலர்த்தவும்.

ஒருபலம் பால்கெருடக்கல்லை சுட்டெடுத்து நிம்பழச்சாற்றாலாட்டி சிறுவில்லைகளாக்கி பொடுதலை இலையையறைத்துக்கவசித்து மண்சீலைசெய்துலர்த்தவும்.

ஆமையோட்டைச் சுட்டெடுத்து வாதமடக்கியின் இலைச்சாற்றாலாட்டி சிறுவில்லைகளாக்கி நச்சு இலையையறைத்துக்கவசித்து மண்சீலைசெய்துலர்த்தவும்.

ஒருபலம் பவழத்தைப்பொடித்து நிம்பழச்சாற்றில் மூன்றுநாள் ஊரவைத்து ஓட்டில்வைத்து சுட்டெடுத்து இலந்தைச்சாற்றாலாட்டி சிறுவில்லைகளாக்கி இலந்தைஇலையையறைத்துக் கவசித்து மண்சீலைசெய்துலர்த்தவும்.

ஐந்துபலம் வெண்காரத்தை வரப்பு நண்டுச்சாற்றாலாட்டி சிறுவில்லைகளாக்கி முள்ளங்கி இலையறைத்துக் கவசித்து மண் சீலைசெய்துலர்த்தவும்.

ஐந்துபலம் படிகாரத்தை குடுவையிலிட்டு கீழ்மேல் வெண்ணைபொதிந்து வாய்புரம் சீலைசெய்துலர்த்தவும்.

சங்கைச் சுட்டெடுத்து சிறுகீரைச்சாற்றாலாட்டி சிறுவில்லைகள்செய்து செம்பருத்தி இலையறைத்துக்கவசித்து மண்சீலை செய்துலர்த்தவும்.

மேற்கூறிய பற்பக்கூட்டென்னும் நவநீற்றினத்தை 75-எருவில் வரிசையாய்வைத்துப்புடம்போட்டு ஆறியபின் வெவ்வேறு கவசம்நீக்கி சிலாசத்துபற்பம் எடை-9, சங்குபற்பம்-8, படிகாரபற்பம்-7, பால்கெருடக்கல்பற்பம்-6, முத்துசிப்பிபற்பம்-5, ஆமையோடுபற்பம்-4, மான்கொம்புபற்பம்-3, வெண்காரபற்பம் 2, பவழபற்பம்-1, எடைகளாக ஒன்றுபடுத்தி தேகத்துக்குத் தக்க அனுபானங்களிலூட்ட மேகஉஷ்ணங்களைச்சார்ந்த வியாதிகள் நீங்கும் அன்றி தனித்தனி பற்பத்தையும் வியாதிகளுக்குத்தக்கவாறு கையாடலாம்.

## சிந்தூரங்கள்.

### அயக்காந்தசிந்தூரம்.

நல்லெண்ணெயிற் பிசரி கொதிக்கவைத்து சம்பீரச்சார் விட்டுக்கழுவியெடுத்த அரப்பொடி பலம்-2, சுத்திசெய்தபலகை காந்தம்பலம்-1, ஒக்கச்சேர்த்து சமன்நாவற்பட்டைக்கூட்டி சட்டியில் வறுத்தெடுத்து நெல்லிகெந்தி பலம்-2, சேர்த்து கற்றாழைச்சோற்றால் 8-ஜாமமாட்டி சிறுவில்லைகளாகச்செய்து வெண்கலம்போல் ரவியுலர்த்தி சட்டியில் வில்லைகளைவைத்து மேற்சட்டிமூடிவாய்புறம்-7, சீலைசெய்து தியாமல் 12-ஜாமமெரித்து ஆறியபின் கல்வத்திட்டு ஆவின் கோமியத்தால் ஒருஜாமமாட்டி 25-எருவில் புடம்-2, பழச்சாற்றால் ஒருஜாமமாட்டி புடம்-2, தேசியின் சிறுநீராலாட்டி புடம்-2, ஆடாதோடைச்சாற்றாலாட்டி புடம்-2, மாதுளம்பூச்சாற்றாலாட்டி புடம்-2, பொற்றலைகையாந்தகரைச்சாற்றாலாட்டி புடம்-10, போட்டெடுக்க சத்தில்லாமல் சிந்தூரமாகும் புடம் 1-க்கு எருவு

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010



50-அறைப்பு வகைக்கு ஒருஜாமம். தக்க அனுபானங்களில் அநேகவியாதிகளுக்குக் கையாடலாம்,

### தாம்பிரச்சிந்தூரம்.

பழையசல்லிக்காசு பலம்-3 ஓலைகனம் தகடதாக்கி கத்தரித்து தேசிச்சிறுநீரில் 8-நாள் ஊரப்போட்டு புளியாரைக்கிழங்குச்சார், பழச்சார், எருமைமோர் வகைக்குப்படி-3-ல் கடுக்காய், கருங்குன்றிவிதை, புளியம்பட்டை, சீனிகாரம், கற்சுண்ணம், நாட்டுச்சாரம், தசதீட்சை பூநீர் வகைக்குப் பலம்-1, பொடித்துப்போட்டுக்கலக்கி அந்நீரை 11-பங்குசெய்து ஒருபங்கில் மேற்படி செம்பை 21-விசை காய்ச்சித் தோய்த்து மீதி 10-பங்கு சாற்றில் ஒவ்வொருபங்கிலும் ஒவ்வொருவிசை உருக்கிச் சாய்த்து தம்படிகனமுள்ள சிறுவில்லைகளாக அடித்து அந்தரத்தாமரை இலையறைத்துக் கவசித்து சீலைசெய்து ரவியுலர்த்தி 50 எருவில் புடம்-1, நல்வேளையிலையறைத்துக் கவசித்து சீலைசெய்துலர்த்தி 100-எருவில் புடம்-1, போட்டு குகையிலிட்டுருகும்போது செம்பெடைக்குஇரண்டிலொருபங்கு சுத்திசெய்த கருவங்கம்சேர்த்து பொடியாய்ராவி கல்வத்திட்டு சூதம், மனோசிலை, அரிதாரம், காபி, லிங்கம், வாளம், அக்ராகாரம், நிர்விஷம் வெண்காரம், கெந்தகம் வகைக்குப் பலம்-1 சேர்த்துக்கற்றாழஞ் சாற்றால் 4-ஜாமமாட்டி வில்லைதட்டிக் காயவைத்து புதுச்சட்டியிலிட்டு மேல்மூடி வாய்புரஞ்சீலைசெய்து அடுப்பேற்றி முத்தீயாய் 8-ஜாமம் விடாதெரித்து ஆறியபின் கல்வத்திட்டு நாலிலொருபங்கு கெந்திசேர்த்து பொற்றலைக்கையான் சாற்றால் ஒருஜாமமாட்டி வில்லைதட்டிக்காயவைத்து சட்டியிலிட்டு மேல்மூடி சீலைசெய்து அடுப்பேற்றி மூனுஜாமம் முத்தீயாயெரிக்கவும். இவ்வாறு கையாந்தகரைச்சாற்றாலாட்டி ஐந்துவிசையெரிக்கவும் ஒவ்வொருவிசைக்கும் 4-ல் ஒன்று கெந்திசேர்த்தறைத்தெரிக்க சிந்தூரமாம், சிந்தூரத்தில் அரிசியெடை திரேகத்திற்குத்தக்க அனுபானங்களில் வைத்துண்ண அட்டகுன்மம், காமாலை, சூலை, மகோதரம், சுரம், கிரந்தி, வெடிசூலை, வண்டுகடி, பெரும்பாடு, இரத்தகாசம் சேத்துமகாசமுதலியவைபோம்.

## பஞ்சலோகச்சிந்தூரம்,

வெண்காரம், பலம்-2, அயப்பொடி-1, துருசு-2, கெந்தி கால், வீரம் கால், கற்பூரம் கால் இவைகளைச் சுத்தித்து கல்வத்திட்டுப் பொடித்து விளக்கெண்ணெயாற் பிசிறி மூசையிலிட்டுருக்க களங்காகும் மேற்படி களங்கு விராகனெடை-10, சுத்தித்ததங்கம்-1, காந்தம்-5. கருவங்கம்-1, செம்பு-1, நாகம் அரை ஒன்றுபடுத்தி மூசையிலிட்டுருக்ககளங்காகும் இந்தக்களங்கை அரத்தால்ராவி சூதம்-5, கெந்தி-5, அரிதாரம்-1, பேதி 5, மனோசிலை-1, சேர்த்து பொற்றலைக்கையான் சாற்றால் நாலுஜாமமாட்டி உணர்த்திப்பொடித்து காசிகுப்பியில் கழுத்தளவு நெருங்கக்கொட்டி பலப்பக்கல்மூடி முழுமைக்கும் உளுந்தரைத்துச் சீலைசெய்துலர்த்தி அதற்குமேல் 7-மண்சீலை வலுக்கச்செய்து குண்டுசட்டியில் 4-விரர்க்கடை மெல்லிய மணலிட்டு குப்பியைவைத்து குப்பி கழுத்தளவு மணல்கொட்டி மேற்சட்டிமூடி சீலைவலுக்கச்செய்து கமலாக்கினியாய் 4-ஜாமம் எரிக்க சிவக்கும். சிவக்காவிட்டால் மறுவிசை மேற்படிசாற்றால் அறைத்தெறிக்க சிந்தூரமாம். இதில் நெல்லெடை அனுபானங்களறிந்துண்ண வாய்வு, சூலை, குன்மம், ஈளை, காசம், சன்னி, சுரம், மகோதரம், பீலிகை, பிளவை, லிங்கப்புற்று, யோனிப்புற்று, கிரந்தி, கருமேகம், வெடிசூலை குறைநோய் முதலியவை நீங்கும்.

## இலிங்கச்சிந்தூரம்.

அப்பிரேகத்தகட்டை இரண்டு கல்லுகளின்மேல் வைத்து அதன்மேல் சுத்தி செய்த ஒரு பலம் லிங்கங்கட்டியைவைத்து அடியில் விளக்காலெரித்து சூடேருஞ் சமயத்தில் மால்தேவி பற்பத்திற் கூறிய ஜெயநீரால் ஒருமணிநேரம் சுருக்கேற்றவும். கருவங்கம் பலம்-கால் சூதம் பலம் - கால். சேர்த்து சம்பழச்சாற்றாலாட்டி ஷை லிங்கத்திற் கங்கிபூட்டி உலர்த்தி அதன்மேல் கால்பலம் அரப்பொடியை சம்பழச்சாற்றாலரைத்துப் பூசி உலர்த்தி கெந்தி, மனோசிலை, அரிதாரம், கெவுரி, துருசு, கரியுப்பு வகைக்குப்பலம்கால், சேர்த்துப்பொடித்து அயக்கிண்ணத்தில் அரைவாசிபொடியிட்டு ஷைகவசித்த லிங்கம்வைத்து அண்டவெண்கருவிட்டு மேலும்பாதி பொடிகொட்டி மேலும் அயக்கிண்ணத்தால் மூடி வாய்புரம் உளுந்துமாவு கவசித்து மண்சீலைசெய்துலர்த்தி முழச்சவுக்கக்குழிவெட்டி நன்றாய்மெழுகி உலர்ந்தபின் குழிக்குப்பாதி உமியிட்டு மேலுங்கருமணலையிட்டுஷை அயக்கின்னத்தைவைத்து மேலுங் கருமணலால்மூடி அதர்க்குமேல் உமிகொட்டி தீயிட்டாறியபின் வாங்கச் சிந்தூரமாம். இதில் அரிசியெடை அநுபானமறிந்துண்ண ஜன்னி, காக்கைவலி, இசிவு, சுரம், நாவரட்சியாகிய இன்னும்அநேகவியாதிகட்குகையாடலாம்.



## அப்பிரேகச்சிந்தூரம்.

கிருஷ்ண அப்பிரேக்பலம் 10-அஸ்வத்தின் அமுரியும் ஆவின் கோமியமுங் கலந்து ஷை அப்பிரேக்கை ஒலக்கடத்தில் சிவக்கக் காய்ச்சி காச்சி அமுரியில் தூளாகும்வரையில் தோய்த்துக்கொண்டே யிருக்கவும். தூளானபின் கறைத்து மேல்தண்ணீரையிறுத்து அடியில்நிற்கும் வெண்ணெயை எடுத்துலர்த்தி வாழைக்கட்டையை வெட்டியெடுததசலத்தால் 4-ஜாமமறைத்து வில்லைதட்டி கெஜபுடம்போடவும். இவ்வாறு அறைத் தறைத்து 10-புடம்போட்டெடுக்கச் சிந்தூரமாகும். வெடியுப்பு பலம்-10 படிகாரம் பலம் 10-ஒன்றுசேர்த்துப்பொடித்து வாலையிலிட்டு திராவகமெரக்கி ஷைசிந்தூரம் பலம் 1-வாலைரசம் பலம் 1-ஜக்கில் போட்டு அடுப்பேற்றி திராவகத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு இரும்பினால் கிளரிக்கொண்டே யிருக்கவும் திராவகம் ஆனவுடன் நீர்ழுக்கும் வரைக்கும் வறுத்தெடுத்து கெந்திஒருபலம்சேர்த்து ஷை திராவகத்தால் ஒருசாமமாட்டி சிறு வில்லைகளாயுலர்த்தி ஒட்டிவிட்டுச்சீலைசெய்து 20 எருவில் புடமிடச்சிந்தூரமாம். இதில்நெல்லெடை அனுபானமறிந்துண்ண மேகரோகங்கள் நீங்கும். அன்றி சீந்திற்சருக்கரையிலாவது இந்திரபுஷ்பாதிகிருதத்திலாவது வைத்துண்ண பகுமூத்திரம், தந்திமேகம், நீரிழிவு முதலியவைபோம்.

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

### வீரச்சிந்தூரம்.

சுத்தித்தவீரம்பலம் 1-அப்பிரேகத்தகட்டில்வைத்து விளக்கிட்டெரித்து தகட்டிற்கு சூடேருஞ்சமயத்தில் மால்தேவிபற்பத்தில்கூறிய ஜெயநீரால் ஒருமணிநேரஞ் சுருக்கிட்டெடுத்து கெந்திபலம் 2-பேதிபலம்-அரைசேர்த்துக்கல்வத்திட்டு ஷை ஜெயநீரால் ஒருமணிநேர மாட்டி வில்லைசெய் துலர்த்தி ஓட்டிவிட்டுச் சீலைசெய்து ஒருசாண்சவுக்கக்குழியில் உமிபுடமிட்டு மறுபடியும் ஜெயநீராலாட்டி உமிபுடம்ரெண்டுபோட்டெடுத்து மேற்படி ஜெயநீராலாட்டி யுலர்த்திப்பொடித்துக் காசிக்குப்பியிலிட்டு 4-ஜாமம் கமலாக்கினியாயெரிக்கச் சிந்தூரமாம். ஆகியசிந்தூரத்தில் எள்ளெடை அனுபானமறிந்தூட்ட சகல ஜன்னியும் நீங்கும்.

### சூதச்சிந்தூரம்.

வாலைரசம் பலம் 4-கல்வத்திட்டு மால்தேவி பற்பத்திற் கூறியஜெயநீரால் இரண்டுமணிநேரமாட்டி கெந்திபலம் 1-ஓட்டில் வைத்து உருகும்போது மேற்படி ரசத்தைவிட்டு வருக்கவும். புதுச்செங்கல்லை பாக்குபோலுடைத்துப் பாண்டத்திட்டு உப்புசேர்1-ம் மேற்படி மருந்துபலம் 2-ம்கொட்டிக்கலந்து மேற்சட்டிமூடி சந்துவாய் 7-சீலைவலுக்கச்செய்து அடுப்பேற்றிக் கமலம் காடாக்கினியாய் 4-ஜாமம் எரிக்க மேற்சட்டியில் பற்பம் நிற்கும். மேற்படி பற்பம் பலம் 2-கெந்திகால், அரிதாரம் அரைக்கால் சேர்த்து மேற்படி ஜெயநீரால் ஒருமணிநேரம் ஆட்டி உலர்த்திப்பொடித்துக் குப்பிக்கேற்றி வாய்மூடி சீலைசெய்து சட்டியில் 4 விரற்கடை மணல்பரப்பி குப்பியைவைத்துக்கழுத்தளவுமணலைக் கொட்டி மேற்சட்டிமூடி மண்சீலைசெய்து முன்போலெரித்து வாங்கச் சிந்தூரமாம். அந்தச் சிந்தூரம்பலம் அரை முன்மிகுதியான பற்பம்பலம் 2, கெந்திபலம் கால், அரிதாரம் அரைக்கால் கல்வத்திட்டு மேற்படி ஜெயநீரால் மணிநேரமரைத்துலர்த்திப்பொடித்துக்குப்பிக்கேற்றி முன்மாதிரி யெரிக்கவும் இவ்வாறு ஜெயநீராலரைத்தரைத்து 10-விசை வாலுகையிலேற்றி எரித்து ஆகிய சிந்தூரத்தில் பலம்-2, செந்தி பலம்-1, காரம்

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010



பலம் கால், மனோசிலை அரைக்கால், லிங்கம் அரைக்கால் சேர்த்துக்கல்வத்திட்டுச் செம்பருத்திப்பூச்சாற்றால் 4-ஜாமம், பூவரசன்பூச்சாற்றால் 4-ஜாமம், தக்காளிப்பழச்சாற்றால் 2-ஜாமம், பொற்றலைக்கையான்சாற்றால் 2 - ஜாமமாட்டியபின் தங்கரேக் விராகனெடை 1-சேர்த்து ஷை ஜெயநீரால் நன்றாயாட்டி உலர்த்திப்பொடித்துக்குப்பிக்கேற்றி தீபாக்கினியாய் 4-ஜாமம், கமலாக்கினியாய் 4-ஜாமம், காடாக்கினியாய் 8-ஜாமம் எரித்தெடுக்கச் சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தில் அரிசியெடை அனுபானமறிந்துண்ண சகல வியாதிகளும் நீங்கி நரை, திரை, மாறும். தேகம் வலுக்கும். பண்டிதர்களின்து எவ்விதபரிட்சைக்கும் நிற்கும்.

## பாலரோக நிவாரணங்கள்.

### பாலசஞ்சீவிமாத்திரை.

நாபி, நிர்விஷம், தாரம், சூதம், கெந்தி, வெண்காரம், சுக்கு, தான்றிக்காய், மிளகு, திப்பிலி, வகைக்கு கழஞ்சு-1, வாளம் கழஞ்சு-5, இவைகளைச் சுத்திசெய்து கல்வத்திட்டுக் குப்பைமேனிச்சாற்றால் ஜாமம்-4, கற்பூரவள்ளிச்சாற்றால் ஜாமம்-4, மூக்குரட்டைச்சாற்றால் ஜாமம்-4, ஆடாதோடைச்சாற்றால் ஜாமம் 4, கருந்துளசிச்சாற்றால் ஜாமம்-4, பொடுதலைச்சாற்றால் ஜாமம்-4, பொற்றலைக்கையான்சாற்றால் ஜாமம்-4, ஆட்டி சிறுபயறு பிரமாணங் குளிகைசெய்யவும்.

### சாந்தசந்திரோதயமாத்திரை.

சுத்தித்தபூரம்-1, வெண்காரம்-1, மஞ்சள்-3, இவைகளைத்தேசிச்சாற்றால் 4-ஜாமம் விடாதரைத்து பச்சைபயர் பிரமாணம் குளிகைசெய்யவும். இரும்புபட்டால் கருத்துவிடும்.

### சாம்பிராணிப்பூமாத்திரை.

சாம்பிராணிப்பூ பலம் அரை, லிங்கம் விராகனெடை-1 பூரம் கால மிளகுத்தூள் பலம் அரை, திப்பிலி பலம் கால், இவைகளை மிளகுகியாழத்தாலாட்டிப் பச்சைபயர்ப் பிரமாணங் குளிகைகட்டவும்.

### கெணமாந்தம், வாந்தி, வயறுப்பிசத்திற்கு,

வசம்பு, கருப்புப்பட்டு, வட்டத்திருப்பி, மிளகு, மயிலிரகு, நிலவேம்பு வகைக்கு விராகனெடை-1, இவைகளைச் சாம்பலா

க்கி மாதுளங்கொழுந்து, நிலவிளாயிலை, செம்பருத்தியிலை, வகைக்கு பிடி-1, சிவக்க வறுத்துக் கண்டுபரங்கி, சுக்கு, சன்னராஷ்டகம், அக்ராகாரம், கோஷ்டம், மதுரம், ஏலக்காய்விதை நறுக்கிப் பாண்டத்திட்டு அரைபடி ஜலம்விட்டு அரையாழாக்காய்ச்சுண்டித்து அதில் சாந்தசந்திரோதயக்குளிகை இழைத்துக் கொடுக்கவும்.

மாந்தம், ஈளை, இருமலுக்கு,

கோரைக்கிழங்கு, கண்டுபரங்கி, மஞ்சள், திப்பிலிமூலம், சரக்கொன்றைவேர்ப்பட்டை, மரமஞ்சள், மதுரம், ஏலக்காய்வகைக்கு கழஞ்சு-1, இவைகளையிடித்துப் பாண்டத்திட்டு அரைபடி ஜலம்விட்டு இராமுழுதும் ஊறவைத்து மறுநாள் அடுப்பேற்றி சிறுதீயிட்டு ஆழாக்காகச் சுண்டித்து கணமாந்த வில்வாதி குளிகை இழைத்து இருவேளை கொடுக்கவும்.

முக்குமாந்தம், அள்ளுமாந்தத்திற்கு

சிறுக அறிந்த நுணாயிலை பிடி-1. மிளகு விராகனெடை-1, கடுகு-1, சட்டியிலிட்டு கருகவறுத்துக்கருஞ்சீரகம், ஓமம்வகைக்கு விராகனெடை-1, வெடிக்கவிட்டு சன்னராஷ்டகம், சுக்கு வகைக்கு விராகனெடை-1, நறுக்கிப்போட்டு அரைபடி ஜலம்விட்டு ஆழாக்காக சுண்டித்துப்பாலசஞ்சீவிமாத்திரை இழைத்துக்கொடுக்கவும்.

சுரம், கணம், நாவரட்சி, ஜலதோஷத்திற்கு,

கோஷ்டம், சுக்கு, மதுரம், இலுப்பைப்பூ, கோரைக்கிழங்கு, நன்னாரி, வெட்டிவேர், சீந்தில், சந்தனத்தூள், ஏலக்காய் வகைக்கு கழஞ்சு-2 இவைகளை யிடித்துபாண்டத்திட்டு அரைபடி ஜலம்விட்டு 4-மணிநேரம் ஊறவைத்து சிறுதீயிட்டு ஆழாக்காகச் சுண்டித்து கஸ்தூரிகுளிகை இழைத்துக்கொடுக்கவும்.

அழலை, கணம், மூர்ச்சை, வாந்திக்கு

பேய்ப்புடல், சீந்தில், வில்வவோடு, கோரைக்கிழங்கு, சிற்றாமுட்டி, சுக்கு, திப்பிலி, கொற்றுமல்லிவிதை வகைக்குகழஞ்சு 2-கடுகுரோகணி, கடுக்காய்த்தோல், வகைக்குகழஞ்சு-4, இவைகளை நறுக்கி 5-பங்கிட்டு ஒருபங்கை பாண்டமேற்றி அரைபடி

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010



ஜலம் வார்த்து அரை ஆழாக்காய்ச் சுண்டித்துக்கணமாந்தவில்வாதி குளிகையிழைத்துக் கொடுக்கவும் இப்படி5-நாளீயவும்.

சலதோஷம், வயறுப்பிசம், சொரிக்கு.

சுக்கு, சன்னராஷ்டகம், செவியம், கண்டுபரங்கி, சித்திரமூலவேர்ப்பட்டை வகைக்குகழஞ்சு 2-இவைகளையிடித்துப்பாண்டத்திட்டு அரைபடி ஜலம்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி கோரோசனைக் குளிகை இழைத்துக்கொடுக்கவும்.

கனல்சுரம், உட்சூடு, தேகவரட்சிக்கு.

சதாபலை, ஓமம், சுக்கு, லவங்கம், சன்னராஷ்டகம், வகைக்கு விராகனெடை 1-இவைகளை அறைத்துப்பாவைபர் பாலாலாட்டிப் பிழிந்து சாந்தசந்திரோதயக்குளிகை இழைத்தீயவும்

வயறுப்பிசம், வீக்கம், மேற்சுவாசத்திற்கு.

ஆமணக்கிலை, சோற்றுப்பு, வகைக்குபிடி, 1- சட்டியிலிட்டு சாம்பலாக்கி கொட்டிப்போட்டு, அச்சட்டியில் கருஞ்சீரகம், ஓமம், வகைக்கு விராக-அரை வெடிக்கவிட்டு சுக்கு, சன்னராஷ்டகம், வகைக்கு விராக-1-தட்டிப்போட்டு அரைபடி ஜலம்விட்டு 8-ல் ஒன்றாய்க்காய்ச்சி சாம்பிராணிப்பூமாத்திரை இழைத்துக்கொடுககவும்.

ஊதுகணம், ஆமகணம், சுழிகணத்துக்கு.

கண்டங்கத்திரி, கண்டுபரங்கி, கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சொரி, சுக்கு, சீந்திற்கொடி, நில்க்குமுளன்வேர், நிலவேம்பு, திப்பிலி, பற்பாடகம், கோஷ்டம்வகைக்கு கழஞ்சு 2, 5-பங்கிட்டு ஒருபங்கை சட்டியிற்போட்டு அரைபடி ஜலம்வார்த்து இராமுழுதும் ஊறவைத்து அடுப்பேற்றி சிறுதீயாய் நாலிலொன்றாகக் காய்ச்சிப் பாலசஞ்சீவிமாத்திரை 5-நாளீயவும்.

விக்கல், வாய்நீரொழுகல், சத்திக்கு.

மிளகு, கழஞ்சு, 2-சாம்பலாக்கி சீரகங்கழஞ்சு 2-வெடிக்கவிட்டு புதினாஇலைபிடி 2-சிவக்கவறுத்து ஏலக்காய்விதை, சுக்கு வகைக்குகழஞ்சு 2-நறுக்கிப்போட்டுத் தண்ணீர்படி கால்வார்த்து 4-ல் ஒன்றாய்க்காய்ச்சி கணமாந்த வில்வாதிக்குளிகைஇழைத்துக் கொடுக்கவும்.

இருமல், கபம், இறைப்புக்கு

சுண்டுபரங்கி, கோஷ்டம், சன்னராஷ்டகம், இவைகளைப் பொடித்துக்கால்படி ஜலம்வார்த்து அரை ஆழாக்காகச்சுண்டித்து குங்குமப்பூ குளிகை இழைத்துக்கொடுக்கவும்.

அள்ளுமாந்தம், ஊதுகணம், காமாலைக்கு

மிளகு, கழஞ்சு, 1-சாம்பலாக்கி, கருஞ்சீரகம் கழஞ்சு, 1 வெடிக்கவிட்டு கரசலாங்கண்ணி கழஞ்சு 5- கீழ்க்காய் நெல்லி கழஞ்ச 5-சிவக்கவறுத்து கடுக்காய்த்தோல், சன்னராஷ்டகம், சுக்கு வகைக்கு கழஞ்சு 1-நறுக்கிப்போட்டுக் கால்படி ஜலம் வார்த்து அரை ஆழாக்காகச் சுண்டித்துப் பாலசஞ்சீவி மாத்திரி இழைத்துக்கொடுக்கவும்.

கோழைக்கட்டு, செவ்வாப்பு, வயிற்றூதலுக்கு.

கிளாவேர்ப்பட்டை, சுக்கு, மூங்கிலிலை, சித்திரமூலவேர்ப்பட்டை, திப்பிலி மூலம், தொழுயிலை, வகைக்குகழஞ்சு 2-இவைகளையிடித்துப்பாண்டத்திட்டு அரைபடி சலம்வார்த்து அரை ஆழாக்காகச் சுண்டித்துக் கணசஞ்சீவிகுளிகை இழைத்துக்கொடுக்கவும்.

இளம்பிள்ளைவாய்வு, அண்டவாய்வு, ஊதுகாமாலைக்கு.

நற்சீரகம், சடாமாஞ்சில், வசம்பு, காடிசோர், மிளகு வகைக்கு விரானெடை 1-சாம்பலாக்கி கருஞ்சீரகம், ஓமம், வகை விரா அரை, வெடிக்கவிட்டுப் பூண்டுதிரி 20-சிவக்கவறுத்து திப்பிலி, கோஷ்டம், சுக்கு, ஆமையோடு, நறுக்கிப்போட்டு அரைபடிசலம்விட்டு அரைஆழாக்காகச்சுண்டித்து வாலைசஞ்சீவி மாத்திரை இழைத்தியவும்.

மலச்சிக்கல், அரோசகம், நாவரட்சி பாலுண்ணுமைக்கு.

சூரத்துநிலவாகை, பலம்கால் ஆல்பகோரா மதுரம், ரோசாமொக்கு கடுக்காய்ப்பிஞ்சு வகைக்கு கழஞ்சு அரை இவைகளை இடித்துப்போட்டு கால்படி சலம்வார்த்து இராமுழுதும் ஊரவைத்து அடுப்பேற்றி நாலிலொன்ருய்க் காய்ச்சி வடித்து திராக்ஷி உப்பு தோலா அரைக்கால் சேர்த்து சாந்த சந்திரோதயக் குளிகை இழைத்துண்ணவும்.



ஆமபேதி, ஊஷ்ணபேதி, சீதரத்தக்கழிச்சலுக்கு.

லவங்கப்பட்டை, லவங்கம், கடுக்காய்ப் பிஞ்சு கசகசா வகைக்கு பலம் கால் பொடித்துப் பாண்டத்திட்டுக் கால்படி சலம் வார்த்து 8-ல்- ஒன்ருய்க் காய்ச்சிகட்டுவாதி குளிகை இழைத்தியவும்.

இதில் கூறிய ஒவ்வொரு மாத்திரைகளும் இன்னூலில் சொல்லப்பட் டிருக்கின்றது.

## பொது அவுடதங்கள்.

ஊஷ்ணபேதிக்கு மருந்து

வெந்தயம், மாதுளம்பழத்தோல் மாம்பருப்பு, சுண்டக்காவற்றல் கரிவேப்பிலை, நெல்லி, முள்ளி, உலர்ந்தமிளகாய், ஓமம், வகைக்கு விரா- 2- இவைகளை வெவ்வேறு எள்ளெண்ணெயில் வறுத்து ஒன்றுசேர்த்துப்பொடித்துக்கொழும்புசெய்து சாதத்தில் போட்டுண்ணவும், அல்லது சூரணித்து திரிகடிப் பிரமாணம் வெண்ணெயிற்குழைத்து நாள் ஒன்றுக்கு மூன்றுவிசையுண்ணவும்,

இறைச்சல் பேதிக்குமருந்து

வெள்ளுள்ளி ஒன்றை அறைத்தமஞ்சளால் கவசமிட்டு கும்பியில்வைத்து வெள்ளுள்ளிக்கருகாப்பதத்தி லெடுத்துக் கவசம் நீக்கி திரிகளை உண்ணவும்.

கிராணிக்கழிச்சலுக்கு மருந்து.

சுக்குத்தூள், விராகனெடை 1-அபின் குன்றி யெடை 4 சிறுநாகப்பூ விரா கால், ஜாதிக்காய் விரா-அரைக்கால் இவைகளை தேவையான வெல்லஞ்சேர்த்தறைத்து சிறுசுண்டை வீதம் நாளொன்றுக்கு 2-3-விசை உண்ணவும்.

புடைகளுக்கு மருந்து.

சூடன்பலம் 5-பால்சாம்பிராணி பலம் 5-கொட்டாங்கச்சி 50- சித்திரமூலம் பலம் 5-இவைகளைப்பொடித்துக் குழித்தயிலமெரக்கி பூசப் படைநீங்கும். தலைவலிக்குமேற்பூசவும்.

பீஜவீக்கம் கால்விக்கத்திற்கு மருந்து.

கழற்சிக்கொடிவேரின் பட்டை பலம் 20,6-படி ஜலத்தில் இடித்துப்போட்டு ஒருபடியாய்ச் சுண்டக்காய்ச்சிவடித்து அதி

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

ல் ஷை கொடியின் கொழுந்துபலம்5-கெச்சக்காய்பருப்புபலம் 2 அறைத்துக் கலந்து சிற்றுமணக்கெண்ணெய் வீசை ஒன்றும்சேர்த்து வால்மிளகு, பரங்கிச்செக்கை லவங்கப்பட்டை, ஏலம், வகைக்குபலம், அரை, இவைகளை இளவறுப்புவறுத்து சூரணித்து சேர்த்து கழர்ச்சி விரகால் எரித்து பதத்தில் வடித்து பூரம் பலம் அரை சுத்தித்தவாளம் பலம் அரை ஷை தயிலத்தால்நெகவறைத்துக்கலந்து 3- 5-7-நாளைக்கு காலையில் ஒரு விராகனெடை எண்ணெய் சாப்பிட பீஜவீக்கம், வாய்வு, கால்வீக்கம், குடல் வாய்வு முதலியவை நீங்கும் பத்தியம் சுட்டபுளி வறுத்த உப்புகூட்டவும்.

கண்மங்கல் நீர்வடிதல், எரிச்சலுக்குமருந்து.

பொன்னுங்கண்ணிச்சாற்றில் துல்லியசீலையைநனைத்து உலர்த்தி மறுபடியுந்தோய்த்து 7-விசை உலர்த்தவும். இவ்வண்ணம் எவ்வேழுவிசை வெவ்வேறு கரசலாங்கண்ணிச் சாற்றிலும், தொழுயிலைச்சாற்றிலும் உணர்த்தி திரிசெய்து சித்தாமணக்கெண்ணெய்விட்டுக் கொளுத்தி செப்புத்தாம்பாளத்தில் மைபிடித்து அச்செப்புத் தாம்பாளத்தில் பசும்வெண்ணெய் போட்டு கடுக்காய்ப்பருப்பு பலம்கால்; சேர்த்து வேறுசெப்புப்பாத்திரத்தால் பருப்புமசிய ஒருநாள்முழுமையும் அறைத்து பச்சைக்கற்பூரம் விராகனெடை கால், கூட்டி ஒருமணிநேரம் நேகவறைத்து வெள்ளி அல்லது கிளாஸ் சிமிழில்வைத்து கண்களுக்குத் தீட்டவும்.

வெள்ளோக்காளம் சத்திக்குமருந்து.

தலைமயிர், மயிலிரகு. சமன்கொண்டு சுண்ணும்பில் தேய்த்து சட்டியிலிட்டு ஒரு படி நிலவிளாஇலைபோட்டு செவ்வையாய்க் கருக்கி திப்பிலித்தூள் சமன்சேர்த்து இஞ்சிச்சார், நிம்பழ்ச்சார், தேன்கலந்து நாளொன்றுக்கு 20-விசைநாக்கில் தடவிக்கொண்டுவரவும் தலைமயிரும் மயிலிரகும் நன்றாய்ச்சாம்பலாக்கவும்.

மலபந்தத்துக்கு மருந்து.

கொத்துமல்லிவிதை, நெல்லிவற்றல்,சூரத்துநிலவாகை பிஞ்சிக்கடுக்காய், சூரத்துகருப்புப்பு சுக்கு, சோம்பு இவைகளின் சூரணம் வகைக்கு விராகனெடை 1-சூரத்துகடுக்காய்ச்சூரணம் 2-வாதாம்கெப் 2-தேன் 6, நிம்பழச்சார் 1-இவைகளை ஒன்று சேர்த்து நாளொன்றுக்கு அரை விராகனெடை காலை மாலையுண்ணவும்



தந்தரோகமருந்து

பந்தர்புகையிலையும், பனவெட்டும் சமன்கொண்டிடித்துவில்லைதட்டி புடம்போட்டெடுக்கவும். அக்ராகாரம் லவங்கப்பட்டை, தடுக்காய்த்தோல்,மாசக்காய்,தான்றிக்காய், சுக்கு இவைகளைச் சமன்கொண்டு சுட்டு சாம்பலாக்கவும். காரியத்தை உருக்கி துருசுப்பொடியை கிராசமீய்ந்து எருக்கன்வேரால் தேய்த்துக்கொண்டிருக்க பவுடராகும் அப்பவுடரை மெல்லிய சீலையில் வஸ்திரகாயஞ் செய்யவும். ஷை புகையிலைச் சாம்பல் பலம் 5 கற்கவகைச்சாம்பல்பலம் 5-காரியப்பவுடர் பலம் இரண்டரை ஒன்று சேர்த்துப் பல் தேய்க்கவும்,

தாதுவிர்த்திக்கு மருந்து.

நல்லெண்ணெய் சேர்-1 தேன்சேர்-1 உலர்ந்தகர்ச்சூரக்காய்சேர்-1 இவைகளைப்பாண்டத்திட்டு மேல்மூடி அடுப்பின் கீழ் 4-விரர்க்கடைப் பிரமாணம் ஆழத்தில் புதைத்துவைத்து அதன்பேரில் சமைத்துவரவும் 6-நாள் ஆனபின்பு பானையை பக்குவமாயெடுத்து அதிலுள்ள கர்ச்சூர்க்காயை நாளொன்றுக்கு பாதி கற்சூர்க்காயை உண்ண வெகுநாளையபேதித்தனம் நீங்கிவீரிய விர்த்தியுண்டாம் பத்தியம் வாயுபதார்த்தம் தள்ளவும்.

காதுோணம், மூக்கரையானுக்கு மருந்து.

நெல்விகெந்தியை சுத்தித்து ஆவின்வெண்ணெயாலாட்டி துல்லிய சீலையிலாட்டி திரிசெய்து கதிர்கம்பியில்கோர்த்துக் கொளுத்த தயிலமிரங்கும் ஆகிய தயிலத்தை காதுரொணம், மூக்கரையன், மேகரொண முதலியவைகளுக்கு மேற்பூசவும்.

கொறுக்கு புண்களுக்குமருந்து.

இலிங்கம், மிருதார்சிங்கி, கெந்தகம், வெள்ளை குங்கிலியம், ரசகற்பூரம், ரசபற்பம், கடுக்காய், மாசக்காய் இவைகளைச் சமன்கொண்டு பங்நீரால் ஒருஜாமமாட்டி யுலர்த்தியபின் ஆவின் வெண்ணெயாலாட்டிப் புண்களுக்குப் பூசவும்.

FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010

சோகை பித்தபாண்டுக்கு மருந்து

பொற்றலைக்கையாந்தகரை பலம்-10, மிளகு இரண்டரை பூண்டு இரண்டரை இவைகளை வெள்ளாட்டுக்கோமியத்தால ரைத்துக்குழம்பாக்கி நல்லெண்ணெய்விட்டு இளரி எடுத்து கழற்சிவிதம் காலைமாலை 10-நாளுண்ணவும். பத்தியம் சுட்டபுளி வறுத்தவுப்புகூட்டவும்.

இதுவரையில் முடிவுபெற்ற அவுடதங்கள்போக மற்றைய அவுடதங்கள், நாடிகள், மரணக்குறிப்புகள், தேக விலக்கணங்கள், மருந்துகளி னளவுகள், ஜெயநீர்கள், திநீர்கள், எத்தகைய சோதனைகளுக்கும் வலிய பாஷாணங்களின் கட்டினங்கள், நீற்றினங்கள் முதலியவைகளை இரண்டாம் பாகத்திற் சொல்லுவோமாக.

அன்றி ரசகெந்தக பாஷாணங்கள் சேர்ந்த அவுடதங்களின் திடமறிந்து வேறு வியாதிகளை விளைவிக்காவண்ணம் சர்வ ஜாக்கிரதையுடனே கையாடுவீர்களாக.

இன்னு மின்னூலிலுள்ள அவுடதங்களின் சுத்திகள், சத்துருமித்துருக்கள், முறிவுகள், தேக விலக்கணங்கள், நாடிகள் முதலிய சிற்சில சந்தேகங்களை யானியற்றிய (இராஜவயித்தியபோதினி) என்னும் புத்தகத்தில் விரிவாய்க் காணப்படும். அவை இன்னூலுக்குத் துணைக்கருவியெனக்கொள்க.

கலிவிருத்தம்.

பாருமேபதி னெண்பர்கள்தாடீனக்
கோரிப்பணிடி தங் கொண்டகூட்டத்தோர்க்கு
மாறில்லா தவயித்தி யாநுகூலம்
கூறினேன்முதற் பாகம்முற்றுமுற்றே.

வயித்தியாநுகூலஜீவரட்சணி
முதற் பாகம்,
முற்றிற்று.

1829 / Nov 2010
http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கணம்
FREE E Books - www.thamizham.net - TM 1829 / Nov 2010